# பொருளியல் நோக்கு

ஏப்ரல்
1987







## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்








மக்கள் வங்கி வெளியீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

VANI.

மலர் 13 இதழ் 1 ஏப்ரல் 1987

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## நிரல்கள்

நிகழ்ச்சிக்குறிப்பேடு 2 பெப்./மார்ச் 1987

ஏற்றுமதி 19 தைத்த உடைகள் – ஆசிய வளர்முக நாடுகளின் பிரச்சினைகள்

வர்த்தகம் 22 இலங்கை- இந்திய வர்த்தகம்

வியாபார விளைபொருள்கள் 25 சர்வதேச ஒப்பந்தம் இல்லை

வளர்முக உலகம் 26 புகையிலை தரும் பரிசு

## விசேஷ அறிக்கை

3 சிறு ஏற்றுமதிப்பயிர்கள்

ரீ. பீ. சப்பிதீன் 4 இலங்கையில் வாசனைத் திரவியக் கைத்தொழில்

ஜே. என். எஸ். டயஸ் 15 உலகச் சந்தையும் வாசனைத் திரவியங்களின் சந்தைப் படுத்தலும்

## சிறப்புக்கட்டுரை

லெஸ்லி ஜோஸப் 28 இலங்கையின் கடற்றொழில் அபிவிருத்தியில் 200 மைல் தனிப் பொருளாதார வலயத்தின் பங்கு

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதன் சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## அடுத்த இதழில்

- ★ இலங்கையின் பொருளாதாரம் – கடந்த பத்தாண்டு சாதனைகள், பிரச்சினைகள், வாய்ப்புக்கள்
- ★ தனியார் மயப்படுத்தலில் பிரிட்டன் முன்னணி வகிக்கிறது; வளர்முக நாடுகளின் நிலை
- ★ வர்த்தக வங்கிகளும் விவசாயக்கடனும்
- ★ இலங்கையில் இருதய நோய்களும் அதற்கான காரணங்களும்

அட்டைப்படம்
படப்பிடிப்பு: ஸ்டான்லி கிரிவந்தள
வடிவமைப்பு: சரத் விஜேரத்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

## பெப்ரவரி

12. 1985 ல் 99200 கோடி டொலர்களாக இருந்த வளர்முக உலக நாடுகளின் மொத்த வெளிநாட்டுக் கடன் 1986 ல் 103,500 கோடி டொலர் மட்டத்தை அடைந்ததாக உலக வங்கி வெளியீடொன்று மதிப்பிட்டுள்ளது. கடன் கொடுத்தோருக்கு வளர்முக நாடுகள் 1986ல் 2900 கோடி டொலர்களை தேறிய மாற்றுக்களாக அனுப்பியுள்ளன.

14. மொனராகலை மாவட்டத்திலுள்ள முத்துகண்டிய நீர்த்தேக்கச் செய்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை நிறைவேற்றுவதற்காக 5 கோடி ரூபா நன்கொடையை வழங்குவதற்கு அவுஸ்திரேலியா இணங்கியிருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 4,500 ஏக்கர் நிலம் பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்படுவதுடன், மொனராகலை தேர்தல் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்படும் 600 விவசாய குடும்பங்கள் முத்துகண்டியவில் குடியமர்த்தப்படுவர்.

15. சர்வதேச நாணய நிதியத்தின் நட்டஈட்டு நிதிப்படுத்தல் அமைப்புச்சீராக்கல் வசதியிலிருந்து சுமார் 22.4 கோடி எஸ். டி. ஆர். களை எடுத்துப் பாவிப்பதற்கு நிதியம் பங்களாதேஷுக்கு அனுமதி வழங்கியது. பங்களாதேஷ் அரசாங்கம் 1984/85 காலப்பிரிவிலிருந்து சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் விரிவான சீராக்கல் செய்திட்டமொன்றை அமுல் செய்து வருகின்றது. புதிய வருவாய் நடைமுறைகள், வர்த்தக, கைத்தொழில் கொள்கைகளை தாராளமயமாக்கல், செலாவணி வீதச் சீராக்கங்கள் என்பன இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கிய நடவடிக்கைகளாகும்.

19. இலங்கை அணுசக்தி அதிகார சபைக்கு ஆய்வுகூடமொன்றை அமைப்பது தொடர்பான கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரின் முன்மொழிவுக்கு அரசாங்கம் கொள்கையளவில் அங்கீகாரமளித்தது. இந்த ஆய்வு கூடம் அமைக்கப்படும் வரையில் அணுசக்தி அதிகார சபை தொடர்ந்தும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வசதிகளைப் பயன்படுத்தி வரும். இவ்வாய்வு கூடம் அமைப்பது தொடர்பான ஒரு விரிவான நிகழ்ச்சித்திட்ட அறிக்கை வெகு விரைவில் அபிவிருத்திக் காரியதரிசிகள் கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

24. சுத்திகரிக்கப்படாத எண்ணெயின் சுதந்திரச் சந்தை விலைகள் 1986 டிசம்பர் நடுப்பகுதிக்குப்பின்னர் முதன் முறையாக பீப்பா ஒன்று 16 அ. டொலருக்கு குறைவாக வீழ்ச்சியடைந்தது. சில அங்கத்துவ நாடுகள் தமது உற்பத்திக் கோட்டாவுக்கும் அதிகமான தொகையை ஏற்கனவே மிகை வழங்கல் நிலவும் சந்தைகளுக்கு வழங்கி வருவதனுல், உலக விலைகளை 18 அ. டொலர்களுக்குள் வைத்திருப்பதற்கான ஒபெக்கின் முயற்சிகள் தோல்வியடைந்திருப்பதாக சில எண்ணெய் நிபுணர்கள் தெரிவித்தனர்.

27. தென்னமெரிக்காவில் மகத்தான சோயா அவரை அறுவடையொன்று எதிர்பார்க்கப்படுவதால் சர்வதேச சந்தையில் மரக்கறி எண்ணெய்களுக்கான விலை வாய்ப்புக்கள் அவ்வளவு பிரகாசமாக தென்படவில்லை என உலக வங்கியின் வினை பொருள் அறிக்கையொன்று தெரிவித்தது.

## மார்ச்

1. கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 1987 மார்ச்சில் 632.5 புள்ளிகளாக இருந்ததென குடிசன கணிப்பீட்டு, புள்ளிவிவர திணைக்களம் அறிவித்தது. இது 1987 பெப்ரவரியில் 632.1 புள்ளிகளாகவும், 1986 மார்ச்சில் 595.3 புள்ளிகளாகவும் இருந்தது.

2. டச்சு அரசாங்கத்தினுல் நிதிப்படுத்தப்படும் நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்கென 32 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

5. இலங்கை இத்தாலிய முதலீட்டுப்பாதுகாப்பு ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதற்கான ஜனுதிபதியின் முன்மொழிவுக்கு அரசாங்க அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் பாராளுமன்ற அங்கீகாரத்துக்கென ஒரு தீர்மானத்தைச் சமர்ப்பிப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டது. இவ்வொப்பந்தம் முதலீட்டு வசதிகளை பரஸ்பரம் உயர்த்துவதற்கும், பாதுகாப்பதற்கும் ஏற்பாடு செய்கின்றது; மேலும், இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்துக்கு உள்ளேயும், வெளியேயும் இத்தாலிய முதலீட்டுச் செய்திட்டங்களை ஊக்குவிப்பதற்கும் மிக நெருங்கிய பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கும் வகை செய்கிறது.

10. இரத்தினபுரி மாவட்டத்தில் 1987 ல் சிறிய நீர்ப்பாசனச் செய்திட்டங்களை நிர்மாணிப்பதற்கும், பராமரிப்பதற்குமென அரசாங்கம் 800,000 ரூபாவை விடுவித்துள்ளது. உத்தியோகபூர்வ அறிவித்தலொன்றின் பிரகாரம், ஒவ்வொரு தேர்தற்றொகுதியும் 100,000 ரூபாவை பெறும்.


15. குடிநீர் வழங்கல் செய்திட்டமொன்றுக்கும், ஆதாரக்கற்கைகள் நிறுவனத்துக்கான விருத்தி வேலைகளுக்குமென ஜப்பான் இலங்கைக்கு 28.1 கோடி ரூபாவை வழங்குமென கொழும்பிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகராலயம் அறிவித்தது. நீர் வழங்கல் செய்திட்டத்துக்கான 12.2 கோடி ரூபா கொண்டை உதிரிப்பாகங்களுக்கும், தோண்டும் உபகரணங்களைப் பெறுவதற்கும் பயன்படுத்தப்படும். இத்தோண்டும் உபகரணங்கள் உலர் வலயத்தில் 2,400 ஆழ் கிணறுகளை தோண்டியுள்ளதுடன், இதன் மூலம் சுமார் 400,000 மக்கள் சுத்தமான குடி நீரைப் பெறக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

27 மோசமான குளிர்கால நிலைமைகளினுல் ருஷ்யாவின் தானிய இறக்குமதிகள் 1986/87 ல் 30 லட்சம் தொன்களினுல் அதிகரித்துள்ளதென மதிப்பிடப்படுகிறது.

31. உணவு, விவசாய தாபனத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவசர கால நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் இருபத்தைந்து ஆபிரிக்க நாடுகள் தமது விவசாயத்தினை நிலைநிறுத்துவதற்கென 18.9 கோடி டொலர் உதவியைப் பெற்றதுடன், மேலும 6.4 கோடி டொலர் உதவிக்கான உத்தரவாதத்தையும் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறு ஏற்றுமதிப்பயிர்கள்

பதினாறாம் நூற்றாண்டுவரையில் இலங்கையின் பொருளாதாரத்தில் வர்த்தகமானது ஒரு பிராந்திய நடவடிக்கையாகவே இருந்து வந்துள்ளது. ஆனால், போர்த்துக்கீயரின் வருகையுடன் அது ஒரு புதிய பரிமாணத்தைப் பெறலாயிற்று. பொருளாதாரத்தின் மீது திணிக்கப்பட்ட இம் மாற்றங்கள் அதனையடுத்து வந்த டச்சுக்காரர் காலத்திலும் தொடர்ந்து இடம் பெற்றன. டச்சுக்காரர்கள் ஓர் ஏற்றுமதி வர்த்தகத்தைக் கட்டியெழுப்பியதுடன் அதன் பொருட்டு கறுவா, மிளகு, கோப்பி, பாக்கு போன்றவற்றின் பயிர்ச் செய்கையை இங்கு ஊக்குவித்தனர். மேற்கத்தைய வல்லரசுகளின் ஆதிக்கத்துக்கு முற்பட்ட காலத்தில் இந்நாட்டில் நிலவிவந்த பிழைப்பூதிய பயிர்ச் செய்கைப் பொருளாதாரத்துக்குப்பதிலாக பெருந்தோட்ட அமைப்பில் தங்கிய பொருளாதார அமைப்பொன்றை இங்கு ஸ்தாபிக்கும் முயற்சியை பிரிட்டிசார் நிறைவு செய்து வைத்தனர். அவர்கள் கோப்பியில் ஆரம்பித்து தேயிலைக்கு மாறினர். இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமான போது தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றை உள்ளடக்கிய பெருந்தோட்ட முயற்சிகளின் மீது எமது பொருளாதாரம் தங்கியிருக்கும் நிலை நன்கு ஸ்தாபிதமாகியிருந்தது. எனினும், நாட்டு மக்களில் பெருந்தொகையானோர் தமது சீவனோபாயத்துக்காக இன்னமும் பாரம்பரிய விவசாயத்துறையிலேயே தங்கியிருந்தனர். தனிப்பட்ட விவசாயிகள் தமது வருமானத்தைக் கூட்டிக் கொள்வதற்காக நெற் செய்கைக்கு மேலதிகமாக ஏனைய பயிர்களையும் பயிரிட்டு வந்தனர். இக்காணிகள் சிறு அளவுத்துண்டுகளாகவும், துண்டிடப் பட்டவையாகவும் இருந்தன. பல சிறு ஏற்றுமதிப் பயிர்கள் இக்காணித் துண்டுகளிலேயே பயிரிடப்பட்டன. 1960 கள் வரையில் மூன்று பிரதான ஏற்றுமதிப் பயிர்களினதும் விலைகள் பொதுவாக ஸ்திரமாக நிலைத்திருந்ததனால் அவை வெளிநாட்டுச் செலாவணி மிகைகளைத் தோற்றுவித்தன. 1950 களின் நடுப்பகுதியிலிருந்து இந்நிலைமை மாறத் தொடங்கியதுடன், எமது பொருளாதாரம், தொடர்ந்தும் இம்மூன்று ஏற்றுமதிப் பயிர்களிலும் தங்கியிருக்க முடியாது என்ற உண்மை உணரப்படத் தொடங்கியது. இறக்குமதிகளை கணிசமான அளவில் குறைப்பதற்கும் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கும் 1960 களிலிருந்து முயற்சிகள் மேற்மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதற்கான தெளிவான விடை ஏற்றுமதிப் பயிர்களை பன்முகப்படுத்துவதாகும். கோப்பி, கோக்கோ, ஏலம், மிளகு, கராம்பு, சாதிபத்திரி, பப்பாசிப்பால் போன்ற சிறு ஏற்றுமதிப் பயிர்களில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டு வந்தது.

இப்பிரச்சினை ஆராயப்பட்டு விளங்கிக் கொள்ளப்பட்டதுடன் இத்துறையை அபிவிருத்தி செய்வதற்கென பல, திட்டங்கள் தீட்டப்பட்டன. 'குறுங்கால அமுலாக்கல் செய்திட்டம் 1962 - 64' பின்வருமாறு கருத்துத் தெரிவித்திருந்தது. ''ஏற்றுமதிக்கென புதிய பயிர்களை விருத்தி செய்ய வேண்டிய அதே வேளையில், எமது பிரதான பணி தற்போதிருந்து வரும் சிறு ஏற்றுமதிப் பயிர்களை விஸ்தரித்து நிலை நிறுத்துவதாகவே இருக்கிறது. ......... பதனிடல், சந்தைப்படுத்தல் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படுமாயின் ஏலம், கராம்பு, மிளகு போன்ற பயிர்களுக்கு கணிசமான அளவிலான சந்தை விஸ்தரிப்பு நிகழ வாய்ப்பிருக்கிறது.''

பத்தாண்டுகளுக்குப் பின்னர் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களின் தேவை கடுமையாக உணரப்பட்ட ஒரு காலகட்டத்தில் தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டுத்திட்டம் (1972 - 1976) ஏற்றுமதிச் சம்பாத்தியங்களுக்கு சிறு ஏற்றுமதிப்பயிர்கள் செய்ய வேண்டிய பங்களிப்பின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியது. புதுநடுகை, மீள் நடுகை, புனருத்தாரணம், பசளையிடல் போன்றவற்றுக்கூடாக 165,000 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கிறது எனத்திட்டம் சுட்டிக்காட்டியிருந்தது.

( 8 ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் வாசனைத்திரவியக் கைத்தொழில்

ரீ. பீ. சப்பிடீன்
(விவசாய பீடம், பேராதனை பல்கலைக் கழகம்)

## அறிமுகம்


அடிப்படையில் ஒரு விவசாய நாடான இலங்கை அதன் வெளி நாட்டுச் செலாவணிக்கு விவாசயத் துறையையே நம்பியிருக்கிறது. தேயிலை, இறப்பர், தென்னை ஆகியனவே பாரம்பரியமாக இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியத்திற்குரிய பிரதான பயிர்களாக இருந்துவந்துள்ளன. அவை தொடர்ந்தும் இந்நிலையினை வகிக்கின்றன. எவ்வாருயினும், அண்மைக்காலத்தில் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் இலங்கையின் விவசாய ஏற்றுமதியில் முக்கிய பங்கை வகித்து வருகின்றன.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் என்பவை சிறு அளவில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யப்படும் பாரம்பரிய வியாபாரப் பொருட்களாகும். அவற்றில் வாசனைத் திரவியங்கள், கொக்கோ, கோப்பி, பாக்கு, கடுகு, எள்ளு, ஔடத எண்ணெய்கள், முந்திரிக் கொட்டை என்பன அடங்கும். தேயிலை, இறப்பர், தென்னை ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் இவ்வாசனைத் திரவியங்கள் சிறிய அளவில் ஏற்றுமதி செய்யப்படினும் இவை இலங்கையின் பாரம்பரிய விவசாய ஏற்றுமதிப் பொருட்களில் முக்கிய இடம் வகிக்கின்றன. அண்மைக் காலத்தில் இவை இலங்கையின் பொருளாதாரத்தில் அதிமுக்கிய இடத்தை வகித்துள்ளன. 1980 ல் இலங்கையின் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியத்தில் 5 சதவீதத்திற்கு வாசனைத் திரவியங்கள் காரணமாக அமைந்தன. 1976 முதல் 1985 வரையான காலப்பகுதியில் சிறு ஏற்றுமதிப் பொருட்களிலிருந்து கிடைத்த ஏற்றுமதிச் சம்பாத்தியம் உறுதியாக அதிகரித்து வந்துள்ளது. 1970 முதல் ஏற்றுமதிகளின் பெறுமானம் அதிகரித்து வந்துள்ளது. 1982-83ல் உச்சகட்டத்தையடைந்து அதன் பின்னர், சமநிலையை அடைந்துள்ளது. 1976 ல் 6.4 கோடி ரூபாவாக இருந்த ஏற்றுமதிப் பெறுமானம் 1982 ல் 249.5 கோடி ரூபாவாக அதிகரித்து பின்னர் குறைந்து 1985-86 ல் சுமார் 236 கோடி ரூபாவாக சமநிலையை அடைந்தது.

## வாசனைத் திரவியங்கள்

சிறு ஏற்றுமதிப் பயிர்களிடையே முக்கிய இடத்தை வகிக்கும் வாசனைத் திரவியங்கள் சி. ஏ. ப. வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியத்தில் 50 சதவீதத்துக்குக் காரணமாகவுள்ளன. வாசனைத் திரவியங்களுக்கு, ''உலர் வலயத் தாவரங்களிலிருந்து பெறப்படுவதும் கடுமையான நறுமணமுடையதும் வாசனைச் சரக்காகவோ வேறு தேவைகளுக்கோ பயன்படுத்தப்படுவதுமான விளைபொருட்கள்'' என வரைவிலக்கணம் கூறப்படுகிறது. இவ் வரைவிலக்கணத்தின் வரையறைக்குள் பெருந்தொகையான பதார்த்தங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனல், இலங்கையில் இவற்றில் ஒரு சில பொருட்களே குறிப்பிடத்தக்க அளவில் வியாபாரப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் முக்கியமானவை பற்றி மட்டுமே இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. அவை கறுவா, ஏலம், கராம்பு, மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி என்பனவாகும்.

உலக தரத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை ஏற்றுமதி செய்யும் அளவு சிறியதாக இருந்தாலும் இந்நாடு பாரம்பரியமாக் வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்து வந்துள்ளது. சென்ற காலத்தில் இக்கைத்தொழில் தொழில் வாய்ப்பு, வருமான விடயங்களில் இந்நாட்டின் பொருளாதாரத்தில் அதிமுக்கிய இடத்தை வகிக்கவில்லை. ஒருவேளை கறுவா மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்திருக்கலாம். கி. பி. 14 ஆம் நூற்றுண்டிலிருந்தே கறுவா வியாபாரம் நடைபெற்று வந்துள்ளது. சென்ற சில தசாப்தங்களாக இலங்கையில் வாசனைத்திரவியங்கள் விளையும் பிரதேசங்களிலுள்ள கமக்காரர்களுக்கு மிகக்கூடிய வருமானத்தைத் தரத்தக்க பயிர்களாக வாசனைத் திரவியங்கள் மாறியுள்ளன. இவற்றைப் பயிரிடும் கமக்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்காரர்களில் 50 சதவீதத்திற்கு அதிகமானோர் இப்பயிர்களிலிருந்தே தம் வருமானத்தில் 75 சதவீதத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.

அண்மைய ஆண்டுகளில் நாட்டின் வெளிநாட்டுச் சம்பாத்தியத்துக்குரிய ஒரு முக்கிய வழியாகவும் வாசனைத் திரவியங்கள் திகழ்கின்றன. 1970ல் 5 கோடி ரூபா வெளிநாட்டுச் செலாவணியைக் கொணர்ந்த வாசனைத் திரவியங்கள் 1985ல் 55.9 கோடி ரூபா சம்பாத்தியத்திற்குக் காரணமாக அமைந்தன. இது பதினொரு மடங்கு அதிகமானதாகும். இலங்கை உலகில் வாசனைத் திரவியங்கள் உற்பத்தி செய்யும் நாடுகளில் முக்கியமான தொன்று. எனினும் 1975-1985 வரையான காலப்பிரிவில் கறுவாவைத் தவிர பிற வாசனைத் திரவிய வர்த்தகத்தில் இலங்கையின் பங்கு மிகக்குறைந்ததாகவே காணப்பட்டது. இக்காலப்பிரிவில் இலங்கையின் பங்கு பின்வருமாறு அமைந்தது; கறுவா 35%; கிராம்பு 6%; ஏலம் 3%; சாதிக்காய், சாதிபத்திரி 3%; மிளகு 1% க்குக் குறைவு.

### பெருமளவில் உற்பத்தி செய்யும் நாடுகள்

உலர் வலய நாடுகள் பலவற்றில் வாசனைத் திரவியங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் சில பிராந்தியங்களில் மட்டுமே இது வர்த்தக அடிப்படையில் நடைபெறுகிறது. இப்பிராந்தியங்கள் அநேகமாக பொதுநல அமைப்பில் உள்ளன. பல தென், தென் கிழக்காசிய நாடுகள் குறிப்பாக மிளகு, கறுவா, ஏலம், கிராம்பு, சாதிக்காய் என்பவற்றை உற்பத்தி செய்கின்றன.

இந்தியா, மலேசியா (சரவாக்) இந்தோனேஷியா, பிரேசில் ஆகியனவே பெருமளவில் மிளகு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகளாகும். மடகஸ்காரும் இலங்கையும் சிறு அளவில் உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகள்.

அட்டவணை 1

முக்கியத்துவத்தின் அடிப்படையில் வாசனைத்திரவியங்களை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடுகள்

| | மிளகு | கறுவா | ஏலம் | கிராம்பு | சாதிக்காய், சாதிபத்திரி |
|---|---|---|---|---|---|
| 1. | இந்தியா | இலங்கை | இந்தியா | தன்சானியா | இந்தோனேஷியா |
| 2. | மலேசியா | சீசெல்ஸ் | கௌதமாலா | மடகஸ்கார் | கிரனடா |
| 3. | இந்தோனேஷியா | மடகஸ்கார் | இலங்கை | இலங்கை | இலங்கை |
| 4. | பிரேசில் | இந்தியா | தன்சானியா | கொமரொஸ் | சீனா |
| 5. | மடகஸ்கார் | | | பிரேசில் | இந்தியா |
| 6. | இலங்கை | | | | |

மூலம்: பொதுநல அமைப்புச் செயலகக் கட்டுரை "வாசனைத்திரவியங்கள், 1973.

உலகின் கறுவாத்தேவையை இலங்கை பூர்த்தி செய்கிறது. கறுவா உற்பத்தியில் இலங்கையை அடுத்து சீசெல்ஸ், மடகஸ்கார், இந்தியா ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன. ஏலக்காய் உற்பத்தி செய்யும் பிரதான உலகநாடு இந்தியா. இதனையடுத்து கௌதமாலா, இலங்கை, தன்சானியா ஆகிய நாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. கிராம்பு உற்பத்தியில் தன்சானியாவும் மடகஸ்காரும் முக்கிய இடம் வகிக்கின்றன. இந்தோனேஷியாவில் பெருமளவு உற்பத்தியானாலும் முழுவதையும் தற்போது அந்நாடே பயன்படுத்துகிறது. இலங்கை, கொமொரெஸ்தீவுகள், பிரேசில் ஆகியனவும் கிராம்பு உற்பத்தியில் முக்கியமானவை. சாதிக்காய், சாதிபத்திரி ஆகியவற்றை இந்தோனேஷியாவும் கிரனடாவும் பெருமளவில் வழங்குகின்றன. இவ்விரண்டும் சேர்ந்து உலக ஏற்றுமதியில் 80 சதவீதத்திற்குப் பொறுப்பாகவுள்ளன. இலங்கையும் அதைவிடக் குறைவாக சீனாவும் இந்தியாவும் தான் சாதிக்காய் உற்பத்தி செய்யும் ஏனைய முக்கிய நாடுகளாகும். எனினும் இவற்றின் ஏற்றுமதியளவு ஒப்பீட்டு நோக்கில் குறைவானதாகும்.

### இலங்கையில் உற்பத்திப் பிரதேசங்கள்

உள்நாட்டுப் பொருளாதார முக்கியத்துவத்தின் அடிப்படையில் (ஏற்றுமதியளவு தொடர்பாக) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் வாசனைத் திரவியங்கள் கறுவா, கிராம்பு, ஏலம், மிளகு, சாதிக்காய் என்பனவாகும். ஒரு தொகுதி என்ற வகையில் அவை இடைநிலை, ஈரளிப்பு வலயங்களில் குவிந்திருப்பதாகக் காணப்படினும் கறுவா குறிப்பாக கரைநாட்டு ஈரளிப்பான பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகிறது. ஏலக்காய் மலைநாட்டு ஈரளிப்புப் பிரதேசத்திலும் மத்திய, மலைநாட்டு இடைநிலை வலயத்திலும் மிளகு, கிராம்பு, சாதிக்காய் என்பன மத்திய நாட்டு வரண்ட வலயத்திலும் காணப்படுகின்றன. இவை இவ்வாறு பயிரிடப்பட்டுள்ளமைக்கு இவை இந்த விவசாய-இயற்கைச் சூழலுக்குப் பொருத்தமானவை என்பதை விட வரலாற்று நிகழ்ச்சிகளே காரணமாகும். ஏலம் மட்டும் இதற்கு விதிவிலக்காகும். மிகவும் ஈரளிப்பும் அதிக குளிரும் உள்ள பகுதிகளில் ஏலம் செழித்து வளர்கிறது. ஒல்லாந்தர் இலங்கைக்கு வருமுன் கறுவா குறிப்பாக ஈரளிப்பான, நடுத்தர, மத்திய, மலைநாட்டுப் பிரதேசங்களிற் பயிரிடப்பட்டது. இதற்குச் சான்றாக இன்றும் இப்பிரதேசங்களில் ஆங்காங்கு கறுவா காடாக வளர்ந்திருப்பதைக் காணலாம். 1658ல் ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தபின் ஒல்லாந்தரது நடவடிக்கைகளுக்கு மையமாக விளங்கிய கொழும்பு மாவட்டத்திலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் கறுவாத் தோட்டங்கள் தாபிக்கப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன. பின்னர் கொழும்பு நகர் மயமாக்கல் விரிவடைந்ததனுலும் தென்னைச் செய்கை விஸ்தரிக்கப்பட்டதனுலும் கறுவாச் செய்கை தெற்கு நோக்கித் தள்ளப்பட்டது.

அதேபோன்று கிராம்பும் சாதிக்காயும் அவை அறிமுகப் படுத்தப்பட்ட இடமான பேராதனைத் தாவரத்தோட்டத்துடன் தொடர்புடையவனவர்கக் காணப்படுகின்றன. இதற்கு மாருக, கிராம்பும், சாதிக்காயும் அவற்றின் மூல நாட்டில் தாழ்ந்த பிரதேசங்களுக்கே உரிய பயிர்களாக விளங்குகின்றன.

இவ்வாருக மேற்கூறிய காரணங்களின் நிமித்தம் கறுவா, பிரதானமாக தாழ்நில ஈரளிப்பு வலயத்தில் அமைந்துள்ள கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் காணப்படுகிறது. ஏலக்காய் குறிப்பாக கண்டி, மாத்தளை, நுவரேலியா, கேகாலை, இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் விளைகிறது. மிளகு, கிராம்பு, சாதிக்காய் என்பன மத்திய ஈரளிப்புப் பிரதேசத்தில் ''கலப்புத் தோட்டப்'' பயிர்களாக விளைவிக்கப்படுகின்றன. இவை பயிரிடப்படும் பிரதான பகுதிகள் கண்டி, மாத்தளை கேகாலை ஆகியவற்றில் 80 சதவீதம் உற்பத்தி செய்யப்படுகிறது. எவ்வாருயினும் மிளகு ஈரளிப்பான, இடைநிலைப் பிரதேசங்களில் பரவலாகக் காணப்படுகிறது.

இலங்கையில் ஏலமும் கறுவாவும் தூய இனப் பயிர்களாகக் காணப்படுகின்றன. கறுவா நடப்பட்டுள்ள மொத்த நிலப் பரப்பின் 69 சதவீதம் தூய பயிரும், 24% கலப்புப் பயிரும் ஆகும். ஏழு சதவீதம் வீட்டுத் தோட்டங்களில் சிதறலாகப் பயிரிடப் பட்டுள்ளது. ஏலத்திற்குத் தேவையான விவசாய, இயற்கைச் சூழல், கடும் நிழல், குளிர்ச் சுவாத்தியம் என்பவை காரணமாக அது தூய பயிராகவே இருக்கிறது. குறிப்பாக இது மாத்தளை, குருணுகல், கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களைப் பொறுத்தவரை உண்மையாகும். இப்பகுதிகளிலேயே 80 சதவீதமான ஏலத் தோட்டங்கள் காணப்படுகின்றன. பெரும்பான்மையான சிறு தோட்டங்கள் காணப்படும் கண்டி, நுவரேலியா மாவட்டங்களில் இவை கலப்பின்றியே நடப்பட்டுள்ளன. மிகச் சிறு தோட்டங்களில் (0.4 ஹெக்டருக்குக் குறைந்தது) இது பிற தோட்டப் பயிர்களுடன் கலந்து நடப்பட்டுள்ளன.

கறுவாவுக்கும் ஏலக்காய்க்கும் மாருக மிளகு, கிராம்பு, சாதிக்காய் என்பன 2 ஹெக்டயர் வரை பரப்புள்ள ''கலப்புத் தோட்டங்'' களிற் பயிர் செய்யப்படுகின்றன. ''கலப்புத் தோட்டங்கள்'' என்பவை பொதுவாக 2 ஹெக்டயருக்குக் குறைந்த பரப்புடையனவாகும். இவை நாட்டின் ஈரளிப்பு வலயத்தில் பெரும்பாலும் காணப்படுகின்றன. இவை நெல்வயல்களுக்கு மேல் நீர் பாய்ச்ச முடியாத சரிவுகளில் அமைந்துள்ளன. சிறு தோட்டங்களாக இருப்பதனுல் இவற்றில் பல்வேறு பருவங்களில் பல்வேறு பயிர்கள் நடப்படுகின்றன. பயிர்களைப் பொறுத்தவரை நிரந்தரப் பயிர்களும் குறுங் காலப் பயிர்களும் நடப்படுகின்றன. இவற்றில் ஏலமும் நறுமணப்புல்லும் இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ''கலப்புத் தோட்டப்'' பயிர்ச் செய்கை முறையானது காணியை பல்வேறு பயிர்கள் செய்வதற்கும் பொருளாதார ரீதியாக உருப்படியான வகையில் பயன்படுத்துவதற்கும் ஒரு சிறந்த முறையாகும். நெற்பயிருடன் பெரும்பாலும் தொடர்புறுத்தப்படும் இப்பயிர்ச் செய்கை மத்திய மலைநாட்டு கிராமியப் பண்ணைப் பொருளாதார அமைப்பின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும்.

''கலப்புத் தோட்ட''ப் பண்ணை முறையின் சில பொருளாதார அம்சங்கள் இதன் கீழ் வருணிக்கப்படுகின்றன. இது கண்டி மாவட்டத்தில் மக்கொன்னலும் தர்மபாலாவும் 1973ல் நடாத்திய ஓர் ஆய்வை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**(1) பண்ணையின் அளவு:** 4 முதல் 2 ஹெக்டயர் வரை பல அளவுகளைக் கொண்டவை. சராசரி அளவு 1 ஹெக்டயர். ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்டவற்றின் அளவு 0.8 ஹெ. அல்லது அதைவிடக்குறைவு.

**(2) பயிர்களின் எண்ணிக்கை:** சராசரி 11. மிகக்கூடியது 18. பண்ணையின் அளவுக்கும் பயிர்களின் எண்ணிக்கைக்கும் இடையில் தொடர்பில்லை. ஐம்பது சதவீத

அட்டவணை 2

**சிறிய, பெரிய ஏலக்காய்த் தோட்டங்கள்**

| மாவட்டம் | பெரிய தோட்டங்கள்% (2 ஹெக். கூடியவை) | சிறுதோட்டங்கள்% (2 ஹெக். வரை) |
|---|---|---|
| நுவரேலியா | 49 | 51 |
| கண்டி | 59 | 41 |
| மாத்தளை | 83 | 17 |
| கேகாலை | 89 | 11 |
| குருணுகல் | 100 | 0 |
| இரத்தினபுரி | 100 | 0 |

மூலம்: சுமித் டி சில்வா 1972.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்திற்கு மேற்பட்ட பண்ணைகளில் பாக்கு, பலா, கோப்பி, மிளகு, தென்னை, வாழை, தேயிலை, கிராம்பு, சாதிக்காய், பப்பாளி ஆகியவை பயிரிடப்பட்டுள்ளன.

(3) ஒரு ஹெக்டயரில் மரங்கள்: சிறு பண்ணைகளில் பெரிய பண்ணைகளை விட அதிக மரங்கள் காணப்பட்டன. பயிர்களுக்கிடையில் அளவு வித்தியாசம் பாராமல் கணக்கிட்டால் ஒரு ஹெக்டயரில் 460 மரங்கள். பண்ணையின் சிறிய அளவுடன் பண்ணைகளில் மரங்கள் நெருக்கமாக் இருக்கக் காரணம் கோப்பி, பாக்கு மரங்களின் கிளைகளின் செறிவாகும்.

(4) விளைச்சல்: பொதுவாகத் தனிப் பயிர்களின் விளைச்சல் குறைவானது. காரணம்; (அ) மரங்களின் செறிவு (ஆ) தனிப் பெரு மரங்கள் வளர்ந்துள்ள இடங்கள். உதாரணமாக, பலா. இது ஏனைய இனங்களின் வளர்ச்சியுடன் தொடர்புடையது. (இ) மேற் கூறிய காரணங்களின் விளைவாக அளவுக்கதிகமான நிழல்.

(4) உற்பத்தி: கால அடிப்படையில் தனித்தனித் தோட்டங்களின் உற்பத்திப் பகிர்வின் சராசரிப் பெறுமானம் 28. மிகக் கூடிய. பெறுமானம் கிராம்பு பயிரிடும் பண்ணைகளைச் சார்ந்திருக்கிறது.

(5) உழைப்பு: ஒரு ஹெக்டயர் நிலத்திற்கு வருடமொன்றுறுக்குத் தேவையான சராசரி உழைப்பு 290 மனித நாட்களாகும். சிறு பண்ணைகளில் 30-40% தொழிலாளர் கூலிக்கு அமர்த்தப்பட்டனர். பெரியவற்றில் 70-80% தொழிலாளர் கூலிக்கமர்த்தப்பட்டனர். கூலிக்கமர்த்தப்படும் தொழிலாளர் பெரும்பாலும் அகழ்தல், நடல், களை பிடுங்கல் முதலியவற்றுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனர்.

(6) காசு வருமானம்: பண்ணைக் காசு வருமானம் தரும் இரு பிரதான மூலங்கள் கிராம்பும்

அட்டவணை 3

பல்வேறு வாசனைத்திரவியங்கள் பயிரிடப்பட்டுள்ள தோட்டங்களின் அளவுகள்

| அளவு வகுப்பு (ஹெ.) | அ கறுவா % தோட்டம் | அ கறுவா % பரப்பு | ஆ ஏலம் % தோட்டம் | ஆ ஏலம் % பரப்பு | இ கிராம்பு மிளகு சாதிக்காய் (கலப்புத் தோட்டம்) % தோட்டம் |
|---|---|---|---|---|---|
| 0.4 | 66 | 27 | 37 | 1 | 17 |
| 0.40-1.2 | 92 | 61 | 72 | 7 | 46 |
| 1.21-2.0 | 97 | 73 | 83 | 11 | 70 |
| 2.10-4.0 | | | 92 | 16 | 89 |
| 4.10-20 | 100 | 100 | 95 | 22 | |
| 20 | | | 100 | 100 | 100 |

மூலங்கள்: (அ) குடிசனமதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களம், 1969.
(ஆ) சுமித் டி சில்வா 1974.
(இ) சப்பிடீன், 1978.

(42%) மிளகுமாகும் (15%). ஏனைய முக்கிய வழிகள்: தென்னை (12%), வாழை (5%), சாதிக்காய், பாக்கு (ஒவ்வொன்றும் 2%). தேயிலை உள்ள இடத்தில் இது வருமானத்தில் 12% வரை கொண்டுவரலாம். பொதுவாக கூடிய பெறுமதியுள்ள கிராம்பு போன்ற பயிர்கள் கூடிய வருமானம் தரும். இது பண்ணையின் அளவைப் பொறுத்ததல்ல. எவ்வாறு யினும், ஹெக்டயர் ஒன்றுக்கான வருமானம் 0.6 ஹெக்டயருக்குக் குறைந்த பண்ணைகளில் கூடுதலாக இருக்கக் காணப்படுகிறது.

மிளகு மூன்றுண்டுகளிற் காய்க்கத் தொடங்க கிராம்பும் சாதிக்காயும் முதன் முதல் காய்ப்பதற்கு ஏறக்குறைய ஆறு ஆண்டுகள் செல்கின்றன. அன்றியும் இவை 10 – 12 வருடங்கள் வரை இலாபகரமான விளைச்சல் தருவதில்லை. ஆதலால், சிறுதோட்டச்சொந்தக்காரர்களுக்கு பயிர் நடத் தொடங்கிய காலத்திலிருந்தே ஒரு வருமானத்தைத் தருவதிலும் நீண்டகாலத்தில் நல்ல வருமானத்தை அளிப்பதிலும் ''கலப்புத் தோட்டங்கள்'' முக்கிய பங்கு வகிக்கின்றன. கிராம்பு, மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி என்பவற்றில் பெரும் பகுதி கலப்புத் தோட்டங்களிலேயே உற்பத்தியாகின்றன.

எனவே ''கலப்புத் தோட்டங்கள்'' உற்பத்தியாளருக்கு ஒரு வருமான வழியாக அமைவதோடு நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணியைக் கொணரும் வழியாகவும் அமைந்துள்ளன.

பாரம்பரியமாக இலங்கையில் வாசனைத் திரவியங்கள் சிறு தோட்டச் சொந்தக்காரர்களின் பயிராகவே இருந்து வந்துள்ளன. இவை வேறு பயிர்களுடன் சேர்த்தே நடப்பட்டுவருகின்றன. ஆதலால் தோட்டங்களின் அளவு, உற்பத்தியளவு, நிலப் பரப்பு முதலியன வேறுபடுகின்றன. கிடைக்கத்தக்கதாகவுள்ள தரவுகளும் பல்வேறு காலங்களில் நடாத்தப்பட்ட ஆய்வுகளிலிருந்தே பெறக்கூடியனவாகவுள்ளன. இம்மூலங்களை அடிப்படையாகக் கொண்டு 3 ம் அட்டவணை பல வாசனைத் திரவிய வகைகள் எவ்வளவு நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது.

மேற்கண்ட அட்டவணையில் காணப்படும் புள்ளிவிவரங்களின் படி கறுவாத் தோட்டங்களில் மூன்றிலிரண்டு பங்குக்கு மேற்பட்டவை 0.4 ஹெக்டயருக்கு (1 ஏக்.) குறைந்தவை. இவை பயிரிடப்பட்டுள்ள பிரதேசத்தில் 27% அடக்கியுள்ளன. ஏறத்

( 9 ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கோப்பி கொக்கோ ஆகியவற்றுக்கான சந்தை

வாசனைத் திரவியங்களைப் போன்று இலங்கையின் கோப்பி, கொக்கோ போன்ற விளைபொருள்களின் சந்தையினைப் பேணுவதிலும், விஸ்தரிப்பதிலும் இலங்கை அநுபவிக்கும் முக்கிய தடைகள் யாதெனில் இவற்றின் நிரம்பல் அளவின் நம்பகமற்ற தன்மையும், தரத்தின் ஒரே சீரற்ற தன்மையுமாகும். போதியளவு நல்ல தரமுள்ள இவ்வுற்பத்திகள் கிடைக்கக்கூடுமாயின் இப்பயிர்களின் உலக வர்த்தகத்தில் இலங்கைச் சந்தையினது பங்கினை வெகுவாக அதிகரிக்க முடியும் என பலதடவைகளில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதிகளவு நிலப்பரப்பில் பயிர் செய்தோ அல்லது ஒரு ஏக்கருக்கான உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தோ உற்பத்தியினைக் கூட்டுதல் என்பதே உடனடித் தேவையாக இனங் காணப்பட்டுள்ளது.

கொக்கோ, கோப்பி போன்ற பானப்பயிர்களில் காணப்படும் நிலைமை வாசனைத் திரவியங்களில் காணப்படும் நிலைமையில் இருந்து வித்தியாசமானது. இந்த இரு பயிர்களும் பல வெப்ப வலய நாடுகளில் வளர்வதோடு உலக நிரம்பலிலும் அதிகளவில் கிடைக்கிறது. இந்த ஒவ்வொரு பயிரும் ஏற்றுமதி இறக்குமதி நாடுகளையுள்ளடக்கிய உலக வர்த்தகக் குழுவினைக் கொண்டுள்ளது. இவற்றில் கோப்பிப் பயிருக்கான குழு, கொக்கோப் பயிருக்கான குழுவினை விட, விலை ஸ்திர நிலைமையினைப் பேணுவதில் மிகவும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது.

## கோப்பி

1980 அக்டோபரில் இருந்து இலங்கையானது தனக்களிக்கப்பட்டுள்ள சிறியளவு கோட்டாவுடன் சர்வதேசக் கோப்பிக் குழுவில் முழு அங்கத்துவ நாடாக பங்கு பற்றுகின்றது. இலங்கையானது தனது கோட்டாவினை பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆனால், அதிக விளைச்சலைத்தரும் புதிய கோப்பிப் பயிர்கள் 5000 ஹெக்டேயர் நிலத்தில் பயிர் செய்யப்பட எதிர்பார்க்கப்படுவதால் அதன் விளைவான உற்பத்தி அதிகரிப்பு இலங்கையின் தற்போதைய கோட்டாவான 3240 தொன்னைப் பூர்த்தி செய்யவும், அதைத் தொடர்ந்து பேணவும் உதவும். அத்துடன் வருங்காலத்தில் கிடைக்கும் மேலதிகக் கோட்டாவினையும் சந்திக்கக் கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கோட்டாவினைப் பூர்த்திசெய்வது மிக முக்கியமானதாகும். உள்ளூர் ஆராய்ச்சிகள் மூலம் நல்ல விளைச்சலைத் தரக்கூடிய ரொபஸ்ட்டா வகைக் கன்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலகச் சந்தையில் அராபிக்கா அல்லது உயர்வலயக் கோப்பிகளைவிட ரொபஸ்ட்டா வகைக் கோப்பியினது சந்தை மிகவும் துரிதமாக வளர்ந்து வருகிறது. மேலும் ரொபஸ்ட்டாக் கோப்பிக் கன்றுகள் மத்திய நாட்டு தேயிலை, இறப்பர், தேங்காய் கன்றுகளுடன இடைக்கிடை நடுவதற்கு சிறந்தவையாக இருந்து வருகின்றன.

## கொக்கோ

கொக்கோவிற்கான உலகச் சந்தை தொகையளவிலும், பெறுமதிரீதியிலும் பாரிய அளவினைக் கொண்டிருந்தாலும், உலகளாவிய நுகர்ச்சியின் குறைவு காரணமாக இவையிரண்டினதும் மொத்தமானது குறைந்து கொண்டே வருகிறது. அதே சமயம், சில முக்கிய ஏற்றுமதி நாடுகளில் புதிய உற்பத்தி காணிகள் கணிசமானளவில் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. எனவே இப்பாரிய உற்பத்தியானது, குறைக்கப்பட்ட சந்தை அளவிற்கான போட்டித் தன்மையினை அதிகரிக்கச் செய்ததோடு, விலை வீழ்ச்சிக்கும் வழிவகுத்தது. இந்நிலைமை பலவருடங்களுக்கு தொடர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய முக்கிய ஏற்றுமதி நாடுகளுடன் போட்டியாகக் காணப்படும் நல்ல தரமான உற்பத்தியினை உற்பத்தி செய்வதற்கு இலங்கையில் காணப்படும் அறுவடைக்குப் பின்பு உஷ்ணப்படுத்தும் வசதிகள், கழுவுவதற்கான வசதிகள், உலர்த்துவதற்கான வசதிகள் என்பன அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

உலகக் கொக்கோ வர்த்தகத்தில் கொக்கோ உற்பத்தியிலோ அல்லது தரத்திலோ குறிப்பிடக் கூடிய நிலையினை இலங்கை கொண்டிருக்கவில்லை. எனினும், தற்போது பயிர் செய்யப்படும் 12,700 ஹெக்டெயர் நிலத்தில் கொக்கோவின் உற்பத்திக்கும், அறுவடைக்குமாக பல்லாயிரக்கணக்கான பணியாட்கள் தொழில் புரிகின்றனர். எனவே இக் கைத்தொழிலில் ஹெக்டெயருக்கான உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு ஊக்குவிக்கப்படும் அதே சமயம், அறுவடைக்குப் பின்புள்ள சிறந்த தொழில் நுட்பமூடாக வெளியீட்டின் தரமும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கொக்கோவினது வேர்த்தொகுதி ஆழமுள்ள தண்ணீர்ப் பிரதேசத்தினை உபயோகிக்கக் கூடியதால், தென்னை மரங்களிடையே இடைக் கலப்புப் பயிராகப் பயிர் செய்வதற்கு கொக்கோ ஒரு சாதகமான பயிராகும்.

### பானப்பயிர்கள்

| மாவட்டம் | கொக்கோ (சதவீதம்) | கோப்பி (சதவீதம்) |
|---|---|---|
| கண்டி | 33.4 | 21.3 |
| மாத்தளை | 46.9 | 11.4 |
| குருணாகல் | 8.3 | 16.2 |
| கேகாலை | 2.5 | 10.5 |
| | 91.1 | 59.4* |

*பதுளை, நுவரெலியா மாவட்டங்கள் முறையே 17.9% 5.5% களை கொண்டுள்ளவையாக இருக்கின்றன. ஆனால் ஏனைய வாசனைத் திரவியப் பயிர்களின் காணியளவானது, மட்டாகவேயுள்ளது

( 3 ம் பக்கத் தொடர்ச்சி)

அதிக அபிலாஷைகளுடன் கூடிய இச்செய்திட்டத்தை அமுல் செய்யும் பொருட்டு 1972 ல் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் கீழ் சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களவு ஸ்தாபிக்கப்பட்டது. மீண்டும் பத்தாண்டுகளுக்குப்பின் அரசாங்கத்தின் பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (1983 – 1987) இந் நிலைமையை பின்வருமாறு எடுத்துக் கூறியது.

''சிக்கனமற்ற தேயிலைக் காணிகளில் பயிர்களைப் பன்முகப் படுத்துவதன் மூலமும், தென்னை வளரும் பிரதேசங்களில் இடையில் பயிரிடுவதன் மூலமும் இத் துறையின் உற்பத்தி ஆற்றலை விஸ்தரிக்க முடியும். தேயிலைக் காணிகளில் மிளகு, கராம்பு, கோப்பி என்பவற்றை இடையில் பயிரிடுவதும், இறப்பர் காணிகளில் கொக்கோ பயிரிடுவதும் சிறந்த நிலப்பாவனையைக் கருத்தில் கொண்டு ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.'' புகையிலை, பழங்கள், மரக்கறிகள், அலங்கார மலர்கள், எண்ணெய் விதைகள் போன்ற பல புதிய ஏற்றுமதிப் பயிர்கள் அண்மையில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. எனினும், வாசனைத்திரவியங்கள், கோப்பி, கொக்கோ போன்ற பயிர்களே இத்துறையில் இன்னும் முன்னணி வகித்துவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தாழ 3 சதவீதமானவை 2 ஹெக்டயருக்கு அதிகமானவை 1969ம் ஆண்டில் இதேபோன்ற பரப்பான நிலத்தில் இப்பயிர் செய்யப்பட்டது. இதற்குமாறுக ஏலக்காய்த் தோட்டங்களில் மூன்றிலொரு பங்குக்குச் சிறிது மேற்பட்ட தோட்டங்கள் 0.4 ஹெக்டயருக்குக் குறைந்தனவாகும். அத்துடன் டி சில்வாவின் காண்புகளின்படி இவை, பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 1 சதவீதம் மட்டுமேயாகும். ஏலக்காயில் பெரும்பகுதி பெருந்தோட்ட நிலைமைகளிலேயே பயிரிடப்படுகின்றன. தோட்டங்களில் 5 சதவீதமானவை மட்டுமே பரப்பில் 20 ஏக்கருக்கு மேற்பட்டனவாயினும் அவை பயிர் செய்யப்பட்ட பரப்பில் 78 சதவீதத்தை அடக்கியுள்ளன.

கிராம்பு, மிளகு, சாதிக்காய் ஆகியவை நடப்பட்டுள்ள தோட்டங்களை இவ்வாறு பகுப்பாய்வு செய்வது சாத்தியமானதல்ல. இப்பயிர்கள் அநேகமாகக் கலப்புத் தோட்டங்களிலேயே காணப்படுவது இதற்கான முக்கிய காரணமாகும். எவ்வாருயினும் கண்டி மாவட்டத்தில் சப்பிடீன் (1978) நடாத்திய ஓர் ஆய்வில் கிராம்பு, மிளகு, சாதிக்காய் என்பவற்றைக் கொண்ட ''கலப்புத் தோட்டங்க''ளுள் 50 சதவீதமானவை 1.2 ஹெ. வரை பரப்புடையனவாகும். 90 சதவீதமானவை 4 ஹெக்டயருக்குக் குறைந்தவை. கலப்புத் தோட்டமொன்றின் சராசரி அளவு 2.2. ஹெக்டயராகும்.

பயிரிடப்பட்ட பரப்பு

ஏலக்காயைத் தவிர பிற வாசனைத் திரவியங்களிற் பெரும்பாலானவை 0.8 ஹெக்டயருக்குக் குறைந்த சிறு சாணித் துண்டுகளிலேயே நடப்படுகின்றன. மேலும், சிறு தோட்டங்கள் மேலும் பிரிக்கப்பட்டுத் துண்டாடப்படுவதனுலும் உற்பத்திப் பிரதேசங்கள் பலவற்றைச் சென்றடைய முடியாதிருப்பதனுலும் பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவைக் கணிப்பது கடினமாகும். குறிப்பாக ''கலப்புத் தோட்டங்களில்'' நடப்பட்டுள்ள மிளகு, கிராம்பு, சாதிக்காய் என்பவற்றைப் பொறுத்தவரை இது உண்மையாகும். இவ்வாசனைத் திரவியங்களுற்பத்தியாகும் பிரதான பகுதிகளின் மதிப்பிட்ட நிலப்பரப்பு 4ம் அட்டவணையிலும் 5ம் அட்டவணை மொத்தப் பரப்பையும் காட்டுகின்றன.

ஐந்தாம் அட்டவணையிற் காணப்படும் விவரங்களின்படி வாசனைத்திரவியங்களை ஒரு தொகுதியாக நோக்குகையில் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் நடப்பட்டுள்ள நிலப்பரப்பில் இவை 56 சதவீதத்தைக் கொண்டுள்ளன. இதில் ஏறத்தாழ அரைவாசியில் கறுவா நடப்பட்டுள்ளது. ஏனைய சி. ஏ. பயிர்கள் விளையும் நிலப்பரப்பில் அரைவாசியில் கொக்கோ நடப்பட்டுள்ளது.

உற்பத்திச் சிறப்பியல்புகள்

இனங்கள்: இலங்கை வாசனைத் திரவியங்களது முக்கிய சிறப்பியல்பு, தெளிவாக வரையறுக்கப்பட்ட எவ்வினமும் இல்லாதிருத்தலாகும் எனலாம். இங்குள்ள பிரதான ஏலக்காய் இனம் மைசூர், மலபார் இனங்களாகும்; மிளகு பன்னியூர் இனமாகும். இவையாவும் இந்திய இனங்கள். பாரம்பரிய இனங்களே நடப்படுவதால், கூடுதல் விளைச்சல் தரும் தாய் மரங்களிலிருந்தே இனப்பெருக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

எவ்வாருயினும் 1972ல் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம் தாபிக்கப்பட்டதிலிருந்து மாத்தளையில் ஓர் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டு கொக்கோ, கோப்பி, ஏலம், மிளகு, பப்பாளி ஆகியவற்றின் உயர்ந்த இனங்களை விருத்தி செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புது மிளகு இனங்கள் இந்தியாவிலிருந்து பன்னியூர் 1, மலேசியாவிலிருந்து குச்சிங் என்பவையும் உள்நாட்டுத் தெரிவான ஜிகே 49 (சுவர்ணலங்கா)வுமாகும். ஏலக்காயில் அதிக விளைச்சல் தரும்

அட்டவணை 4

பல்வேறு மாவட்டங்களில் வாசனைத் திரவியங்கள் பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்புகள்

| மாவட்டம் | கறுவா | | ஏலம் | | மிளகு | | கிராம்பு | | சாதிக்காய் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பரப்பு | % | பரப்பு | % | பரப்பு | % | பரப்பு | % | பரப்பு | % |
| கொழும்பு | 1,026 | 6 | - | - | 176 | 3 | 122 | 2 | 36 | 1.5 |
| காலி | 4,800 | 30 | - | - | 154 | 3 | 202 | 3 | 14 | 0.5 |
| அம்பாந் தோட்டை | 1,110 | 7 | - | - | 50 | 1 | 39 | 1 | - | - |
| களுத்துறை | 848 | 5 | - | - | 108 | 2 | 106 | 2 | 6 | |
| மாத்தறை | 6,536 | 40 | - | - | 128 | 2 | 218 | 3 | 26 | 1 |
| இரத்தினபுரி | 1,456 | 9 | 400 | 8 | 226 | 4 | 700 | 10 | 62 | 3 |
| கேகாலை | 4 | | 520 | 11 | 820 | 13 | 1,756 | 26 | 497 | 21 |
| குருணுகலை | - | | 220 | 5 | 1,110 | 18 | 395 | 6 | 116 | 5 |
| மாத்தளை | - | | 1,006 | 21 | 1,360 | 22 | 1,074 | 16 | 84 | 4 |
| கண்டி | - | | 2,500 | 52 | 1,808 | 29 | 2,060 | 31 | 1,5.5 | 65 |
| நுவரேலியா | 426 | 3 | 178 | 4 | 186 | 3 | 6 | | 6 | |
| மொத்தம் | 16208 | 100 | 4824 | 100 | 6152 | 100 | 6678 | 100 | 2423 | 100 |

மூலம்: சி. ஏ. ப. தி. 1984.

வசுக்கா என்னும் ஓரினம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை அதிக பட்டை, பட்டை எண்ணெய், இலை எண்ணெய் ஆகிய வற்றைத் தரும் கறுவா இனங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

நடுகை முறைகள்: சிறு தோட்ட நிலைமைகளில் நிறுவகச் செலவுகள், உள்ளீடுகளின் உபயோகம், பேணற் செலவுகள் என்பன மிகக்குறைவாகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட இனங்களின்மையால், கமக்காரர்கள், தம் தோட்டத்திலுள்ள கன்றுகளில் மிகச் செழிப்பானவற்றைத் தெரிவு செய்து நடுகின்றனர்.

களைபிடுங்கல் பொதுவாக மேற்கொள்ளப்படும் ஒரு முறை. சராசரி வருடமொன்றில் மூன்று அல்லது நான்கு முறை களை பிடுங்கப்படுகிறது. வடிகால்களைச் சுத்தஞ் செய்து பழுது பார்த்தல் மூலமாக மண் பாதுகாப்பு வருடமிரு முறை செய்யப்படுகிறது. உரமிடல், நோய், பூச்சி ஒழிப்பு, கவாத்து வெட்டல் போன்றவை அனேகமாகச் செய்யப்படுவதில்லை. பெரிய அளவிலான பண்ணைகளில் மட்டுமே இவை செய்யப்படுகின்றன. கவாத்து வெட்டல் அறுவடையின் போது பெருந்தோட்டங்களில் நடைபெறுகிறது.

அறுவடை: இதுவே உற்பத்திப் படிமுறை முழுவதிலும் மிக முக்கியமான அம்சம். கறுவாவின் பிரதான பருவகாலம் மே முதல் யூலை வரையாகும். இக்கால இடைவெளியில் 50 சதவீதத்திற்கு அதிகமான பயிர் அறுவடை செய்யப்படுகிறது. கிராம்பும் மிளகும் பொதுவாக வருடம் ஒரு முறை அறுவடை செய்யப்படுகின்றன. கிராம்பு, அறுவடை செய்வதற்கான காலம் ஜனவரி - பெப்ரவரியும் மிளகுக்குரிய காலம் ஒக்டோபர் ஜனவரியுமாகும். இப்பருவத்தில் 70% அறுவடை செய்யப்படுகிறது. ஏலமும் சாதிக்காயும் ஒரு வருடத்தில் 3 - 4 முறை ஆயப்படுகின்றன.

அட்டவணை 5

பாரிய சிறு ஏற்றுமதிப் பயிர் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு

| பயிர் | நிலப்பரப்பு | மொத்தத்தில் % |
|---|---|---|
| கறுவா | 15,740 | 26.0 |
| மிளகு | 5,108 | 9.0 |
| ஏலம் | 5,058 | 8.5 |
| கிராம்பு | 4,768 | 8.0 |
| சாதிக்காய் | 2,366 | 4.0 |
| உபமொத்தம் | 33,040 | 55.5 |
| கொக்கோ | 12,702 | 21.0 |
| கோப்பி | 7,482 | 12.5 |
| நறுமணப்புல் | 6,060 | 10.0 |
| பப்பாளிப்பால் | 600 | 1.0 |
| உபமொத்தம் | 26,844 | 44.5 |
| மொத்தம் | 59,884 | 100.0 |

மூலம்: சி. ஏ. ப. தி., 1986.

அறுவடைக்குக் குடும்ப உழைப்பு பயன்படுத்தப்படுகிறது. பலர் கூலிக்குத் தொழிலாளரை அமர்த்தியும் அறுவடை செய்கின்றனர். ஒவ்வொரு தொழிற் கூறும் 14 - 15 கொத்து பச்சை கிராம்பும், 20 - 25 கொத்து பச்சைமிளகும், 10 - 25 கொத்து பச்சை ஏலக்காயும் அறுவடை செய்யமுடியும். இது விளைச்சலிற் செறிவைப் பொறுத்தது. சிலவேளைகளில் பயிர் மரத்திலேயே விற்கப்பட அதிலிருந்து கொள்வனவு செய்தவர் அறுவடை செய்துகொள்கிறார். இதற்குப் பல காரணங்களுண்டு. ஆனால் இது பயிரை நீண்டகாலத்தில் பாதிக்கக் கூடிய சாத்தியக் கூறுகளுண்டு.

விளைச்சல்: முகாமை மட்டம், முயற்சியின் தன்மை, தோட்டத்தின் தன்மை, பயிரின் முற்றிய தன்மை என்பவற்றில் விளைச்சலின் அளவு தங்கியுள்ளது. இதனால் பெறக்கூடிய விளைச்சலை விட உள்ளபடியான விளைச்சல் குறைவாகவே உள்ளது.

பதனிடல்: கறுவா, கிராம்பு, மிளகு, சாதிக்காய் என்பன முற்றாக வெய்யிலில் உலர்த்தி பதப்படுத்தப்படுகிறது. கிராம்பு முழுவதும் ஒரே சீரான ஊதா நிறமாகும் வரை 3 - 5 நாட்களுக்கு உலர்த்தப்படுகிறது. சாதிக்காய் 4 அல்லது 5 நாட்களில் நன்கு உலர்ந்த பின், காயினுள்ளே உள்ள பருப்பு சிறிது ஆட்டினும் ஒலி எழுப்பும். மிளகு நன்றாகக் கறுப்பு நிறம் அடையும்வரை 5 முதல் 7 நாட்கள் வரை உலர்த்தப்படுகிறது. ஏலக்காயையும் உலர்த்திப் பதனிடலாம், ஆனால் தரம் குறைந்ததாக இருக்கும். ஆதலால் வியாபாரிகள் விரும்பும் மிகச்சிறந்த நிறமான இளம் பச்சை நிறத்தை அடையும் பொருட்டு ஏலக்காய் சூடேறிய காற்றைக் கொண்டு உலர்த்திப் பதனிடப்படுகிறது.

மேற்கூறிய பிரதான உற்பத்தி பொருட்கள் தவிர சிறு அளவில் எண்ணெயும் வடிக்கப்படுகிறது. எண்ணெய் வகைகளிற் பிரதானமானவை கறுவா இலை எண்ணெய், கறுவாப்பட்டை எண்ணெய், ஏலக்காய் எண்ணெய், மிளகெண்ணெய் கிராம்பு எண்ணெய் என்பனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்படுத்தல்: ஒரு சில உற்பத்தியாளர்கள் மட்டுமே பதனிட்டபின் தம் உற்பத்திப் பொருளைத் தரப்படுத்துகின்றனர். கறுவா இரு தரங்களாக வகுக்கப்படுகிறது. கரடு முரடானது, மென்மையானது. நீர்கொழும்பு, ஜாஎலே, கொட்டாவை ஆகிய பிரதேசங்களிலுள்ள வர்த்தகத் தோட்டங்களில் கறுவா ஐந்து தரங்களாக வகுக்கப்படுகிறது (சி 1 முதல் சி 5 வரை). உற்பத்தியாளர்களில் சுமார் மூன்றிலொரு பகுதியினர் தம் கிராம்பு, மிளகு, சாதிக்காய் என்பவற்றை இரு தரங்களாக வகுக்கின்றனர்: ஒன்று, முழுமையான/முற்றிய சுத்தமான பொருள்; மற்றையது உடைந்த, முற்றாத பொருள். ஏனைய வாசனைத் திரவியங்களை விட ஏலம் சிறந்த முறையில் பதனிடப்படுவதால் மூன்று முதல் ஐந்து தரங்களாகப் பிரிக்கப்படுகிறது. இது காய்களின் நிறத்தையும் பருமனையும் பொறுத்துத் தரப்படுத்தப்படுகிறது.

உற்பத்திச் செலவு: முன்னர் குறிப்பிட்டது போல, முகாமையின் தாழ்ந்த மட்டம் காரணமாக குறிப்பாக சிறு தோட்டங்களில் உற்பத்திச் செலவு குறைவாக உள்ளது. சிறந்த முகாமையின் கீழ் பெருமளவில் உற்பத்தி நடைபெறும் இடங்களில் களையெடுத்தல், உரமிடல், ஆய்தல் என்பவற்றுக்குச் செலவு ஏற்படுகிறது. ஒரு ஹெக்டயர் (அதாவது சுமார் 2½ ஏக்கர்) வாசனைத் திரவியத்திற்கு பின்வரும் செலவு ஏற்படுவதாக சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. கறுவா - ரூ. 15,000, ஏலக்காய் - ரூ. 7,500, கிராம்பு - ரூ. 7500, மிளகு - ரூ. 8750, சாதிக்காய் - ரூ. 2500; கறுவாவைப் பொறுத்தவரை அறுவடை, உரித்தல் செலவுகள் மொத்தச் செலவில் 60 சதவீதமாகும். களையெடுத்தலுக்கும், கவாத்து வெட்டுவதற்கும் 20 சதவீத செலவு ஏற்படுகிறது. ஏலக்காயைப் பொறுத்தவரை செலவில் பெரும்பகுதி உரத்துக்கும் பூச்சி கொல்லிகளுக்குமான தாகும்.

வருமானம்: வருமானம் விளைச்சலையும் தரம், விலை என்பவற்றையும் பொறுத்தது. சிறு தோட்ட நிலைகளில் சராசரி வருமானம் குறைவானதாகும். காரணம் உற்பத்தி தரக்குறைவு, உரிய பதனிடல், தரப்படுத்தல் என்பவை இல்லாமை ஆதியனவாகும். கலப்பில்லாமல் கிராம்பும் மிளகும் நடப்பட்ட தோட்டங்களில் கிராம்பு ஒரு ஹெக்டயருக்கு 30,000 ரூபாவும் மிளகு 25,000 ரூபாவும் வருமானம் தரக்கூடியவை. மிகக்குறைந்த வருமானம் தருவது கறுவாவாகும். ஒரு ஹெக்டயருக்கு சுமார் 3000 ரூபா வருமானம் கிடைக்கும். குறைந்த வருமானத்திற்குக் காரணம் கூடிய உற்பத்திச் செலவாகும். ஒரு ஹெக்டயருக்கு 15,000 ரூபாவரை செலவாகும். ஏலம், சாதிக்காய், சாதிபத்தரி என்பவற்றிலிருந்து ஹெக்டயருக்கு 7,500 ரூபா வருமானம் கிடைக்கும். சிறு தோட்டங்களில் கறுவாவும் ஏலக்காயும் பண்ணையின் முழுவருமானத்தையும் கொண்டு வருகின்றன. கலப்புத் தோட்டங்களில் கிராம்பு, மிளகு, சாதிக்காய் ஆதியன நடப்படுகின்றன. வருமானத்தில் 45 சதவீதம் கிராம்பிலிருந்தும் மிளகிலிருந்து 15 சதவீதமும் சாதிக்காய், சாதிபத்தரியிலிருந்து 2 சதவீதமும் கிடைக்கின்றன.

சந்தைப்படுத்தல்: இலங்கையில் சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான சந்தைப்படுத்தல் அமைப்பின் சிறப்பியல்பு அது பாரம்பரியமாக வீட்டு மட்டத்தில் தொடங்குவதும் ஏற்றுமதியாளர் மட்டத்தில் அது பல நுணுக்கங்களைக் கொண்டிருப்பதுமாகும். உள்ளூர் சந்தைப்படுத்தல் அமைப்பானது, இறுதியாக தேசியமட்டத்திலான தொடர்புடையதாகும். இலங்கையில் வாசனைத் திரவியங்களின் சந்தைப்படுத்தல் அமைப்பின் விரிவான வருணனை எம்றிச் (1972), சப்பிதீன் (1978) ஆகியோரின் ஆய்வுக் கட்டுரைகளிற் காணப்படுகிறது. இவ்வாராய்ச்சிகள் நடாத்தப்பட்டதிலிருந்து இதுவரை இவ்வமைப்பில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. விளைபொருட்களின் விலைகளும் சந்தைப்படுத்தற் செலவுகளும் மட்டுமே மாற்றமடைந்துள்ளன.

உள்நாட்டுச் சந்தைப்படுத்தல்: உள்நாட்டு சந்தைப்படுத்தல் ஐந்து முக்கிய நபர்களைக் கொண்டது. திரிந்து சேகரிப்பவர், கிராம வியாபாரி, மொத்தக் கொள்வனவாளர், கமிஷன் முகவர், ஏலத்தரகர்.

பாரம்பரிய சந்தைப்படுத்தல் அமைப்பில் திரிந்து சேகரிப்பவர் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றார். போக்குவரத்து வசதிகள் குறைந்த தூரப்பிரதேசக் கிராமங்களில் இவர் வகிக்கும் பங்கு மிக முக்கியமானது. இப்பிரதேசங்களில் சிறுதோட்டச் சொந்தக்காரர்கள் தம் விளை பொருட்களை விற்பதற்கு இவரையே நம்பியிருக்கின்றனர். திருந்து சேகரிப்பவர் ஒரு சிறு அளவையே சேகரிக்கிறார். நாளொன்றுக்கு அவர் மிகக்கூடியது 15 கிலோகிராம் சேகரிப்பார். அவர் நேரடியாகக் காசு கொடுத்துப் பொருட்களை வாங்குகிறார். அவ்வாறு கொள்வனவு செய்தவற்றை அன்றே கிராம வியாபரிக்கு விற்றுவிடுகிறார்.

இவ்வமைப்பில் அடுத்து முக்கிய இடம் வகிப்பவர் கிராம வியாபாரியாவார். கிராமத்தின் மத்தியில் அவர் ஒரு சிறு கடையை நடாத்துகிறார். அவரது சேவை கிராம உற்பத்தியாளருக்கு எந்நேரத்திலும் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. அவர்கள் சிறு அளவிலான விளை பொருட்களை எப்பொழுதும் கடைக்காரருக்கு விற்கலாம். அத்துடன் தேவையான பிற பொருட்களை அவரிடம் வாங்கலாம். திரிந்து சேகரிப்பவர் இடத்துக்கு இடம் சென்று விளை பொருட்களை வாங்க, கிராமக் கடைக்காரர்தம்மிடம் கொண்டு வரப்படுவதை மட்டும் வாங்குகிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவ்விருவரும் தம் கிராமத்திற்கு அண்மையிலுள்ள மொத்தக் கொள்வனவாளருக்குத் தம் பொருட்களை விற்கின்றனர். கிராம வியாபாரியானவர், திரிந்து சேகரிப்பவரைப் போலன்றி தமக்கு வரும் பொருட்களை அன்றே விற்காமல் சேகரித்து வைத்து நல்ல விலை வரும் வரை காத்திருக்கிறர்.

வாசனைத்திரவிய மொத்த வியாபாரம் இரு மட்டங்களில் நடைபெறுகிறது: (1) பிரதான உற்பத்திப் பிரதேசங்களில் அமைந்துள்ள சிறுபட்டினங்களில் வியாபாரம் நடத்தும் மொத்தக் கொள்வனவாளர் (2) உற்பத்தி மாவட்டங்களின் பெரிய பட்டினங்களிலுள்ள மொத்தக் கொள்வனவாளர்கள். தொழிற்பாட்டின் அளவு எத்தகையதாயினும், மொத்தக் கொள்வனவாளர்களின் பணி மொத்தமாகச் சேகரித்து கொழும்புக்கு அனுப்புவதாகும்.

கொழும்பில் இயங்கும் கமிஷன் முகவர்களும் தரகர்களும் தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றிலும் வேறு சில்லறைப் பொருட்களிலும் வியாபாரம் செய்கின்றனர். கமிஷன் முகவர்கள் பலரும் ஆறு ஏலத்தரகர்களும் கொழும்பில் தொழில் நடாத்துகின்றனர். பின்னவர்கள் கொழும்பு தரகர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இலங்கை வர்த்தக சங்க அலுவலகத்தில் வாராந்தம் சில்லறைப் பொருட்களுக்கான ஏலத்தை நடாத்துகின்றனர். கமிஷன் முகவர்கள் விற்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்குமிடையில் நடுவர்களாக இயங்குவதன்றி உள்ளபடியான வியாபாரம் செய்வதில்லை. கமிஷன் முகவர்களும் தரககர்களும் தம் சேவைக்காக ஒரு சிறு கட்டணத்தை அறவிடுகின்றனர்.

உள்நாட்டுச் சந்தையமைப்பில் இறுதி நிலையிலிருப்பவர் ஏற்றுமதியாளராவார். இவர்கள் தம் ஏற்றுமதித் தேவைகளை க.மு.கள் அல்லது தரகர்கள் மூலம் பெற்றுக் கொள்கின்றனர். ஏற்றுமதியாளர்களிற் பெரும்பாலானோர் வெளிநாட்டு வாடிக்கைக்காரர்களிடமிருந்து கிடைக்கும் உறுதியான கட்டளைகளின் அடிப்படையில் அநேகமாக ஒப்பந்தங்களின் மீது பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர். மொத்த விற்பனையாளர்கள் சில்லறை வியாபாரிகளுக்கும் சிறுதொகைப் பொருட்களை விற்கின்றனர். மிளகைத் தவிர மற்றப் பொருட்கள் சிறுதளவே இவர்களால் விற்கப்படுகின்றன. சிறிய மொத்த வியாபாரிகள் நுகர்வோருக்கும் சில்லறையாகப் பொருட்களை விற்பதுண்டு.




**ஏற்றுமதிகள்:**

விலைகள்: சென்ற இருபது வருடங்களாகவாசனைத்திரவியச் சந்தையின் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாக இருந்துவருவ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் விலையேற்றமாகும். 1965 முதல் 1985 வரையான காலப் பிரிவில் எல்லா வாசனைத் திரவி யங்களதும் விலைகள் உறுதியாக உயர்ந்துள்ளன. சராசரி விலை களைப் பொறுத்தவரை கறுவா வின் விலை 137 சதவீதத்தாலும், கிராம்பு 121 சதவீதத்தாலும், ஏலம் 113 சதவீதத்தாலும், மிளகு 76 சதவீதத்தாலும், சாதி க்காய் 40 சதவீதத்தாலும் அதி கரித்தன. இவ்வதிகரிப்பு 1981 - 85 காலப்பிரிவின் விலைகளுடன் 1974 - 80 காலப்பிரிவின் விலை கள் ஒப்பு நோக்கிக் கணிக்கப் பட்டவையாகும்.

வெளிநாட்டுத் தேவை அதி கரிப்பு, வெளிநாட்டுக் கொள் வனவாளரின் உறுதியான கட்ட ளைகள், உள்நாட்டு உற்பத்தி குறைந்தமை என்பன ஏலக்கா யின் விலையேற்றத்திற்கான கார ணங்களாகும். மிளகைப் பொறு த்தமட்டில் உலகில் மிளகு உற் பத்தியில் முன்னணி நாடுகளான இந்தியா, பிரேஸில் ஆகியவற் றில் நிலவிய மோசமான கால நிலையின் விளைவாக ஏற்றுமதி குறைந்ததனால் சென்ற மூன்று ஆண்டுகளாக விலைகள் உயர்ந் தன. உலகில் உற்பத்தி குறைந் ததனால் 1985ல் உலகுக்குத் தேவையான மிளகில் 15,000 மெட்றிக் தொன் பற்றுக்குறை ஏற்பட்டது. இதன் காரணமாக மிளகு விலை மேலும் அதிகரிக்க லாம்.

**பரிமாணம்:** இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் வாசனைத் திரவியங்களில் மிளகைத் தவிர ஏனையவற்றில் பெரும் பகுதி ஏற்றுமதி செய்யப்படுகிறது. மிளகு குறிப்பிடத்தக்க அளவு உள்நாட்டில் நுகரப்படுகிறது. 1970 – 75 காலப்பிரிவை விட 1976 – 80 காலப்பிரிவில் ஏற்று மதி அளவு 26 சதவீதத்தால் அதிகரித்தது. 1976 - 80 ஐவிட 1981 - 85ல் 22 சதவீத அதிக ரிப்புக் காணப்பட்டது.

**பெறுமானங்கள்:** 1970 – 85 காலப்பிரிவில் ஏற்றுமதி அளவு அதிகரித்ததனாலும் விலைகள் உயர்ந்ததனாலும் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமானம் அதிகரித் தது. 1970ல் 5 கோடி ரூபாவாக இருந்த பெறுமானம் 1981ல் 79.2 கோடி ரூபாவாக அதிகரித் தது. அதன் பின்னர் கூடியும் குறைந்தும் 1980 நடுப்பகுதியில் 65 கோடி ரூபாவாக இருந்தது.




**பாரிய சந்தைகள்:** இலங்கை வாசனைத் திரவியங்களுக்கான பாரிய சந்தைகள் ஐரோப்பா, அமெரிக்கா, தென் அமெரிக்கா, மத்திய கிழக்கு, கனடா என்பன வும் தென், தென் கிழக்காசியா விலுள்ள சில நாடுகளுமாகும். பல்லாண்டுகளாக தென்னமெரி க்கா கறுவாவுக்கான பெரிய சந் தையாக விளங்கிவந்துள்ளது. 1985ல் அவுஸ்திரேலியா, அமெ ரிக்கா, மத்திய கிழக்கு, ஐரோப் பிய நாடுகளுக்கும் கணிசமான அளவு ஏற்றுமதி செய்யப்பட் டது. ஏலம் பெரும்பாலும் மத் திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்று மதியாகிறது. தேநீருக்கு வாசனை யூட்டுவதற்கு அங்கு ஏலக்காய் பயன்படுத்தப்படுகிறது. கிரா ம்பு, மிளகு, சாதிக்காய், சாதி பத்திரி என்பவற்றைப் பொறு த்தவரை பிரதானமாக ஐரோ ப்பா, அமெரிக்கா மத்திய கிழ க்கு, கனடா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**வளர்ச்சியும் அபிவிருத்தியும்**

சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம் 1972ல் தாபிக்கப் பட்டது. அதன் நோக்கங்களில் பயிர்ச் செய்கையை மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல், பதனிடல், பயிர்ச் செய்கையை ஒழுங்குபடுத் தல், புதுமுறைகளை ஊக்குவித் தல், ஏற்றுமதிக்கேற்ற புதுப்பயி ர்களை ஊக்குவித்தல் என்பன அடங்கும்.

**நிலப்பரப்பு விரிவாக்கம்:** சென்ற 15 வருட காலத்தில் வாசனைத் திரவியங்கள் பயிரிடப் படும் நிலப்பரப்பு குறிப்பிடத் தக்க அளவுக்கு விரிவடைந்துள் ளது. ஐந்தாண்டுத் திட்டம் (1972 - 76) 20,000 ஹெக்டயர் களில் வாசனைப் பயிர்கள் பயிரிடு தலை இலக்காகக் கொண்டிருந் தது. இதில் 54 சதவீதம் ஏற் கனவே வாசனைத் திரவியப் பயிர் கள் செய்யப்பட்ட நிலப்பரப்பா கும். இவ்விலக்கு, சிறு ஏற்றுமதிப் பயிர் உதவித் திட்டத்தின் மூலம் அடையப் பெறவிருந்தது. இத் திட்டம் 1972 செப்டெம்பரில் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட் டது. நடுகை அனுமதிப்பத்திரங் கள் 12140 ஹெக்டயர்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் திட் டத்துக்குரிய காலப்பிரிவில் 8036 ஹெக்டயர்களில் மட்டுமே நடுகை மேற்கொள்ளப்பட்டது. இது இலக்கில் 40% ஆகும். தனித் தனிப் பயிர்களைப் பொறுத்த வரை நடப்பட்ட நிலப்பரப்பு மிகச்சிறியதாகும். ஏலக்காய் 41 ஹெக்டயரிலும், கிராம்பு 429 ஹெக்டயரிலும், மிளகு 563



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெக்டயரிலும், சாதிக்காய் 191 ஹெக்டயரிலும் நடப்பட்டது. ஏலக்காய் மீள்நடுகைக்கும், புனருத்தாரணத்துக்கும் மட்டுமே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமையால் புது நடுகை மேற்கொள்ளப்படவில்லை.

இத்திட்டத்திற்கு முன் பயிர் பன்முகப்படுத்தல் பண உதவித் திட்டமொன்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 1970 ல் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் வருமானம் குறைந்த இறப்பர், தேயிலைத் தோட்டங்களுக்குரியதாகும். இது முறையே தேயிலை, இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ் மேலும் 1743 ஹெக்டயர் காணியில் சி. ஏ. பயிர்கள் நடப்பட்டன. இதில் 71 சதவீதமான நிலத்தில் (1246 ஹெ.) ஏற்கனவே வாசனைப் பயிர்கள் நடப்பட்டிருந்தன. இத்திட்டம் 1977 ல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. பச்சைத் தேயிலைக்கு ஓர் உத்தரவாத விலைத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டதனாலும் இயற்கை இறப்பரின் விலைகள் உயர்ந்ததனாலும் இவ்வுதவித்திட்டம் அதிகமாக நாடப்படவில்லை. இவ்வாறாக 1978 ல் சி. ஏ. பயிர்கள் நடப்பட்ட நிலப்பரப்பு 47,440 ஹெ. என மதிப்பிடப்பட்டிருந்தது. இதில் 25,440 ஹெக்டயரில் வாசனைப் பயிர்கள் நடப்பட்டிருந்தன. இது 54 சதவீதமாகும்.

சிறு ஏற்றுமதிப் பயிர் உதவித்திட்டம் 1978 ஆம் ஆண்டிலும் 1986 ஆம் ஆண்டிலும் திருத்தப்பட்டது. 1984 இறுதியில் இத்திட்டத்தின் கீழ் 30,684 ஹெக்டயர்களில் சி. ஏ. பயிர்கள் நடுவதற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதில் 1364 ஹெக். கறுவாவுக்கும், 1929 ஹெ. ஏலக்காய்க்கும், 2227 ஹெ. கிராம்புக்கும், 7023 ஹெ. மிளகுக்கும் 56 ஹெ. சாதிக்காய்க்கும் உரியதாகும். அனுமதிப்பத்திரங்கள் கலப்பற்ற பயிர் நடுகைக்காக வழங்கப்பட்டன. இத்துடன் 4085 ஹெ. வீட்டுத் தோட்டங்களுக்கும், 571 ஹெ. கலப்புப் பயிர் நடுகைக்கும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக 1978 ல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டங்களின் கீழும் சி. ஏ. பயிர்கள் நட எதிர்பார்க்கப்பட்டது. இத்திட்டம் அமுல் நடத்தப்பட்ட பல பிரதேசங்கள் சி. ஏ. பயிர் உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களாகும். ஆகையால் சி. ஏ. பயிர்களை அபிவிருத்தி செய்வது இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாயிற்று. குருநாகல், மாத்தறை, நுவரேலியா, மாத்தளை, பதுளை மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் 4400 ஹெக்டயர்களில் வாசனைத் திரவியங்கள் நடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இவ்வளவு நிலப்பரப்பில் நடுவதற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட போதிலும் இப்பரப்பு முழுவதிலும் பயிர் நடப்பட்டதாகக் கொள்ளமுடியாது. வறட்சி, பயிர்ச்சேதம், உதவிப் பணம் பெறுவதில் தாமதம் முதலியன இதற்குக் காரணமாகும்.

தனிப்பட்டவர்களும் பெருந்தொகையில் சி. ஏ. பயிர்களை நாடுகின்றனர். இவர்கள் தமக்குத் தேவையான கன்றுகளை தனியார்துறை நாற்று மேடைகளிலிருந்து பெற்றுக்கொள்கின்றனர். அரசாங்க ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட மரம் நடும் இயக்கங்கள் போன்றவற்றுக்கும் பெருந்தொகையான கன்றுகள் வழங்கப்பட்டன. சி. ஏ. பயிர்களைக் கொண்ட புதுத் தோட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்தகைய சிக்கல்கள் காரணமாக எவ்வளவு நிலப்பரப்பில் இப்பயிர்கள் நடப்பட்டுள்ளன என்பதைக் கணக்கிடுவது சாத்தியமானதல்ல.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உதவித்திட்டம்: இது சிறு ஏற்றுமதிப்பயிர்களின் செய்கையை ஊக்குவிப்பதற்கான திட்டமாகும். பயிரையும் பயிர்ச் செய்கை முறையையும் பொறுத்து இத்திட்டத்தின் கீழ் பண உதவியும் அத்துடன் அல்லது பொருளுதவியும் வழங்கப்படுகிறது. மக்கள் வங்கி நீள்தவணைக்கடன்களும் வழங்குகிறது. இத்திட்டம் 1972 ல் திணைக்களம் தொடங்கப்பட்டதோடு அறிமுகப்படுத்தப்பட்டது. வழங்கப்படும் உதவி சிறிதாயினும் திட்டத்திற் பல குறைபாடுகள் காணப்பட்டன. ஆகையால் திட்டம் 1978 ல் திருத்தப்பட்டது. பணவுதவி அதிகரிக்கப்பட்டதோடு, பணவுதவி வழங்கப்படாத பயிர்களுக்கும் பணவுதவி வழங்கப்பட்டது.

1984 ல் கலப்புப் பயிர் நடுகைக்கும் இத்திட்டத்தின் கீழ் பணவுதவி வழங்கப்பட்டது. 570 ஹெக்டயரில் கலப்புப் பயிர்கள் பயிரிடுவதற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இத்திட்டம் 1986 ல் மீண்டும் திருத்தப்பட்டது. பணவுதவி மேலும் அதிகரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மிகவும் விரும்பி நடப்பட்ட பயிர்கள் கோப்பியும் மிளகுமாகும். 1975 — 84 காலப்பிரிவில் அளிக்கப்பட்ட பணவுதவியில் 1/3 முதல் அரைவாசி வரையான உதவி இப்பயிர்களுக்களிக்கப்பட்டதாகும்.

திணைக்களம், எண்ணெய் வடித்தற் கூறுகளைத் தாபிப்பதற்கும் திருத்துவதற்கும் பிற பதனிடல் வசதிகளுக்கும் பணவுதவி அளிக்கிறது. வாசனைத் திரவியங்களுக்கு வெளிநாடுகளில் மிகச் சிறந்த சந்தையுண்டு. விளைபொருட்களின் உயர் தரத்தைப் பேணிப்பாதுகாத்தல் அவசியமாகும். ஆதலால் மேலதிகமாக வழங்கப்படும் இவ்வுதவி இந்நாட்டில் வாசனைத் திரவியங்கள் பதனிடும், எண்ணெய் வடிக்கும் கைத்தொழிலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

(27ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் சந்தையும் வாசனைத் திரவியங்களின் சந்தைப்படுத்தலும்

ஜே. என். எஸ். டயஸ்
(பிரதி பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை)

உலகச் சந்தையில் வருடாந்தம் சந்தைப்படுத்தப்படும் வாசனைத் திரவியங்களின் அளவு, 350,000 மெற்றிக் தொன்களுக்குமதிகமாகும். இக் கணியம் 1982ம் ஆண்டின் பெறுமான அடிப்படையில், 60 கோடி அமெரிக்க டொலரிலிருந்து 70 கோடி அமெரிக்க டொலருக்கான விலைப் பெறுமதியினைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. வாசனைத் திரவியங்களின் உலக வர்த்தகத்தில் மிக முக்கியமானதும், மொத்த அளவில் 35% னையுடையதுமான பண்டம் மிளகு ஆகும். வருடாந்தம் 10,000 மெற்றிக் தொன்னுக்குமேல் வியாபாரம் நடைபெறும் ஏனைய திரவியங்கள் செத்தல் மிளகாய், இஞ்சி, மஞ்சள் ஆகியவையாகும்.

உலகச் சந்தையில் இலங்கை வாசனைத் திரவியங்களின் பங்களிப்பானது சுமார் 10,000 மெ. தொன்னுகவுள்ளது; பெறுமதியில் இது ஏறக்குறைய 2.5 கோடி அமெரிக்க டொலராகும். செத்தல் மிளகாய், இஞ்சி, மஞ்சள் என்பவையின் உள்நாட்டுக் கேள்வி உயிர்வாக இருப்பதாலும், சரியான, தரமான வகைகளின் உற்பத்தி போதாமையினுலும் இலங்கை இவைகளை சந்தைப்படுத்துவதில்லை.

## நுகர்வு மாதிரி

முக்கியமாக மீள - ஏற்றுமதி நோக்கங்களுக்காக வாசனைத் திரவியங்களை சிங்கப்பூர் சந்தைப்படுத்திய போதிலும் இந்த நாடே வாசனைத்திரவியங்களுக்கான பாரிய சந்தையினைக் கொண்டிருக்கிறது. கூட்டாக பத்து ஐரோப்பியச் சமூக நாடுகளும் சேர்ந்து அதிகளவு இறக்குமதியினை மேற்கொள்ள முடியுமாயினும் தனித்த நுகர்ச்சிச் சந்தையைப் பொறுத்தவரையில் ஐக்கிய அமெரிக்காவே பாரிய நுகர்ச்சிச் சந்தையினைக் கொண்டிருக்கிறது.

வாசனைத் திரவியங்கள் அநேகமாக முழுதாகவோ அல்லது தூள் வடிவிலோ நுகரப்படுகிறது. வளர்முக நாடுகளிலும், கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளிலும் வாசனைத் திரவியங்களின் நுகர்ச்சி அளவானது, குடித்தொகையின் பருமன், வருமானம், பொருளாதார நிலைமை, சமூக, சமையற் பழக்க வழக்கங்கள் என்பவற்றில் தங்கியுள்ளது. வளர்முக நாடுகளில் வாசனைத் திரவியங்கள் அநேகமாக வீட்டுத் துறைப்பகுதியிலேயே நுகரப்படுகிறது. கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளில் இவற்றின் நுகர்ச்சியானது கைத்தொழிற் துறையில் மிக அதிகமாகும். முக்கியமாக இறைச்சி, மீன், மரக்கறி உற்பத்திகள், பேக்கரிப் பொருட்கள் போன்றவற்றைக் கொண்ட உணவு பதனிடும் கைத்தொழில்களிலும், தயாரிக்கப்பட்ட பண்டங்களில் தூள் திரவியங்களாக சிறிய பக்கெட்டுகளிலும் இது உபயோகிக்கப்படுகிறது. சிறிய கணியங்களைக் கொண்ட வாசனைத் திரவியங்கள் உணவுச்சாலைகள், சிற்றுண்டிச்சாலைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற நிறுவகப் பகுதிகளிலும் உபயோகிக்கப்படுகிறது.

கைத்தொழிற் துறையானது, மருந்துகள், நறுமணப் பொருட்கள், சுகந்தங்கள் போன்றவற்றினை உற்பத்தி செய்யும் உணவு பதனிடுதலல்லாத துறையினையும் கொண்டுள்ளது. வாசனைச் சரக்கு உற்பத்தியில் வாசனைத்திரவிய ஒலியோரெசின்களையும், வாசனைத்திரவிய எண்ணெய்களையும் கொண்ட இன்றியமையா எண்ணெய்களே இக் கைத்தொழில்களின் மூலப் பொருட்களாக அநேகமாகப் பாவிக்கப்படுகின்றன. வாசனைத் திரவிய எண்ணெய்கள்/ஒலியோரெசின்கள் என்பவை அவற்றின் மூலவள நாடுக்ளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன; அல்லது உணவு பதனிடுதல் அல்லாத கைத்தொழில்களின் மூலம் வடிக்கப்பட்டோ, பிரித்தோ எடுக்கப்படுகின்றன. வாசனைத் திரவியங்களையும், சிட்ரனெல்லா, எலுமிச்சைப் புல், தோடை, எலுமிச்சை எண்ணெய் போன்றவற்றையும் ஒருங்கே கொண்டதான இன்றியமையா எண்ணெய்க்கு வருடாந்தம் 40,000 மெ. தொன்னுக்கும் அதிகமான கேள்வியுள்ளது. தோடை, துளசி, எலுமிச்சை, யூகளிப்டஸ், சிட்ரனெல்லா எலுமிச்சை, லெமன் எண்ணெய் ஆகியவை மொத்தக்கேள்வியில் 75% அளவினை வகிக்கின்றன. வாசனைத்திரவிய ஒலியோரெசினுக்கான வருடாந்த உலகக் கேள்வி ஏறத்தாழ, 1350 மெ. தொன்னுகவும், கரிய, மிளகு, பப்ரிக்கா என்பவற்றுக்கான வருடாந்த உலகக் கேள்வியானது 65% ஆகவுமுள்ளது.

## வர்த்தக அமைப்புமுறை

சர்வதேச தரகர்கள், விற்பனையாளர்கள், முகவர்கள் ஆகியோர், வாசனைத் திரவியங்களைப் பதனிடுவோருக்கு விற்றல் அல்லது இவற்றைப் பதனிடுவோர் உற்பத்தி நாடுகளின் மூலவளங்களிலிருந்து நேரடியாகக் கொள்வனவு செய்தல் என்பதே இந்த வர்த்தக அமைப்பின் அடிப்படையாகும். வர்த்தக நிலையங்களினது பங்களிப்பானது வெகுவாக குறைந்து கொண்டு வருகின்ற போதிலும், நியூயோர்க், லண்டன், ஹம்பேர்க், ரொட்டர்டாம், சிங்கப்பூர் ஆகியவை மிக முக்கிய வர்த்தக நிலையங்களாகும். பதனிடல் செய்யப்பட்ட வாசனைத் திரவியங்களை சில்லறை விற்பனையாளர்களுக்கு விற்கும் மொத்த வியாபாரிகளின் பங்களிப்புகூட, வாசனைத் திரவியங்களைப் பதனிடல் செய்வோரும், பொதி செய்வோரும், சில்லறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாளர்களுடன் நேரடியாகத் தொடர்புவைப்பதன் காரணமாக குறைவடைந்து வருகிறது.

வளர்முக நாடுகளில், குறிப்பாக வாசனைத் திரவியங்கள் உற்பத்தி செய்யப்படும் நாடுகளில், ஏற்றுமதியாளன், பொதுவாக உற்பத்தியாளனாக இருப்பதில்லை. சிறு தோட்டக்காரர்களே இங்கு உற்பத்தியாளர்களாகும். ஏற்றுமதியாளர் தமக்குத்தேவையான தொகைகளை நடுத்தர மனிதரிடமிருந்து (இலங்கையில் ஏறக்குறைய 3 - 4 நடுத்தர மனிதரிடமிருந்து) பெறுகின்றனர். இங்கு நடுத்தர மனிதர்கள், வாசனைத் திரவியங்களைச் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், ஆரம்பப் பதனிடுதல் செய்தல் (உலர்த்தலும், துப்பரவாக்குதலும்), வகைப்படுத்தல், பொதிபண்ணுதல் ஆகிய கடைமைகளை நடைமுறைப்படுத்திய பின்பே, வாசனைத் திரவியங்களை ஏற்றுமதியாளரிடம் கையளிக்கின்றனர். அத்துடன் உற்பத்தியாளர்களின் சமூகக் கடமைகளையும் இந் நடுத்தரமனிதர் செய்கின்றனர். பிரதிகூலங்கள் பல இருந்த போதிலும், உள்நாட்டு சந்தைப்படுத்தும் அமைப்பில் இந்த இடைத்தரகர்கள் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றனர்.

வாசனைத் திரவிய வர்த்தகம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு வியாபாரம் அல்ல. கடந்த பல வருடங்களாக, நன்மதிப்பு பெற்ற ஏற்றுமதியாளர்களும், இறக்குமதியாளர்களும் இவ்வர்த்தகம்பற்றி திடமான தொடர்பு முறையையும், விளக்கத்தினையும் பெற்றுள்ளனர். இத்தகைய இணக்கமானது, ஏற்றுமதியாளர்களுக்கும், இடைத்தரகர்களுக்கும் இடையிலும் காணப்படுகிறது. இதன் விளைவாக, வாசனைத் திரவியச் சந்தையில் புதிதாகச் சேரும் ஒரு ஏற்றுமதியாளனின் நுழைவுச் செலவு கணிசமான அளவு உயர்வாகவுள்ளது.

உற்பத்தி நாடுகளின் புதிய அபிவிருத்தி முயற்சி யாதெனில், இந்தியாவிலுள்ள வாசனைத் திரவிய ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில், மலேசியாவிலுள்ள மிளகு சந்தைப்படுத்தும் சபை, கிறெனடாவிலுள்ள சாதிக்காய் கூட்டுறவுக்கழகம், இலங்கையில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை போன்ற பல ஊக்குவிப்பு நிலையங்களை ஏற்படுத்துதல் ஆகும். இத்தகைய நிறுவகங்கள்/கழகங்கள் என்பனவற்றின் முக்கிய குறிக்கோள், பொருளின் தரம், தொகை, விலை ஆகியவற்றின் அடிப்படையில் இதற்கான சர்வதேசக் கேள்வியினை ஓத்துப்பார்த்து ஏற்றுமதியினை விருத்திசெய்தல் என்பதாகும். உள்நாட்டுச் சந்தைப்படுத்தல் முறைமையினை, அபிவிருத்தி செய்வதன் மூலம் உற்பத்தியாளனுக்கு உண்மைப் பெறுமதியான தோட்ட விலை கிடைப்பதற்கும் இடம் கிடைக்கிறது.

## கேள்வியும் நிரம்பலும்

வாசனைத் திரவியங்கள் பல்வேறு நிலைமைகளில் வளரக் கூடியனவாதலாலும், மிளகாய் இஞ்சி, மஞ்சள் போன்ற பிரதான திரவியங்கள் குறுங்காலப் பயிர்களாக இருப்பதாலும், வாசனைத் திரவியங்களின் நிரம்பலானது உலகச் சந்தையில் ஒரு மீள்தகவுடைய நிரம்பலைக் கொண்டதாக காணப்படுகிறது. வாசனைத் திரவியங்களில் கூட, காலநிலை, விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக பிரத்தியேகமான சுழற்சி ஏற்றவிறக்க நிரம்பலை காண முடிகிறது.

குறுகிய காலத்திற்கு, வாசனைத் திரவியங்களுக்கான கேள்வியானது நிலையானதும், விலைமாற்றம் அற்றதாகவும் காணப்படுகிறது. மேலும், உயர்ந்த விலைகள், வாசனைத் திரவியங்களுக்குப் பதிலாக மாற்று வழிகளைப் பிரயோகிக்க வழிகோலும். விசேஷமாக கைத்தொழிற் துறையில், பென்னல் என்பதற்குப் பதிலாக டில் விதை, கறுவாவிற்குப்பதிலாக கசியா, ஏனைய செயற்கைப் பொருட்கள் (வனிலாவிற்குப் பதிலாக வனிலின்) என்பவை உதாரணங்களாகும்.

இலங்கையின் எல்லாப் பிரதான வாசனைத் திரவியங்களும் (கறுவா, மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலக்காய், கராம்பு) நீண்டகால உற்பத்தித்திறன் உடைய பயிர்களாகவும், இவற்றின் உற்பத்தியானது நெகிழ்ச்சிற்றதாகவும் காணப்படுவதால், உலகச் சந்தையில் ஒரு நிலையான சிறிய பங்கினை வகிக்கின்றன. இலங்கை வாசனைத் திரவியங்களின் இன்னொரு முக்கிய அம்சம், அதிகளவு எண்ணெய் வீதம், அதிகளவு காரம் போன்ற, சந்தையில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய சிறந்த, பிரிக்கவொண்ணாத குணவியல்புகளை இவை கொண்டிருப்பதாகும். சில சமயங்களில் உலகச் சந்தை விலைகளை விட இலங்கையினது ஏற்றுமதி விலைகள் உயர்வாக இருக்கின்ற போதிலும், மேற்கூறிய குணாதிசயங்கள் காரணமாக, வாசனைத் திரவியங்களை உலகச் சந்தையில் தொகையாக சந்தைப்படுத்துவதில் (கறுவா, கராம்பு என்பவை தவிர) இலங்கைக்கு ஒருவித கஷ்டமும் இருப்பதில்லை.

இலங்கையானது, வாசனைத் திரவியங்களின் நிரம்பலை அதிகரிக்கும் முகமாக (கறுவா, கராம்பு என்பவை தவிர) வர்த்தக ரீதியில் பயிர் செய்யப்படும் தோட்டங்கள் மூலம் நீண்டகால உபாயங்களை விருத்தி செய்ய வேண்டுமென ஆலோசனை கூறப்படுகிறது. வர்த்தக ரீதியிலான பயிர்ச் செய்கைகளில், உலகச் சந்தைக்கு வேண்டிய தரம், விலை, உற்பத்தி ஸ்திரம் என்பவற்றுக்கு ஒத்துப்போகக் கூடியவாறு அத்தகைய எண்ணக்கருவினைக் கொண்ட சந்தைக்கு வேண்டிய வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்யக்கூடிய சிறந்த சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

## பெறுமதி சேர்க்கப்பட்ட வாசனைத் திரவியங்களை சந்தைப்படுத்தல்

பெறுமதி சேர்ப்பதன் முக்கியத்துவம் யாதெனில் அது மூல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளத்துக்கான பிரதிபலனை அதிகரிக்கிறது. மூலவளத்தில் பெறுமதி சேர்க்கப்படும்போது, போதிய தரமுள்ள மூலப் பொருட்கள் இடைக்கக்கூடியதன்மை, குறைந்த போக்குவரத்துச் செலவு, குறைந்த ஊழியச் செலவு போன்ற இயல்பான அநுகூலங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. வடிகட்டல், அரைத்தல், பொதி பண்ணுதல், வர்த்தகக் குறியிடுதல் என்பன இப் பெறுமதி சேர்க்கப்படும் தொழில்நுட்பத்தின் சிலவாகும். எனினும், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் பின்வரும் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

(1) நுகர்ச்சி நாடுகளில் தீர்வைத் தடைகள்.

(2) நுகர்ச்சி நாடுகளில் தீர்வையற்ற (சுகாதார ரீதியான) தடைகள்.

(3) நுகர்ச்சி நாடுகளில், சில்லறை விற்பனையாளர், வாசனைத் திரவியங்களைப் பதனிடுவோர், பொதி பண்ணுவோர் என்போருக்கிடையே காணப்படும் நிலையான நீண்டகாலத் தொடர்புகள்.

(4) வாசனைத் திரவியங்களைப் பதனிடுவோருக்கு உற்பத்தியிடத்தில் சந்தை பற்றிய போதிய தகவலின்மை.

(5) இயந்திர சாதனங்களுக்காக வேண்டிய அதிக முதலீடு.

(6) உற்பத்தியிடத்தில் பல்வேறு வகைப்பட்ட வாசனைத் திரவியங்கள் கிடைக்க முடியாமையும், பொதி செய்வதற்கு வேண்டிய பொருட்கள் கிடைக்காமையும்.

(7) நுகர்ச்சிச் சந்தைகளில், விளம்பரங்களுக்கும், பிரசுரங்களுக்குமாக அதிகளவு செலவு.

இலங்கையிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய பொருளாக வாசனைத் திரவியங்களின் எண்ணெய் இருந்து வருகிறது. அண்மைக் காலமாக, துண்டுகளாக்கப்பட்ட, அல்லது மாவாக்கப்பட்ட கறுவா, மேற்கோதுஅற்ற சாதிக்காய், ஏலக்காய் விதை போன்றன ஆரம்பப் பதனிடப்பட்ட நிலைகளில் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்துள்ளன. சில்லறை விற்பனைக்காக, ஆரம்பப் பதனிடப்பட்ட வாசனைத் திரவியங்கள் மேலும் தூள் வடிவிலும், நன்கு கலக்கப்பட்டும், நியமங்கள் செய்யப்பட்டும் பொதி பண்ணப்பட்டும், வர்த்தகக் குறியீடு செய்யப்பட வேண்டியும் உள்ளது. இலங்கையானது ஏலக்காய், துண்டுகளாக்கப்பட்டதும், மாவாக்கப்பட்டதுமான கறுவா, வாசனைத் திரவியங்களின் கூட்டு, கறித் தூள் ஆகியனவற்றை வர்த்தகக் குறியீடுகள் செய்யப்பட்ட பொதிகளில் பொதி செய்து ஒரு குறிக்கப்பட்டளவு தொகைகளை ஏற்கனவே ஏற்றுமதி செய்துள்ளது. பெறுமதி சேர்க்கப்பட்ட வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்வோருக்கு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிக ஊக்குவிப்புகளை அளித்து வருகிறது.

மேற்கூறப்பட்டுள்ள தடைகள் காரணமாக, பதனிடப்பட்ட வாசனைத் திரவியங்களுக்கான உலகச் சந்தையில் புதியவர்கள் சேர்வது கஷ்டமாகவுள்ளது. எனினும், இத்தகைய நிலைமையினை மேற்கொள்ளுவதற்கு, இலங்கையானது சந்தை மூலை முடுக்குகள், புதிய சந்தைகள், புதிய கொள்வனவாளர்கள் ஆகியனவற்றை இனங் கண்டு கொள்ள வேண்டும். இலங்கையில் அதிகளவில் சனத்தொகை இருப்பதாலும், அபிவிருத்தியடைந்த சந்தைகளிலுள்ள நடுத்தர வருமானப் பிரிவினருக்கு உதவும் அந்நிய முதலீட்டாளர்கள்/ முகவர்கள்/கொள்வனவாளர்கள் இனங் காணப்பட்டு இருப்பதாலும், இத்தகைய தொடர்பான அநுகூலங்களை சில ஆசிய, சோஷலிச நாடுகள் கொண்டிருப்பதாலும் ஆரம்பப் பதனிடப்பட்ட வாசனைத் திரவியங்களுக்கும், வர்த்தகக் குறியிடப்பட்டு, சில்லறையாகப் பொதி செய்யப்பட்ட வாசனைத் திரவியங்களுக்கும் இலங்கையில் நல்ல வாய்ப்புகள் காணப்படுகின்றன. சந்தை ஆய்வாளர்கள் இத்தகைய அம்சங்களை இனங்காணும்போது, இலங்கையின் வாசனைத் திரவிய ஏற்றுமதியாளர்களினதும், உற்பத்தியாளர்களினதும் மூலவளக் கொள்ளளவுத்திறன் பற்றியும், உற்பத்தி சேர்க்கக்கூடியதன்மையின் அளவு பற்றியும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். சந்தை ஆய்வின் இன்னொரு முக்கிய அம்சம் யாதெனில், இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடியதும், நல்ல கிராக்கியுள்ளதுமான கராம்புத் தைலம், வாசனைத் திரவியங்களின் சாரத்திலிருந்து தயாரிக்கப்படும் சுகாதார, வைத்திய உற்பத்திகள் போன்ற பதனிடப்பட்ட வாசனைத்திரவிய உற்பத்திகள் இனங் காணப்பட வேண்டும்.

சந்தைபற்றிய ஆய்வின் முடிபுகள் நல்லமுறையில் திட்டமிடப்பட்ட சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் அமுலாக்கப்படவேண்டும். சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் கொள்வனவாளர் / விற்பனையாளர் ஆகியோருக்கிடையிலுள்ள தொடர்பினைவிட, இனங்காணப்பட்ட சந்தைப் பிரிவுகளில் நுகர்வோரின் விழிப்புத்தன்மை மிக முக்கியமானதாகும். இதனை ஊக்குவிக்க எடுக்கும் முயற்சிகளின்போது, சுப்பர் மார்கெட், பண்டசாலைகள் போன்ற சில்லறை விற்பனை நிலையங்கள் சரியான இடங்களில் இனங்காணப்படவேண்டும். சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில், வெகுசனத் தொடர்புச்சாதனங்கள் மூலம் விளம்பரம் செய்வதோடு, இலங்கையின் வாசனத் திரவியங்களை இனம் பிரித்து அறியக்கூடிய விளம்பரங்களைக் கொண்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், இலங்கை உற்பத்தியின் சில வர்த்தகப் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஊக்குவித்தல், வாசனைத் திரவியங்களின் மாதிரிகளையும், அவற்றின் கூட்டுக்களையும் சிறிய பக்கெட்டுக்களில் அடைத்து அன்பளிப்பாக வழங்குதல் போன்ற ஊக்குவிப்பு தொழில் நுட்பங்களும் இந் நிகழ்ச்சித் திட்டங்களில் சிறந்த முறையில் உபயோகிக்கப்படலாம். இவை ஏற்றுமதி அபிவிருத்தி நிறுவனங்கள்/அமைப்புக்கள் என்பவற்றின் கடமைகளாகும். பதனிடப்பட்ட வாசனைத் திரவிய உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு சலுகைவசதிகளை அளிப்பதும், வெளிநாட்டு இணைப்பாளர்களை இனங்காண்பதும் ஏனைய இரு முக்கிய கடமைகளாகும்.

இங்கு, வாசனைத் திரவிய உற்பத்தியானது, ஏனைய வளங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் இதேவகையான உற்பத்திகளிலிருந்து வேறுபடுத்தக்கூடிய வகையில் உற்பத்தி செய்யப்படுகிறது. வாசனைத் திரவிய உற்பத்திவகையீட்டில் தரம், சுத்தம், தோற்றம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. உதாரணமாக, ஏனைய வளங்களிலிருந்து பெறப்படும் மஞ்சளிலும் பார்க்க, இந்திய மஞ்சள் தரங் கூடியதாக கணிக்கப்படுகிறது. சிறந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மூலம் வகையீடு செய்யப்பட்ட உற்பத்திகளுக்கு ஒரு தனியுரிமை போட்டி நிலைமை உருவாக்கப்படுகிறது. இதே போன்று, நல்ல கொடுப்பனவு நியதிகள், நம்பந்தகுந்த வழங்கல்கள், கொள்வனவாளர்களின் தேவைக்கேற்ற வழங்கல்களை நடைமுறைப்படுத்தல் ஆகியன மூலம் சேவையினையும் வகையீடு செய்யக்கூடியதாகவுள்ளது.

இலங்கை வாசனைத் திரவியங்கள் இயல்பாகவே உயர்ந்த ரகத்தின அதாவது அதிகளவு எண்ணெயைப் பற்றும், அதிகளவு ஒலியோரெசின்களைக் கொண்டவையாகவும் உள்ளன. ஏனைய வளங்களிலுள்ள வாசனைத் திரவியங்களைவிட இலங்கையின் வாசனைத் திரவியங்களில் காணப்படும் இத்தகைய விசேஷித்த அநுகூலங்கள் பற்றி ஆராய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். உற்பத்தி வகையீட்டின் ஒரு முக்கிய அம்சம் யாதெனில் இலங்கையின் வாசனைத் திரவியங்களுக்கு நல்ல தரமுள்ள குறியீட்டினை அல்லது வகையினை அபிவிருத்தி செய்தலாகும். பிரசுரப்படுத்தலுக்கும், விளம்பரங்களுக்கும் செலவுகள் மிக் அதிகமாகும். எனினும், இனங்காணப்பட்ட சந்தைப் பிரிவுகளில் விளம்பரப்படுத்துவதன் மூலமும், விளம்பரங்களுக்காக செலவு குறைந்த சாதனங்களைத் தெரிவு செய்வதன் மூலமும் இச்செலவுகள் இன்னும் குறைக்கப்படலாம். இது மீண்டும் ஏற்றுமதி ஊக்குவிப்பு நிறுவனங்கள்/அமைப்புக்கள் ஆகியவற்றினது கடமையாகும்.

கொள்வனவாளர்களை கவருவதில் சேவை வகையீடு கூட மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. நல்ல தரத்தின் உறுதித்தன்மை, உரியமுறைப்படி கப்பலேற்றுதல், இலகுவான அடிப்படையில் செலுத்தக்கூடிய நியதிகள், ஏற்கனவே இணக்கங் காணப்பட்ட விலைகளையும், தொகைகளையும் செயற்படுத்துதல், சந்தைத் தகவல்களின் பரிமாற்றம் என்பன ஒரு விற்பனையாளனை இன்னொரு விற்பனையாளரிடமிருந்து வேறுபடுத்தக்கூடிய சில சேவைகளாகும்.

### சேவை வசதிகள்

ஒரு அலகுக்கான செலவினைக் குறைப்பதே இவ் உள்ளக, சேவை வசதிகளின் முக்கிய நோக்கமாகும். வாசனைத் திரவியங்கள் நெகிழ்ச்சியற்ற கேள்வியினைக் கொண்டிருந்தாலும், இதன் உயர் விலைகள் கொள்வனவாளர்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்கு தூண்டக்கூடியன. அத்துடன் இவை, நல்ல பிரதியீடுகள் உருவாவதை ஊக்குவிக்கக் கூடியனவாகவும், செயற்கைப் பொருட்கள் உருவாவதற்கு வழியமைக்கக் கூடியனவாகவும் காணப்படுகின்றன. உலக சந்தை விலைகளில் அல்லது அவற்றைவிடக் குறைவாக விலைகளைப் பேணும் போது, கேள்வியானது இடத் திற்கிடம் இடம் பெயரலாம். விலையுடன், நல்ல ரகம், சிறந்த சேவை என்பன கிடைக்கப்படும் போது முழுதளவிலான அநுகூலமும் கிடைக்கின்றது.

மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சலுகையடிப்படையில் கடன்வசதி, யதார்த்தமான அந்நியச் செலாவணி மாற்றுவீதங்கள், சலுகையடிப்படையில் கப்பற் கட்டணங்கள், சிறந்த தரக் கட்டுப்பாடு, தரத்தினை அபிவிருத்தி செய்வதற்காகவும், நல்ல தரத்தினைப் பேணுவதற்காகவும் ஒரு சூழலை விருத்தி செய்தல், கப்பல் போக்குவரத்தினதும், அவற்றின் சேவைகளினதும் அபிவிருத்தி (விசேடமாக பழுதடையக்கூடிய பண்டங்களுக்காக) என்பன உலகச் சந்தையில் போட்டித் தன்மையினை ஏற்படுத்தக்கூடிய சில முக்கிய உள்ளக, சேவை அபிவிருத்திகளாகும். சிறந்த உள்ளக, சேவை வசதிகள் என்பதன் கருத்து யாதெனில் உற்பத்தியாளர் கூட நல்ல விலையினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதாகும்.

வர்த்தக ரீதியில் பயிர் செய்வதற்காக மேற்குப் பிராந்தியத்திலுள்ள காணி நிலங்களை இனங்கண்டு அவற்றை உரித்தாக்குவதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளல், உற்பத்தி, பதனிடல் தொழில் நுட்பங்களைப்பற்றி வெகு சனத் தொடர்பு சாதனங்கள் மூலமும், விஸ்தரிப்பு நடைமுறைகள் மூலமும் சிறு தோட்டக்காரருக்கு கல்வி புகட்டுதல், விலைத் தகவல்கள் கிடைப்பதற்கான ஏற்பாடு, உற்பத்தியாளர் அமைப்புக்களை அமைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தல் என்பன வாசனைத் திரவியங்களின் நிரம்பலில் ஒரு நேரிய தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய சில முக்கிய உள்ளக, சேவை வசதிகளாகும்.

( 21ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைத்த உடைகள்

## புதிய அமெரிக்க அனுமதிப்பங்கு ஆசிய வளர்முக நாடுகளுக்கு ஒரு தடை

தைத்த உடைகள், புடவை ஆகியவற்றின் ஏற்றுமதி இந்நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் கால் பங்குக் காரணமாகவுள்ளது. உண்மையில் இது 1986 ல் தேயிலை ஏற்றுமதியினுல் கிடைக்கும் சம்பாத்தியத்தை விஞ்சிவிட்டது. தைத்த உடைகளின் ஏற்றுமதி எவ்வளவு முக்கியமானது என்பது, 1972 ல் இவ்வேற்றுமதியிலிருந்து 70 லட்சம் ரூபாவும் 1975 ல் 2.5 கோடி ரூபாவும், 1978 அளவில் 50 கோடி ரூபாவும் கிடைக்கப்பெற்றது. ஆனுல், 1982 அளவில் இதனுல் கிடைத்த வருமானம் 350 கோடி ரூபாவையும், 1984ல் 750 கோடி ரூபாவும், 1986 ல் 960 கோடி ரூபாவும் கிடைத்தது என்பதிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது. 1972 ல் இடம்பெற்ற மொத்த ஏற்றுமதியினுல் கிடைத்த மொத்த சம்பாத்தியத்தில் தைத்த உடைகள் ஏற்றுமதியின் பங்கு 0.4 சதவீதம் மட்டுமேயாகும்; 1980ல் இது 10 சதவீதமாக அதிகரித்தது; 1982 ல் 16 சதவீதமாகவும், 1984 ல் 20 சதவீதமாகவும், 1986 ல் 28 சதவீதமாகவும் அதிகரித்தது. இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி சம்பாத்தியத்தில் தைத்த உடை எவ்வளவு முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதை இது காட்டுகிறது. ஆனுல் துரிதமாக வளர்ந்து வரும் அமெரிக்கச் சந்தை மோசமாகலாம் என்ற பயமுறுத்தல் தோன்றியுள்ளது.

வளர்முக நாடுகள் ஏற்றுமதி நோக்குடைய கைத்தொழில் மயமாக்கலை அடிப்படையாகக் கொண்ட உத்தியைக் கைக்கொள்ள ஆரம்பித்ததிலிருந்து இந்நாடுகள் காப்புவாதத்தின் கட்டுப்பாடுகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக்காப்புவாதம் குறிப்பாக அபிவிருத்திச் சந்தைப் பொருளாதார நாடுகளிலுலேயே மேற்கொள்ளப்படுகிறது. வளர்முக நாடுகள் தம் உற்பத்திப்பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு இந்நாடுகளையே நம்பியிருக்கின்றன. இந்நாடுகளின் காப்பு நடவடிக்கைகளில் மிகவும் பாதகமானது அனுமதிப்பங்கு முறையாகும். அண்மைக் காலத்தில் இம்முறையை இறக்குமதி நாடுகள் வலுப்படுத்தியுள்ளன.

அனுகூலமிக்க தைத்த உடைக் கைத்தொழில் வளர்முக நாடுகளின் பொருளாதாரத்திற்கு அச்சாணியாக விளங்குகிறது. இதிலிருந்து கிடைக்கும் வருமானம் வெளிநாட்டுச்செலாவணிப் பற்றுக் குறைகளை நீக்குவதற்குக் கணிசமான அளவு உதவுகின்றது. அத்துடன் பெருமளவில் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குகின்றது. தைத்த உடை ஏற்றுமதிகள் பெரும்பாலும், பல் நார் ஏற்பாடு, இருபக்க ஒப்பந்தங்கள் ஆகியவற்றிற்கமைய மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வொப்பந்தங்களின் படி ஏற்றுமதி நாடுகளுக்கு அனுமதிப்பங்குகள் வழங்கப்படுகின்றன. இவ்வாருக ஏற்றுமதி நாடுகள் அனுமதிப்பங்குகள் பெற்ற நாடுகளுக்கு உத்தரவாதச் சந்தைகள் கிடைக்கின்றன. இந்நாடுகள் அவற்றுக்குக் கிடைக்கும் அனும்திப் பங்குகளின் அளவு பற்றியும் அனுமதிக்கப்பட்ட வளர்ச்சி வீதம் பற்றியும் திருப்தி அடையாவிடினும், பங்குபற்றும் எல்லா நாடுகளும் பயனடையக் கூடிய வகையில் வழங்கல் மூலங்கள் பரவலாக அமைந்துள்ளன.

அவுஸ்திரேலியா போன்ற சில இறக்குமதி நாடுகள் உலகளாவிய ஒரு அனுமதிப் பங்கு முறையைச் செயல்படுத்துகின்றன. இதனடிப்படையில் உள்நாட்டு இறக்குமதியாளர்களுக்கு ஒவ்வொரு உற்பத்திப் பொருளிலும் குறிப்பிட்ட ஓரளவு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்முறைமை, குறித்த எந்த நாட்டுக்கும் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நிலையை உற்சாகப்படுத்துவதில்லை. இறக்குமதியாளர்கள் தமக்குப் பயனளிப்பதாகக் கருதினுல் அவர்கள் சில நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம்; அல்லது பல நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம். இம் முறையானது, உயர்ந்த, நடுத்தர அல்லது தாழ்ந்த நிலையில் கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளிடையே வேறுபாடு பாராட்டுவதில்லை.

நாட்டு அடிப்படையிலான அனுமதிப்பங்கு முறையின் கீழ் நாடுகளிடையிலான வித்தியாசம் கருத்திற் கொள்ளப்படுகிறது. இது, புதிதாகத் தொடங்கிய கைத்தொழில்களோடு வளர்வதற்குப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு அவற்றின் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. தைத்த உடைகளை இறக்குமதி செய்யும் மிகப் பெரிய நாடான அமெரிக்கா, இதுவரை, உயர் நிலையில் கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளுக்கெதிராகத் தாழ்நிலையில் கைத்தொழில் மயமாக்கப்பட்டுள்ள நாடுகளுக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் நாட்டை அடிப்படையாகக் கொண்ட அனுமதிப் பங்கு முறையைச் செயல்படுத்தி வந்தது. இம்முறையின் கீழ்க் கூட அமெரிக்க அரசியல் அதன் செல்வாக்கைப் பிரயோகித்துள்ளது. அரசியல் நெருக்குதல் அதிகரித்து வருவதனுல் ஓர் உலகளாவிய அனுமதிப் பங்கு முறையைச் செயல்படுத்த அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது. இது ஏற்றுமதி நாடுகளுக்கு ஒரு தடையாக அமையலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் காப்பு வாதத்திற்கு எதிரான கொள்கைகளின் கடுமையைக் குறைக்க எத்தனித்த ஜனுதிபதியை, அபிவிருத்தியடையும் நாடுகளிலிருந்து வந்து குவியும் மலிவுப் பொருட்களின் அளவைக் குறைக்கும்படி உள்நாட்டுத் தொழிலாளர் இயக்கமும் கைத்தொழில் தாபனங்களும் வற்புறுத்தி வருகின்றன. பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கும், டொலரின் பெறுமானத்தைப் பாதுகாப்பதற்கும் ஒரு வழியாக சர்வதேச சுதந்திர வர்த்தகத்தை ஆதரித்த ஜனுதிபதி இத்தகைய சந்தப்பங்களில் எல்லாம் தமது ஐயப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார். இக் கொள்கைச் செயற்பாடுகளிலிருந்து அவருக்கு வெற்றி கிடைத்து நாட்டுக்குள் பெருந்தொகையான மூலதனம் வந்திருக்கிறது. தொடர்ச்சியாக வரவு செலவுத் திட்டப் பற்ருக்குறை இருந்துவரினும் உலகளாவிய ஒதுக்க நாணயம் என்ற வகையில் அமெரிக்க டொலரின் நிலை பேணப்பட்டு வருகிறது.

வளர்முக நாடுகளிலிருந்து பெருந்தொகையான வியாபாரப் பொருட்கள் வந்து குவிகின்ற நிலைமைக்கும், அமெரிக்காவில் கைத்தொழில்களின்திறமை குறைந்திருப்பதற்கும் அமெரிக்க டொலர் பலப்படுத்தப்பட்டமை ஒரு காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. தைத்த உடைகளில் சர்வதேச வர்த்தகத்தைப் பாதிக்கக்கூடிய செயல்களை உட்படுத்தி சட்டமூலங்கள் நிறைவேற்றப்படும்போதெல்லாம் ஜனுதிபதி தம் தடை அதிகாரத்தைப் பிரயோகித்துள்ளார். பெரும்பான்மையைக் கொண்ட சட்டசபை பல வரையறுக்கும் சட்டங்களைக் கொண்டுவந்துள்ளது.

உலகளாவிய அனுமதிப் பங்குகளை விதிப்பதன் மூலம் அமெரிக்க புடவை நலன்களுக்கு பரந்த அடிப்படையிலான இறக்குமதி நிவாரணம் கோர எதிர்பார்க்கப்படும் புதிய வர்த்தகச் சட்டம் இப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் மற்ருெரு ஜனுதிபதி தடை அதிகாரப் பிரயோகத்திற்கு மேலாக காங்கிரஸின் ஆதரவைப் பெறக்கூடிய வகையில் ஒரு புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் உலகின் மிகப்பெரிய இறக்குமதி நாடான அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான தற்போதைய நிலையை ஏற்றுமதி நாடுகள் இழந்துவிடும். இலங்கைபோன்ற 90 சதவீதம் தம் தைத்த உடைகளுக்கு அமெரிக்கச் சந்தையை நம்பியிருக்கும் நாடுகள் ஏற்றுமதில் 90 சதவீதத்தைத் துண்டிக்கவும், உற்பத்தியை நிறுத்திவிடவும் கூட நேரிடலாம். இதனுல் தொழில்வாய்ப்பும் வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியமும் வெகுவாகப் பாதிக்கப்படும். மொத்தத்தில் இப்புதிய சட்டம், எல்லா ஆசிய நாடுகளுக்கும் குழியறிக்கும் நோக்கத்தைக் கொண்டதாகத் தோன்றுகிறது. கரிபியன் நாடுகளிலிருந்து தைத்த உடைகளை இறக்குமதி செய்தல் தொடர்பான அமெரிக்க மனப்பாங்கு இக்குற்றச்சாட்டுக்கு வலுவூட்டுகிறது.

**1987 ஆம் ஆண்டின் புடவை, தைத்த உடைச் சட்டம்**

ஒவ்வொரு வகைப் புடவையிலும் தைத்த உடையிலும் வளர்ச்சி வீதம் வருடம் ஒன்றுக்கு ஒரு சதவீதத்திற்கு உட்பட்டிருக்க வேண்டுமென உத்தேச சட்டம் விதிக்கிறது. உலகளாவிய அனுமதிப்பங்கு முறையானது, எந்த ஒரு தனிநாட்டின் மீதும் வரையறைகளையோ மட்டுப்பாடுகளையோ விதிக்காது. மாருக ஒவ்வொருவகைப் புடைவைக்குமான அனுமதிப்பங்கை 1986 ல் கட்டுப்படுத்தும்.

சென்ற 10 ஆண்டுகளில் அமெரிக்க புடவை இறக்குமதியில் ஏற்பட்டுள்ள வியக்கத்தக்க வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு இத்தகைய சட்டம் அவசியமாகும். 1986ல் புடவை, தைத்த உடை இறக்குமதி என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்தது. 1985ஐ விட் சென்ற ஆண்டில் இறக்குமதிகள் 7.2 சதவீதத்தால் அதிகரித்தன. இது 1980ம் ஆண்டின் அளவைவிட இருமடங்கு அதிகமானதாகும்.

கரிபியன் நாடுகளில் ஒரு ''புடவைப் புரட்சி" நிகழ்ந்திருப்பதாக 1987 ஜனவரி 15ம் திகதியின் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை கூறியது. அதேவேளையில் ஆசியப் பிராந்திய ஏற்றுமதியாளர்கள் தாழ்ந்த அனுமதிப்பங்கினுலும், தாழ்ந்த வளர்ச்சி வீதத்தாலும்; அவதியுற்றுக் கொண்டிருந்தனர். அமெரிக்க முதலீடுகள் குறிப்பிடத்தக்களவு கரிபிய நாடுகளுக்குச் சென்றுள்ளது என்பது தெளிவு. இந்த மூலதனமும் அமெரிக்க நலன்களும் எவ்வாருயினும் பாதுகாக்கப்பட வேணடும்.

''புதிய அமெரிக்க இறக்குமதிக் கொள்கைகள் காரணமாக டொமினிக்கன் குடியரசின் தைத்த உடைக்கைத்தொழிலில் நிதர்சனமானதொரு புரட்சி நடை பெறுகிறது. ஆயினும் குடியரசினுல் பதிவு செய்யப்பட்ட வியத்தகு வளர்ச்சியும் கரிபிய நாடுகளின் ஏற்றுமதி வளர்ச்சியும் அமெரிக்க கைத்தொழிலுக்கு அமைதியற்ற ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது..."

1985ல் இப்பிராந்தியம், அமெரிக்க இறக்குமதியில் 5 சதவீதத்தையே வழங்கியது. இதன் பெறுமதி 59 கோடி டொலராகும். இப்பிராந்தியத்தின் சந்தைப் பங்கை இவ்வாண்டின் மத்தியில் 12 சதவீதமாக அதிகரிக்கச் செய்வதை அமெரிக்கா சாத்தியமாக்கியுள்ளது. 1986 ஜனவரிக்கும் யூலைக்குமிடையில் அமெரிக்காவுக்கு கரிபியன் ஏற்றுமதி செய்த புடவையின் அளவு 33.7 கோடி சதுரயாராகும். இது 1986ன் அதே கால எல்லையில் ஏற்றுமதி செய்யப்பட்டதைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 கோடி 35 லட்சம் ச. யா. அதிகமானதாகும். இது எல்லா அமெரிக்க இறக்குமதிகளதும் வளர்ச்சி வீதத்தை விட இருமடங்குக்கும் அதிகமானதாகும்.

பிரவேச மட்டம்

ஆனல், இப்பிராந்தியம் 807 ஆம் அம்சத்தைப் பயன்படுத்தியுள்ளது. இவ்வம்சம் தைத்த உடைகளையும் பிறபொருட்களையும் மீள ஏற்றுமதி செய்வதை அனுமதிக்கிறது. கரிபியனில் சேர்க்கப்படும் பெறுமதிக்கு மட்டும் குறைந்த வீத சுங்கத்தீர்வை அறிவிடப்படுகிறது...... அண்மையில் அளிக்கப்பட்ட இவ்வசதி அமெரிக்க கைத்தொழில் துறையில் அமைதியீனத்தைத் தோற்றுவித்துள்ளது. அமெரிக்கவில் உற்பத்தி செய்து வெட்டப்பட்ட புடவையிலிருந்து ஆக்கப்படும் உடைகளுக்கு உத்தரவாத பிரவேச மட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. டொமினிக்கன் குடியரசு ஆண்டொன்றுக்கு 22 கோடி டொலர் பெறுமதியான தைத்த உடைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கிறது. அந்நாடு இப்பொழுது அமெரிக்காவுக்குச் செயற்கைத்துணிகளை ஏற்றுமதி செய்யும் 41 நாடுகளில் 12 வது நாடாகவும் பருத்தித் துணிகளை ஏற்றுமதி செய்யும் 41 நாடுகளில் 17 வது பெரிய நாடாகவும் விளங்குகிறது. அமெரிக்காவிலிருந்தும் தூரகிழக்கிலிருந்தும் முதலீட்டாளர்களை ஈர்த்துள்ள டொமினிக்கன் குடியரசு இவ்வாண்டு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் உடைகளின் அளவை 50 சதவீதத்தால் கூட்ட எதிர்பார்க்கப்படுகிறது. இதனுல் உடை தயாரிக்கும் கைத்தொழில் 150,000 பேருக்கு வேலை கிடைக்கும், ஜமைக்காவின் வளர்ச்சி இதைவிட வியக்கத்தக்கதாகும்......... 1986 ல் உடை ஏற்றுமதியிலிருந்து கிடைத்த மொத்த வருமானம் 8.5 கோடி டொலர்; 1985ல் 5.4 கோடி டொலர்.

ஹயிட்டி, கொஸ்டாறிகா, பார்படோஸ், எல் சல்வடோர், ஹொண்டுரூஸ், ஆகிய நாடுகளிலும் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தின் கூற்றுப்படி, 1985 யூன் மாதத்திற்கு முன் 18 மாதங்களாக அமெரிக்கக் கம்பெனிகள் உடை ஒன்றிணைப்புக்காக 2.8 கோடி டொலர்கள் முதலீடு செய்ததன் மூலம் விரிவாக்கத்துக்கான அடித்தளமிடப்பட்டது.

அமெரிக்கத் தேசிய பின்னலுடை, விளையாட்டுடைச் சங்கமும் அமெரிக்க புடவை உற்பத்தியாளர் நிறுவனமும், இவை போன்ற ஒப்பந்தங்களின் மூலம், மலிவாக உற்பத்தி செய்யப்பட்ட கரிபிய தைத்த உடை இறக்குமதிப் பிரளயம் ஏற்படுவது குறித்து கவலைப்படுகின்றன. அமெரிக்க தைத்த உடை தயாரிப்பாளர் சங்கம், அமெரிக்க உற்பத்தியாளருக்குத் தீங்கு விளைவதைத் தவிர்க்கு முகமாக தூரகிழக்கு நாடுகளிலிருந்து செய்யப்படும் இறக்குமதி குறைக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளது.

ரி. பி. கே.

(18ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுரை

வாசனைத் திரவியங்களை தொகையாக ஏற்றுமதி செய்வதில் இலங்கையானது இவற்றின் நிரப்பற் பிரச்சினையை முக்கியமாக எதிர் நோக்குகிறது. (எனினும் கறுவா, கராம்பு ஆகியன தொகையாக ஏற்றுமதி செய்வதில் கூட சந்தைப்படுத்தும் பிரச்சினைகளைக் கொண்டுள்ளன.) வாசனைத் திரவியங்களுக்கான கேள்வியானது நெகிழ்ச்சியற்றது. இருப்பினும், இலங்கை வாசனைத் திரவியங்களின் தரம் இயல்பாகவே விசேடித்த அம்சங்களைக் கொண்டிருப்பதாலும், உலகச் சந்தையில் இலங்கையினது பங்கு மிகச் சிறிதாக இருப்பதாலும், உள்நாட்டில் உற்பத்தி இருமடங்கு அதிகரித்தாலுங்கூட இவற்றை ஏற்றுமதி செய்வதில் எந்தவிதப் பிரச்சினையையும் இலங்கை எதிர் நோக்கமாட்டாது. கறுவா, கராம்பு ஆகியவற்றின் உற்பத்தி மட்டுப்படுத்தப்படுவதோடு, போட்டித் தன்மையுள்ள உற்பத்திகளை அறிமுகம் செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்.

பெறுமதி சேர்க்கப்பட்ட வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி, செய்வதில், சந்தைப்படுத்தும் பிரச்சினை காணப்படுகிறது. சந்தை ஆராய்ச்சி மூலம் விலை, உற்பத்திகள், இடம், ஊக்குவிக்கும் தொழில் நுட்பங்கள் ஆகியன சரியான முறையில் கையாளப்பட வேண்டுவதுடன், புதிய உற்பத்தி முறைகளையும், புதிய உற்பத்தி நாடுகளையும், புதிய சந்தை வாய்ப்புக்களையும் இனங்காண்பதற்கும், விருத்தி செய்வதற்கும் சந்தை ஊக்குவிப்புத் தொழில் நுட்பங்கள் கையாளப்படவும் வேண்டும்.

வர்த்தக ரீதியிலான வாசனைத் திரவியங்களைப் பயிர் செய்வதற்காக காணிகளை உரிமையாக்கும் கொள்கை நடைமுறைகள், தன்னிறைவுள்ள, தன்நம்பிக்கை கொண்ட உற்பத்தியாளர் அமைப்புக்களை அமைத்தல் என்பன உற்பத்தி அபிவிருத்திக்கு வேண்டிய சில முக்கிய உள்ளக அம்சங்களாகும். இலங்கை வாசனைத் திரவியங்களின் தரத்திற்குள்ள குறியீட்டின் எண்ணக்கரு, போட்டிகளின் மத்தியில் உலகச் சந்தையில் ஏற்றுமதியாளர்கள் திறமையாகவும், சிறந்த முறையிலும் வித்தியாசமாகசெயலாற்ற எடுக்கும் அவர்களின் சொந்த முயற்சிகள் என்பன உற்பத்தி சேவை வகையீட்டினது சில அங்கீகரிக்கப்பட்ட தேவையான தொழில் நுட்பங்களாகும். யதார்த்தமான அந்நியச் செலாவணி மாற்றுவீதங்கள், சலுகையடிப்படையில் வட்டிவீதங்கள், போட்டித்தன்மையுள்ள கப்பற் கட்டண வீதங்கள், போதிய கப்பற் போக்குவரத்துக்கள், போதிய இடவசதி போதியளவு தரக்கட்டுப்பாடு, தரக் கட்டுப் பாட்டபிவிருத்தி என்பவை சந்தை அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கக் கூடிய, செலவினைக் குறைக்கக்கூடிய ஒரு சில உள்ளக வசதிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்திய வர்த்தகம்

இலங்கை அதன் அயல் நாடான இந்தியாவுடன் பல நூற்றுண்டு காலமாக நெருங்கிய பொருளாதார, கலாசார உறவுகளைப் பேணி வந்துள்ளது. அண்மைய வருடங்களில், இந்தியா, இலங்கையுடன் வர்த்தகம் புரியும் முன்னணி ஆசிய நாடுகளில் ஒன்ருக இருந்து வந்துள்ளது. இலங்கையின் பத்து முன்னணி வர்த்தகப்பங்காள நாடுகளில் ஒன்ருகவும் அது இருந்து வருகிறது. 1977-ன் பின்னர் அறிமுகஞ் செய்யப்பட்ட தாராள பொருளாதார கொள்கைகள் 1980 களில் இந்தியாவின் நிலையில் மாற்றங்களைக் கொண்டு வந்ததுடன், இப்பிராந்திய நாடுகளுடன் இலங்கை மேற்கொண்ட வர்த்தக மாதிரிகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. ஜப்பான், சிங்கப்பூர், தைவான், ஹொங்கொங், தென்கொரியா, மக்கள் சீனக்குடியரசு போன்ற நாடுகள் 1980 களில் (இந்தியாவைப் பின்தள்ளி) இலங்கையுடன் வர்த்தகம் புரியும் முன்னணி நாடுகளாக வெளித்தோன்றின. இந்நாடுகளில் பல இலங்கையிலிருந்து அதிகளவிலான இறக்குமதிகளைப் பெற்றுக்கொள்ள முயன்று வந்த அதே வேளையில், கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவின் இறக்குமதிகள் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அளவிலேயே இருந்து வந்துள்ளன. பாகிஸ்தான், தைவான் ஆகிய நாடுகள் 1980 களில் இலங்கையுடன் அதிகரித்த அளவிலான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. பாகிஸ்தான் 1986ல் இந்தியாவைவிடவும் 54.6 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை அதிகமாக இறக்குமதி செய்துள்ளது.

இலங்கை 1986ல் ரூ. 8540 கோடி பெறுமதியான மொத்த வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளது. இறக்குமதிகள் 1985ல் 4910 கோடி ரூபாவாகவும், 1986ல் 5130 கோடி ரூபாவாகவும் இருந்தன. 1985ல் 1400 கோடி ரூபாவாக இருந்த வர்த்தகப் பற்றுக்குறை 1986ல் 1720 கோடி ரூபாவாக அதிகரித்தது. மத்திய வங்கி புள்ளி விபரங்களின்படி வர்த்தக நியதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைநது வநதது. இது 1984ல் 134 இல் இருந்து 1985ல் 108 ஆகவும், 1986ல் 102 ஆகவும் வீழ்ச்சியடைந்தது.

அபிவிருத்தியடைந்த சந்தைப் பொருளாதார நாடுகளுக்கு இலங்கை 1986ல் 2020 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்தது. இந்நாடுகளிலிருந்து 2510 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. வளர்முக நாடுகளுடன் இலங்கையின் வர்த்தகம் இறக்குமதிகள் தொடர்பாக 2290 கோடி ரூபாவாக இருந்த அதே வேளையில், ஏற்றுமதிகள் 960 கோடி ரூபாவாக இருந்தன. ஆசிய சோஷலிச நாடுகளிலிருந்து இலங்கை 250 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்ததுடன், அந்நாடுகளுக்கான ஏற்றுமதிகள் 50 கோடி ரூபாவாக இருந்தன. இச் சகல குழுநாடுகளுடனுமான வர்த்தகத்திலும் இலங்கை பற்றுக்குறை நிலையையே அனுபவித்து வந்துள்ளது. கிழக்கைரோப்பிய சோஷலிச நாடுகளுடனான வர்த்தகத்தில் மட்டுமே இலங்கையின் வர்த்தக நிலுவை சாதகமாக இருந்தது. இலங்கை இந்நாடுகளிலிருந்து 73 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்ததுடன், இந்நாடுகளுக்

அட்டவணை 1

ஆசிய நாடுகளுடனுன இலங்கையின் வியாபாரம

(பெறுமதி ரூ. பத்துலட்சத்தில்)

| | | 1975 | 1980 | 1985 | 1986 | மொத்த வியாபாரம் |
|---|---|---|---|---|---|---|
| ஜப்பான் | ஏற்றுமதிகள் | 179.7 | 553.5 | 1,777.8 | 1,813.1 | 10,747.0 |
| | இறக்குமதிகள் | 447.0 | 4,301.8 | 7,668.4 | 8,933.9 | |
| சீன | ஏற்றுமதிகள் | 460.1 | 848.4 | 464.5 | 477.3 | 2,895.5 |
| | இறக்குமதிகள் | 661.5 | 840.2 | 1,920.5 | 2,418.0 | |
| சிங்கப்பூர் | ஏற்றுமதிகள் | 50.6 | 196.6 | 1,190.7 | 784.8 | 2,795.3 |
| | இறக்குமதிகள் | 103.8 | 1,520.1 | 2,003.2 | 2,010.5 | |
| தாய்வான் | ஏற்றுமதிகள் | - | 340.6 | 33.4 | 35.3 | 2,704.4 |
| | இறக்குமதிகள் | - | 408.2 | 1,556.6 | 2,669.1 | |
| ஹொங் கொங் | ஏற்றுமதிகள் | 58.5 | 173.8 | 286.8 | 294.1 | 2,690.2 |
| | இறக்குமதிகள் | 7.6 | 689.4 | 1,563.0 | 2,396.1 | |
| இந்தியா | ஏற்றுமதிகள் | 2.6 | 571.3 | 183.4 | 330.7 | 2,552.6 |
| | இறக்குமதிகள் | 149.9 | 1,594.2 | 2,027.9 | 2,221.9 | |
| பாகிஸ்தான் | ஏற்றுமதிகள் | 344.9 | 568.0 | 749.0 | 949.3 | 2,241.6 |
| | இறக்குமதிகள் | 219.8 | 496.2 | 922.6 | 1,292.3 | |
| தென் கொரியா | ஏற்றுமதிகள் | .1 | 3.4 | 14.8 | 58.9 | 2,021.4 |
| | இறக்குமதிகள் | 17.7 | 583.4 | 1,247.1 | 1,962.5 | |
| சகல ஆசி நாடுகளும் | ஏற்றுமதிகள் | 1,096.5 | 3,255.6 | 4,700.4 | 4,743.5 | 28,647.9 |
| | இறக்குமதிகள் | 1,607.3 | 10,433.5 | 18,909.2 | 23,904.3 | |
| சகல நாடுகளதும்கூட்டு மொத்தம் | ஏற்றுமதிகள் | 3,982.9 | 17,293.8 | 34,238.0 | 33,092.3 | 84,373.8 |
| | இறக்குமதிகள் | 5,251.3 | 33,637.4 | 43,068.5 | 51,281.5 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2

இந்தியாவிலிருந்து இறக்குமதிகள்

(ரூ. பத்துலட்சம்)

| | 1975 | 1980 | 1985 |
|---|---|---|---|
| வெங்காயம் | - | 63 | 322 |
| பருத்தி | - | 122 | 291 |
| கருவாடு | - | 35 | 210 |
| இயந்திர உபகரணங்கள் | 4 | 202 | 185 |
| வாகனங்கள் உதிரிப்பாகங்கள் | - | 405 | 184 |
| ஏனைய மருந்துகள் | 9 | 43 | 171 |
| இரும்பு உருக்குப் பொருட்கள் | 9 | 62 | 68 |
| மின்சார இயந்திரம் | 3 | 134 | 63 |
| பீடி இலை | 11 | 6 | 63 |
| சோயா அவரை எண்ணெய் | - | - | 46 |
| அலுமினியப் பொருட்கள் | 7 | 18 | 40 |
| உலர்ந்த மரக்கறிகள் | - | - | 39 |
| வெள்ளைப்பூண்டு | - | - | 28 |
| மாத்தயாரிப்பும் கஞ்சிப்பசையும் | - | 33 | 27 |
| இரசாயனப் பொருள் | - | - | 16 |
| மிளகாய் | - | 80 | 16 |
| மிருகக் கொழுப்பு | - | - | 16 |
| ஏலக்காய் | - | - | 12 |
| சீனி | 28 | 01 | - |
| ஜீரகச் செடி விதை | - | 14 | 0 |
| கொத்தமல்லி விதை | - | 02 | - |
| ஏனையன | 79 | 365 | 231 |
| கூட்டுமொத்தம் | 150 | 1,594 | 2,028 |

மூலம்: வர்த்தக திணைக்களம்

அட்டவணை 3

இந்தியாவுக்கான ஏற்றுமதிகள்

(ரூ. பத்து லட்சம்)

| | 1975 | 1980 | 1985 |
|---|---|---|---|
| இறப்பர் | - | - | 38 |
| கராம்பு | - | 170 | 37 |
| தேயிலை | - | 12 | 31 |
| மிளகு | - | - | 12 |
| உலர்ந்த மரக்கறி | - | 5 | 6 |
| பதப்படுத்தப்பட்ட பதப்படுத்தப்படாத தோல் | - | - | 6 |
| சகலவிதமான இயற்கை மணல்களும் | - | - | 4 |
| இயற்கை காரீயம் | 1 | 4 | 3 |
| எச்ச எரிபொருள் எண்ணெய் | - | 348 | - |
| தாவரங்களும் மரப்பகுதிகளும் | - | - | 3 |
| பெறுமதி வாய்ந்த ஓரளவு பெறுமதி வாய்ந்த கற்கள் | - | - | 3 |
| அமுக்கப்பட்ட வாயு | - | - | 2 |
| ஏனையன | 1 | 29 | 24 |
| கூட்டுமொத்தம் | 2 | 568 | 169 |

மூலம்; வர்த்தக நிலையம்


கான இலங்கையின் ஏற்றுமதிகள் 98 கோடி ரூபாவாக இருந்தன. இதில் 25 கோடி ரூபா மிகை கிடைத்துள்ளது. ஐக்கிய அமெரிக்கா இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாக விளங்கி 850 கோடி ரூபா பெறுமதியான பொருட்களைப் பெற்றுக் கொண்டது. அதேவேளையில் ஜப்பான் இலங்கைக்கான பிரதான வழங்குனர் நாடாக இருந்து 1986ல் 890 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கியுள்ளது.

இலங்கை 1986ல் அதன் தேவைகளில் 67 சதவீதத்தை ஜப்பானிலிருந்தும் ஆசியப்-பிராந்தியத்தின் ஏனைய நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்தது. இதில் ஜப்பானின் பங்கு 17.4 சதவீதமாகவும், தாய்வானின் பங்கு 5.2 சதவீதமாகவும் இருந்தது. இந்தியா 4.3 சதவீதத்தை வழங்கி பட்டியலில் நான்காவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. வருடாந்த இறக்குமதிகள் தொடர்பான புள்ளி விபரங்கள் 1985ஆம் வருடத்துக்கே கிடைக்கக் கூடியதாக இருக்கின்றன. 1975ல் 15 கோடி ரூபாவாக இருந்த இந்தியப்பொருள் இறக்குமதி 1985ல் 202.8 கோடி ரூபாவாக அதிகரித்திருந்தது. வெங்காயம் (32.2 கோடி ரூபா), பருத்தி நூல் (29.1 கோடி ரூபா), கருவாடு (21 கோடி ரூபா) போன்றன இந்தியாவிலிருந்து பெறப்பட்ட பிரதான இறக்குமதிப் பொருட்களாக இருந்தன. இயந்திர உபகரணங்கள், வாகனங்கள், உதிரிப்பாகங்கள், இரும்பு உருக்குப் பொருட்கள், பீடி இலை என்பன இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய பிரதான பொருட்களாகும். சோயா அவரை எண்ணெய், உலர்ந்த மரக்கறிகள், மிளகாய் போன்ற இந்திய விவசாய உற்பத்திப் பொருட்களுக்கும் இலங்கையில் உடனடிச் சந்தை நிலவியது. இப்பொருட்கள் யாவற்றையும் ஒன்றில் இங்கு உற்பத்தி செய்ய முடியும்; அல்லது போட்டி விலைகளில் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்ய முடியும். விவரந்தெரியாத சில இந்திய செய்திப் பத்திரிகைகள் இவ்விரு நாடுகளும் வர்த்தகத் தொடர்புகளைத் துண்டித்துக்கொள்ள வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கும் போது, இந்நடவடிக்கையினால் அதிகம் பாதிக்கப்படுவது இந்திய ஏற்றுமதியாளர்களே என்பதனை சிறிதும் உணர்வதில்லை.

வர்த்தகத் தாராளமயமாக்கலை அடுத்து இந்தியா இலங்கைக்கான அதன் ஏற்றுமதிகளை விஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரித்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. இதேவேளையில் சிங்கப்பூர், தாய்வான், சீனு, ஹொங்கொங், தென் கொரியா, பாகிஸ்தான், மலேசியா போன்ற நாடுகள் இலங்கைக்கான ஏற்றுமதிச் சந்தைகளை விஸ்தரிப்பதில் இந்தியாவிட அதிகம் உதவியுள்ளன. இந்நாடுகளில் பல அநேகமாக இலங்கையின் முற்று முழுதான தேவைகளையும் போட்டி விலைகளில் வழங்கக் கூடியவையாகவும் இருக்கின்றன.

**இந்தியாவுக்கான ஏற்றுமதிகள்**

இந்தியாவுக்கான ஏற்றுமதிகளைப் பொருத்த வரையில், 1980ல் 56.8 கோடி ரூபாவிலிருந்து 1985ல் 16.9 கோடி ரூபாவாக கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இலங்கையின் பிரதம விளைபொருள்களிலும், ஏனைய தயாரிப்புக்களிலும் இந்தியா உற்பத்தி செய்யாமலிருப்பது மிகச் சிலவற்றையேயாகும்.

இந்தியாவுக்கு 1985ல் தேவையாயிருந்த - அதுவும் தன் சொந்த உற்பத்திகளுக்கு குறை நிரப்ப - மிகச்சில பொருட்கள் கராம்பு (3.7 கோடி ரூபா), மிளகு (1.2 கோடி ரூபா), இறப்பர் (3.8 கோடி ரூபா), தேயிலை (3.1 கோடி ரூபா) என்பனவாகும். எவ்வாறுயினும், இலங்கை இப்பொருட்கள் யாவற்றுக்கும் பாரம்பரிய கொள்வனவாளர்களிடம் ஒரு ஸ்தாபிதமான சந்தையை அமைத்துக்கொண்டிருந்தது. இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் குறைவாக இருந்த போதிலும் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஒரு உத்தியோகபூர்வமற்ற சந்தை நிலவி வருவதுடன், இரு நாடுகளதும் சுங்கப்பகுதி அதிகாரிகளினுல் இது அடிக்கடி இடையில் தடுக்கப்பட்டு வருகிறது. இந்தியாவுக்குள் இவ்வாறு சென்று சுங்கப்பகுதியால் பிடிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி 1984ல் 6 கோடி 38 லட்சம் ரூபாவாகவும், 1985ல் 4 கோடியே 77 லட்சம் ரூபாவாகவும், 1986ல் 4 கோடியே 5 லட்சம் ரூபாவாகவும் இருந்தது. ஒன்றில் சுங்கப் பகுதியினர் மிகவும் விழிப்பாக செயற்பட்டு சட்ட விரோதமாக பொருட்கள் கடத்தப்படுவதை வெற்றிகரமாக குறைத்திருக்க வேண்டும்; அல்லது கடந்த மூன்று வருடங்களிலும் பெரும்பாலான இத்தகைய வர்த்தக நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்படாது நடைபெற்றிருக்க வேண்டும் என்பதனையே இப்புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

(27ம் பக்கம் பார்க்க)

கடத்தப்பட்டு கண்டு பிடிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி

(ரூ. பத்துலட்சம்)

| | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|
| இலங்கையிலிருந்து இந்தியாவக்கு | 63.8 | 47:7 | 40.5 |
| இந்தியாவிலிருந்து இலங்கைக்கு | 4.7 | 6.8 | 12.0 |
| இலங்கையின் பற்ருக்குறை | 59.1 | 40.9 | 28.5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாபார விளைபொருள்கள்

### சர்வதேச ஒப்பந்தம் இல்லை

ஜெனீவாவில் நடைபெற்ற இயற்கை இறப்பர் மாநாடு ஒரு புதிய சர்வதேச ஒப்பந்தம் பற்றி இணக்கங்காணத் தவறியபோது வியாபாரப் பொருட்களுக்கு விலையிடுதல் சம்பந்தமாக வடக்கு - தெற்கு கூட்டுறவுக்கான சகாப்தம் இறுதிக் கட்டத்தை அடைந்து வருகிறது என்ற கருத்து மேலும் வலுவடைந்தது. இயற்கை இறப்பர் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் இரு முக்கிய விடயங்கள் குறித்துத் தீர்மானத்திற்கு வரமுடியாமற் போகவே மேலும் ஒரு கூட்டத்திற்கான ஒரு திகதியைக் குறிப்பிட்டு விட்டுக் கலைந்து விட்டனர். இது, இயற்கை இறப்பர் தொடர்பான ஐக்கியநாடுகள் சபையின் மூன்றுவது அமர்வாகும். 1987 அக்டோபரில் காலாவதியாகும் ஒப்பந்தத்திற்கு அடுத்தமைவதற்கான ஒரு ஒப்பந்தத்தை வரைந்து ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு ஐ. நா. 1985 ஏப்ரல் முதல் முயன்று வருகிறது.

1986ல் நடைபெற்ற இரண்டாவது மாநாட்டில் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்குமிடையிலான கருத்து வேற்றுமை விலைமட்டங்கள் பற்றியதாக இருந்தது. ஒப்பந்தத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை விலை க்டுமையாக உயர்த்தப்பட வேண்டுமென உற்பத்தியாளர்கள் கோரியிருந்தனர். இது, எவ்வெக் கட்டங்களில் காப்பு இருப்பு முகாமையாளர் இறப்பர் கொள்வனவு செய்வதன் மூலம் அல்லது விற்பனை செய்வதன் மூலம் தலையிடலாம் அல்லது தலையிடவேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது. அவர்கள் அடிப்படை விலையை 201.66 மலேசிய/சிங்கப்பூர் சதத்திலிருந்து 265 சதமாக அதிகரிக்க வேண்டுமெனக் கோரியிருந்தனர். உற்பத்திச் செலவு அதிகரிப்பை அவர்கள் காரணமாகக் காட்டினர். அப்பொழுது சந்தைச் சுட்டுவிலை 171 சதமாக இருந்தது.

எவ்வாறாயினும் அக்டோபர் 6ம் திகதி மூன்றும் அமர்வு ஆரம்பித்தபோது, உற்பத்தியாளர்கள் தற்போதைய ஒப்பந்தத்திலுள்ள அடிப்படை விலையை ஏற்றுக் கொள்வதற்கு உடன்பட்டனர். அடுத்து கலந்துரையாட்லில் ஒப்பந்தத்தில் விலையிடலுக்கு எந்த நாணயம் உபயோகிக்கப்பட வேண்டும் என்பதுபற்றியும் விலைகளை மீன்பார்வைசெய்வதற்கான முறை பற்றியும் கவனஞ் செலுத்தப்பட்டது. முந்திய விடயத்தைப் பொறுத்தவரை, உலகுக்குத் தேவையான இறப்பரில் 40 சதவீதத்தை மலேசியா ஏற்றுமதி செய்து உலகிலேயே மிகப் பெரிய ஏற்றுமதி நாடாக விளங்குவதால் விலையிடல் மலேசிய றிங்கிட்சின் அடிப்படையில் செய்ய வேண்டுமென உற்பத்தியாளர்கள் வற்புறுத்தினர். எவ்வாறாயினும், ஒரு நாட்டு நாணயத்தை மட்டும் உபயோகிப்பது புத்திசாலித்தனமானதல்ல என்று கருதிய நுகர்வோர் தற்போதைய உடன்படிக்கையில் உள்ளவாறு மலேசியா/சிங்கப்பூர் சதம் உபயோகிக்கப்பட வேண்டுமெனக் கூறினர்.

விலை திருத்தத்தைப் பொறுத்தவரை, தற்போதிருப்பது போன்று 18 மாதங்களுக்கு ஒரு தடவைக்குப்பதில் 12 மாதங்களுக்கு ஒரு முறை விலைகள் மீள்பார்வை செய்யப்பட வேண்டுமென நுகர்வோர் கருத்துத் தெரிவித்தனர். அத்துடன் செம்மையாக்கல்கள் கூடியளவு தானாக அமையுமாறு செய்யப்பட வேண்டுமெனவும் விரும்பினர். தற்போது, சராசரி நாளாந்த சந்தை விலை, தலையீட்டு விலையைவிட குறைவாகவோ அதிகமாகவே 6 மாதங்களுக்கு இருந்து வந்தால் அடிப்படைவிலை 5 சதவீதத்தால் அல்லது சர்வதேச இயற்கை இறப்பர் மன்றம் தீர்மானிக்கும் தொகையால் திருத்தப்படும். இத்தகைய சூழ்நிலைகளில் தன்னியக்க விலைச் செம்மையாக்கல்கள் இருக்க வேண்டுமென்றும் சர்வதேச மன்றம் உயர்ந்த நூற்றுவீதத் தொகை பற்றித் தீர்மானிக்கத் தக்க நிலையில் இருக்க வேண்டுமென்றும் நுகர்வோர் விரும்பினர். தீர்மானிக்கும் பொறுப்பு மன்றத்திடம் விடப்படுவதால் நீண்ட பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதன்றி திருத்தமேதும் நிகழ்வதில்லை என்றும் அவர்கள் முறையிட்டனர். சில இறக்குமதியாளர்கள் சுட்டு விலைகளில் — விலைத் தொடரின் மேல், கீழ் எல்லைகளில் - செம்மையாக்கல் செய்யப்பட வேண்டுமென்றும் இது, காப்பிருப்பு 4,50,000 தொன்களுக்கு மேலிருந்தால் செய்யப்பட வேண்டுமென்றும் அவர்கள் கூறினர். தற்போதுள்ள காப்பிருப்பு 360,000 தொன்களாகும். மாநாட்டுத் தலைவரும் அங்டாட் செயலகமும் முன்வைத்த பல சமரச யோசனைகளுக்கு ஆதரவு கிடைக்கவில்லை.

மாநாடு தோல்வியுற்றதால் உடனடி விளைவுகள் ஏற்படா விட்டாலும், 1987 அக்டோபருக்குமுன் ஒரு புதிய ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் தற்போதைய ஒப்பந்தத்தின்படி காப்பிருப்பைத் தீர்ப்பதற்கு ஏற்பாடுள்ளது. ஒரு புது ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் அது ஸ்திரமான விலைகள் தொடர்ந்து இருக்காது என்பதையும் குறிக்குமென்று வியாபாரச் சரக்கு நிபுணர்கள் கூறினர். இதனால் 365000 தொன் காப்பிருப்பு தீர்க்கப்படுமென்றும் 1986 பிற்பகுதியில் ஏற்பட்ட விலை வீழ்ச்சி மீட்சி பெறுவதற்கு இடமிருக்காது என்றும் கூறப்படுகிறது. உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரை மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு வருவதைவிட வேறு வழியில்லை என்பதே பொதுவான கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகையிலை தரும் பரிசு

வருடந்தோறும் கோடிக் கணக்கானவர்கள் புகைபிடிப்பதனல் மரணிக்கிருர்களென உலக சுகாதார நிறுவனம் கூறுகின்ற போதிலும் நூற்றுக்கணக்கான வளர்முக நாடுகளில் பணம்தரும் விளைபயிராக புகையிலை பயிரிடப்படுகின்றது. புகையிலை உற்பத்தி நாடுகளுக்கும் அதனைப் பயிரிடுவோருக்கும் குறைந்தளவு பொருளாதார நன்மைகளே கிடைப்பதற்கான சான்றுகளே அறியக்கிடக்கின்றன. புகையிலை உற்பத்தி நாடுகளிலேயே முக்காற்பங்கு புகையிலை சிகரெட்டாகப் புகைக்கப்படுகின்றது. பிரேஸில், இந்தியா, மாலாவி, துருக்கி, சிம்பாம்வேஆகிய ஐந்து மூன்ரும் மண்டல நாடுகள் மட்டுமே புகையிலை ஏற்றுமதியால் கணிசமான பணத்தை சம்பாதிக்கின்றன.

1985-ல் புகையிலை உற்பத்தி 62 லட்சத்து 70 ஆயிரம் தொன்னுக இருந்ததனல் இன்றைய கையிருப்பு 71 லட்சத்து 90 ஆயிரம் தொன்களாய் உள்ளது. இக்கையிருப்பு வருடம் ஒன்றின் மொத்த அறுவடைக்கும் அதிகமானதே இப்பாரிய அளவிலான கையிருப்பு புகையிலை விலை வீழ்ச்சியடைந்து போவதையே கோடிட்டுக் காட்டுகின்றது. 1982-ல் இருந்ததைவிட இன்றைய புகையிலை விலை 20% குறைந்தேயுள்ளது; இதனல் ஏற்றுமதி செய்யும் நாடுகளினது வருவாய்கள் மேலும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

ஆபிரிக்காவில் புகைத்தல் தொடர்புள்ள வியாதிகள் பெருகி வருவதுடன் புகையிலையில் இருந்து கிடைக்கும் வருமானத்தை வியாதிகளுக்கான பரிகாரச்செலவுகள் விழுங்கிவிடுகின்றதென்றே கருதவேண்டியுள்ளது. ஆபிரிக்க நாடுகளுக்கான ஆய்வுகள் இன்னும் செய்யப்படவேயில்லை. எனினும் கனேடிய வாட்டலூ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த போர்ப்ஸ், தொம்சன் போன்றவர்களின் ஆயவுகளின் பிரகாரம் புகையிலையினல் நன்மை கிடைக்கப்போவதேயில்லை. கனடாவில் புகையிலை, சிகரெட் போன்றவற்றிற்காக 1982-ல் 440 கோடி டொலர்கள் செலவு செய்யப்பட்டது. ஆனல் புகைத்தலினல் ஏற்பட்ட நோய்களுக்கான மருந்து, வைத்தியசாலை போன்றவற்றிற்கான செலவுகளோ 710 கோடி டொலர்கள். எனவே, புகையிலைக் கைத்தொழிலால் வருடமொன்றுக்கு 270 கோடி டொலர்கள் கனடாவிற்கு நட்டமே ஏற்படுகின்றது. கனடாவுக்கு ஏற்பட்ட கதியே புகையிலை உற்பத்திசெய்யும் மூன்ரும் மண்டல நாடுகளுக்கும் ஏற்படலாமென எதிர்பார்ப்பது நியாயமானதே. இன்று மூன்ரும் உலக நாடுகளில் புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டிருக்கும் வேகத்தை கருத்திற்கெடுத்து நோக்கும்போது வெகுவிரைவில் இந்நாடுகளில் நிலைமை மோசமடையலாம்.

கென்யா நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி புகையிலை உற்பத்தி செய்யும் விவசாயிகள் வருடமொன்றுக்கு தமது காணித்துண்டுகளிலிருந்து ஐக்கிய இராச்சியத்தின் 150 பவுணுக்கும் குறைவான வருமானத்தையே பெறுகின்றனர். இது அதே அளவு காணியில் கோப்பி உற்பத்தி செய்யும் விவசாயிகளது வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு வருமானமாக இருப்பதனல் மூன்ரும் உலக விவசாயிகளுக்கு புகையிலை குறைந்த வருமானம் தரும் பயிரென்றே கருதவேண்டியுள்ளது. புகையிலையைப் பயிர் செய்வதனல், சுற்றுப்புறச் சூழலுக்கும் அதிகளவு சேதம் ஏற்படுகின்றது. உலகப் புகையிலை உற்பத்தியில் அரைப் பங்குக்கும் அதிகமானவை சிகரெட் உற்பத்திக்கு ஏற்றவகையில் பதனிடப்படுவதற்கு அதிகளவில் விறகு தேவைப்படுகிறது.

தன்சானியாவில் புகையிலை விவசாயம் பற்றி நடாத்தப்பட்ட ஆய்வின் பிரகாரம், ஒரு தொன் புகையிலை பதனிடுவதற்கு பல ஏக்கர் காணியிலுள்ள மரங்கள் வெட்டி விறகாக்கப்படுகின்றது. இந் நிலையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள ஆபிரிக்காவின் அருமருந்தான காடுகள் சிகரெட் தயாரிப்பதற்கு விறகாக எரிக்கப்படுகின்றன. அது மட்டுமல்லாது புகையிலைச் செய்கை உணவுற்பத்தியை அச்சுறுத்துகின்றது. உதாரணமாக, கென்யாவில் மேரு மாவட்டத்தில் புகையிலைச் செய்கை தொடங்கி 15 வருடங்களுக்குள் மழை வீழ்ச்சி குறைந்துள்ளது. பண்படுத்தப்பட்ட பயன் தரு உணவு பயிரிடும் நிலங்களுக்கேற்ற பாதுகாப்பளித்த மரங்களெல்லாம் அழித்தொழிக்கப்பட்டதுடன் பயிர் நிலங்களின் உணவுற்பத்தி செய்யும் ஆற்றல் குறைக்கப்பட்டுள்ளது.

புகையிலைச் செய்கை சற்று வரண்ட நிலத்தில் செழிப்புற்று வளர்வதால், நிலம் பாலைவன நிலையை நோக்கியே நகர்கின்றது. இதனல் நாட்டின் நிலவளத்துக்கு ஏற்பட்டுள்ள நீண்டகால பொருளாதார நட்டம் ஈடுசெய்யவே முடியாது. புகையிலைச் செய்கைகளால் பலனேயில்லை என்பதற்கான சான்றுதாரங்கள் இருந்தபோதும், புகையிலை உற்பத்திக்கு உலகின் பிரதான உதவி நிறுவனங்களுட் சில தொடர்ந்தும் நிதியுதவி செய்தே வருகின்றன. பல்லாண்டு காலமாக மூன்ரும் உலக நாடுகளில் புகையிலை உற்பத்தித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பது உலக வங்கியினதும், பொதுநல அபிவிருத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டியத்தினதும் கொள்கையாகவே இருக்கின்றது. புகையிலை உற்பத்தி மேம்பாட்டுக்காக உலக வங்கி பல நாடுகளுக்கு உதவி வழங்கியுள்ளது.

1974-ல் இருந்து 1982 வரையுள்ள காலப்பகுதியில் வங்கி அதன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினூடாக 60 கோடி டொலருக்கும் அதிகமாக கடன்களை புகையிலை உட்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக பல வளர்முக நாடுகளுக்கு வழங்கியது. மாலாவி, சம்பியா நாடுகளின் புகையிலைத் திட்டங்களுக்கென பொதுநலவாய அபிவிருத்திக் கூட்டியம் கடனுதவி அளித்துள்ளது. இப்பயிர் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக சில நாடுகளில் கருதப்படுவதால் புகையிலைச் செய்கைத் திட்டங்களுக்கு நிதி அளிப்பது பொதுநலக் கூட்டியத்தின் கொள்கையாகவே உள்ளதென அதன் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கின்றார்.

புகையிலை, தொழில் வாய்ப்பினை அளிக்கின்றது. சிம்பாம்வேயில் 17,000 பேரும், மாலாவியில் ஒரு இலட்சம் குடும்பங்களும், பிரேஸிலில் 1,15,000 விவசாயிகளும் புகையிலைச் செய்கையிலேயே தங்கியுள்ளனர். புகையிலை பயிரிடுவதை நிறுத்தி வேறு சீவனோபாயத்தை நாடுவதற்கு இவர்களுக்கு உதவி நிச்சயமாகத் தேவைப்படும். புகையிலை பயிரிடப்படும் நிலங்களில் எல்லாம் மாற்றுப்பயிர்களாக தானிய வகை, பருப்புவகை, வாழை, தென்னை, அன்னாசி, மரக்கறி வகை போன்றவற்றை வேண்டியளவு பயிரிடலாம். ஒவ்வொரு நாட்டிலும் புகையிலைச் செய்கையில் இருந்து விலகிச் செல்வதற்கான கொள்கை வகுக்கப்படவே வேண்டும்; இன்றேல், அது எம்மையெல்லாம் அழித்தொழிக்கும்; அது ஒரு ஆட்கொல்லி.

— ஏர்த்ஸ்கான் - இலங்கை சுற்றுடல் சம்மேளனத்தின் கட்டுரைச் சேவை

(24ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கம், தங்க நகைகள், வெள்ளி என்பனவே இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக வெளியே எடுத்துச் செல்லப்படும் பிரதான பொருட்களாகும். 1986ல் கண்டுபிடிக்கப்பட்ட 4 கோடி 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களில் இதன் பெறுமதி 2 கோடி 75 லட்சம் ரூபாவாக இருந்தது. நாணயம், போதைப் பொருட்கள், கடிகாரங்கள், வானொலிப் பெட்டிகள், வீடியோக்கள், வீடியோ கஸெட்டுகள், மின்சார உபகரணங்கள் என்பன இந்தியாவுக்கு கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களாகும். இந்தியாவுக்கு கடத்தப்படும் மற்றொரு பிரதான பொருள் திறந்து மூடும் 'ஸிப்'களாகும். புடவைகளும் இவ்விதம் கடத்தப்படுகின்றன. இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் கள்ளத்தனமாக கொண்டு வரப்படும் பொருட்கள் போதை வஸ்துக்கள், வெளிநாட்டு நாணயம், புடவைகள், பீடி என்பனவாகும். இவ்விதமான வர்த்தகம் கணிசமான அளவில் தொடர்ந்தும் நடைபெற்று வருமேயானால், இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டின் சென்மதி நிலுவையில் அது திரிபுகளை ஏற்படுத்த முடியும்.

வர்த்தக நிலுவை பெரும்பாலும் இலங்கைக்கு சாதகமற்றதாக இருந்துவந்த போதிலும் பாரம்பரிய வர்த்தக ஒப்பந்தங்கள் இந்நிலையை நீடித்து நிலைக்கச் செய்து வருகின்றன. 1975ல் 14 கோடி 73 லட்சம் ரூபாவாக இருந்த இந்தியாவுடனான இலங்கையின் வர்த்தகப் பற்றுக்குறை 1984 அதியுச்ச மட்டமான 250 கோடி 5 லட்சம் ரூபாவாக வீழ்ச்சியடைந்தது.

கடந்த சில தசாப்தங்களாக இவ்விரு நாடுகளுக்குமிடையே நடைபெற்றுவரும் வர்த்தகப் போக்குகளை அவதானிக்கும்போது, ஒப்பீட்டு ரீதியில் சிறிய இலங்கைச் சந்தையில் இந்திய ஏற்றுமதியாளர்கள் அனுகூலமாக இயங்கி வந்துள்ளனர் என்பதனை காண முடிகிறது. இரு நாடுகளுக்குமிடையிலான சட்ட விரோத வியாபாரத்திலும் இலங்கை அதிகம் நட்டமடைகிறது என்பதனை பதிவுகள் வெளிக்காட்டுகின்றன. இலங்கைக்கு கடந்த மூன்றாண்டு காலத்தில் இவ்விதம் ஏற்பட்டிருக்கும் சராசரி நட்டம் வருடாந்தம் 5 கோடி ரூபாவாகும்.

முதலீடுகளைப் பொறுத்தவரையிலும் கூட, இந்தியா போன்ற பாரிய மூலதன இருப்பையும், முன்னேறிய தொழில் நுட்பத்தையும், முதலீட்டு ஆற்றலையும் கொண்ட ஒரு நாட்டிலிருந்து இலங்கை மிகச்சிறிதளவே பெற்றுள்ளது. உதாரணமாக, தற்போது மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழுப் பிரதேசத்தில் இயங்கிவரும் 93 வெளிநாட்டு முதலீட்டாளர்களில் 5 பேரே இந்தியராக இருக்கின்றனர். இலங்கையின் ஏனைய சில வர்த்தகப் பங்காளர்கள் பொருளாதார ரீதியாக மிக உறுதியான தொடர்புகளை இப்பொழுது ஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றனர்.

(14ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுரை

சி. ஏ. பயிர்கள் இலங்கையின் விவசாயத் துறையின் முக்கியதொரு அம்சமாகும். சி. ஏ. பயிர்களை வாசனைத் திரவியங்கள், பிற சி. ஏ. பயிர்கள் என்று இரு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். சி. ஏ. பயிர்கள் நடப்பட்டுள்ள நிலப்பரப்பில் 56 சதவீதம் வாசனைத் திரவியப் பயிர்களைக் கொண்டதாகும். சி. ஏ. பயிர்களினால் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணியில் 50 சதவீதம் வாசனைத் திரவியங்களினால் கிடைக்கிறது. அத்துடன் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி மனித நாட்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. இலங்கையின் பொருளாதாரத்தில் சி. ஏ. பயிர்கள் ஒரு முக்கிய இடம் வகிக்கும் என்பதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கடற்றொழில் அபிவிருத்தி

## 200 மைல் தூரத்திற்குத் தனிப் பொருளாதார வலயம்

லெஸ்லி ஜோசப்

பின்னணி

கடல் வழமைச் சட்டம் ஒவ்வொரு கடலோர நாட்டுக்கும் 200 கடல் - மைல் தூரத்துக்குத் தனிப்பொருளாதார வலயமொன்றை அனுமதிக்கின்றது. (கடல் மைல் என்பது பிரிட்டிஷ் வழக்கத்தில் 6082.66 அடிகளாகும்.) இவ்வலயத்துக்குள்ளே, பிறவற்றுக்கிடையே, மீன் வளங்கள் உட்பட உயிர் வளங்களைத் தேடிப் பார்க்கவும், பயன்படுத்தவும் ஆதிபத்திய உரிமைகள் ஒவ்வொரு கடலோர நாட்டுக்கும் உண்டு. எல்லாக் கடலோர நாடுகளினதும் தனிப் பொருளாதார வலயங்கள் மகா சமுத்திரங்களில் 35 சதவிகிதத்தை மட்டுமே அடக்குகின்ற போதிலும், தற்போது மகா சமுத்திரங்களிலிருந்து எடுத்து உபயோகிக்கப்படும் ஜீவ வளங்களில் 99 சதவிகிதம் இந்தப் பரப்பிலிருந்தே வருகின்றன. எனவே, 200 மைல் தூர தனிப் பொருளாதார வலயங்களும் புதிய கடல்சார் எல்லைகளும் உலகளாவிய கடற்றொழில் அரங்கில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துமென்பது திண்ணம்.

ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் இந்த வளங்களிலிருந்து கிடைக்கும் மீன் வளங்களும் செல்வமும் வெவ்வேறு நாடுகளிடையே மறு பகிர்வு செய்யப்படுவதாயிருக்கும். புதிய கடல் சார் எல்லைகளின் விளைவாக, சிலநாடுகள் தங்களுடைய பாரம்பரிய மீன்பிடித் தலங்களையும் வளங்களையும் அணுகும் வாய்ப்பை இழந்துவிட்டன. அதேவேளை மற்ற நாடுகள் புதிய வளங்களைப் பெற்றன. இலங்கையின் நஷ்டங்களுக்குப் பிரதான காரணம் இந்தியாவுடன் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதாகும். இதனுல் கடலடியில் இழுவலைகளை உபயோகிப்பதற்கு ஏற்றனவாய்க்கரைக்கு அப்பாலுள்ள மீன்பிடிப் பரப்புகள் மீது அதிகளவு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இக் கட்டுப்பாடுகளில் கீழ்க்கண்டவையும் அடங்கும்:

அ. வாட்ஜ் கரையிலுள்ள மீன் பிடிக்கும் இடம் முற்ருக இழக்கப்பட்டது.

ஆ. பெட்ரோ (பருத்தித்துறை) கரையிலுள்ள மீன் பிடிக்கும் தலத்தின் வடபகுதி இழக்கப்பட்டது.

இ. பாக்குக் குடா/மன்னர் வளைகுடாவில் மீன்பிடிக்கும் இடத்தின் ஒரு பாகம் இழக்கப்பட்டது.

200 மைல் தூர தனிப் பொருளாதார வலயம் சமுத்திரத்தில் 90,000 சதுர மைலுக்கு மேற்பட்ட பரப்பின் மீதும் அங்குள்ள வளங்கள் மீதும் இலங்கைக்கு அதிகார உரிமையை அளிக்கின்றது. அதே சமயத்தில், மேற் குறிப்பிடப்பட்டவாறு, கரைக்கு அப்பால் பாரம்பரியமாக இருந்துவந்த மீன் பிடிக்கும் இடங்களில் சில குறைந்து விட்டன.

கடல் மீன்பிடி - அன்றும் இன்றும்

இலங்கைக் கடல் சார் மீன் பிடித் தொழில் கீழ்க்கண்ட மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: மீன் வளம் தேடிப் பார்க்கப்படும் கடற் பரப்பை அடிப்படையாகக் கொண்டு இது செய்யப்பட்டுள்ளது.

அ. கரையோர மீன்பிடித் தொழில்: கரையிலிருந்து இருபத்தைந்து மைல் தூரம் வரை மீன்பிடித் தொழில் நடைபெறுகிறது. அதாவது, கண்டத் திட்டிலும் அதற்குச் சற்று அப்பாலும் மீன் பிடிக்கும் நடவடிக்கைகள் நிகழ்கின்றன. தற்போதுள்ள கடல் சார் மீன்பிடித் தொழில் முற்ருகக் கரையோரத்திலேயே நடைபெற்று வருகின்றது; சிறிய வள்ளங்களில் சென்று மீன் பிடிப்பதுடன் நின்றுவிடுகிறது. கடல் சார் மீன் உற்பத்தியில் சுமார் 90 சதவிகிதம் கரையோர மீன் பிடித்தலிலிருந்தே கிடைக்கின்றது. 1978ம் ஆண்டில் கரையோர மீன் பிடித்தலில் 32 அடிக்குக் குறைவான 23,000 வள்ளங்கள் ஈடுபட்டன. இவற்றில் 30 சதவிகிதமானவை மட்டுமே இயந்திரவள்ளங்கள்.

ஆ. கரைக்கு அப்பால் மீன் பிடித்தல்: கரையிலிருந்து 25 மைல் தூரத்திலிருந்து 100 மைல் தூரம் வரையுள்ள மீன்வளங்களைப் பயன்படுத்தல்.

இ. ஆழ்கடல் மீன் பிடித்தல்: கரையிலிருந்து 100 மைல் தூரத்துக்கு அப்பால் நடைபெறும் மீன்பிடித்தல்.

கடந்த காலத்திலே இலங்கைக் கப்பல்கள் கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன்பிடித்தல் வெகு குறைவாகவே இருந்து வந்துள்ளது. இந்த வரையறுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் கடலடியில் இழு வலைகளை உபயோகிப்பதாக இருந்து வந்துள்ளது. இலங்கையைச் சுற்றியுள்ள கரையோர நீரோட்டங்களைப் பற்றிய ஆய்வொன்றுக்குப்பின் இருபதுகளின் முற்பகுதியில் (1920 - 1923) வாட்ஜ் கரையும் பெட்ரோ கரையும் கண்டுபிடிக்கப்பட்டன. குடியேற்ற நாட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் கடலடியில் இழுவலைகளை உபயோகிக்கும் முறையை அபிவிருத்தி செய்வதற்கு அதிக முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தனர். ஏனென்ருல் அது அவர்களுக்குத் தெரிந்திருந்த ஒரு முறையாக இருந்தது. இதற்கு இன்னெரு காரணம், இரண்டாவது உலக மகாயுத்தத்துக்கு முன்பு கடலடியில் இழு வலைகளை உபயோகிக்கும் முறை ஏறக்குறைய ஒவ்வொரு மீன்பிடி நாட்டினதும் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றிருந்தது தான். மீனுணவு கொள்ளும் மக்களும் இழுவலை மீனையே பெரிதும் விரும்பினர். ஏனென்ருல், கடற்கரையிலிருந்து பெரிய வலை வீசிப் பிடிக்கப்படும் மற்ருெரு வகை மீன் மட்டுமே கிடைக்கக் கூடியதாயிருந்தது.

கடந்த காலத்திலே இலங்கையில் கரைக்கு அப்பாலும் ஆழ் கடலிலும் நடைபெற்ற மீன் பிடித்தலில் இன்னெரு குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன்பிடிக்கும் நடவடிக்கைகளைப் பிரதானமாக அரசாங்கத் துறையே கைக்கொள்ள வேண்டுமென்ற அனுமானமாகும். கடற்ருெழில் திணைக்களம், இலங்கைக் கடற்ருெழில் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் வாயிலாக இந்த மீன்பிடித்தலில் அரசாங்கம் அதிக அளவில் பங்கு பற்றியதனுலேயே இவ்வாறு அநுமானிக்கப்பட்டது. 1964ம் ஆண்டில் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட போது, ஆழ்கடலிலும் கரைக்கு அப்பாலும் மீன்பிடிக்கும் தொழில் அரசாங்கத் துறையின் ஏகபோக உரிமையாகக் கருதப்படலாயிற்று. கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தவரை, கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன்பிடிக்கும் கப்பல்களுக்கு உதவுவதற்காக உள்ளமைப்புகளையும் துறைமுக வசதிகளையும் அபிவிருத்தி செய்வதில் கணிசமான முதலீடுகளைச் செய்தது. கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன்பிடிக்கும் வேலையில் அரசாங்கம் அக்கறை கொள்ளவேண்டுமேயன்றித் தனியார்துறை அல்லவென்று அநுமானிக்கப்பட்டமை, கரைக்கு அப்பாலும் ஆழ் கடலிலும் மீன் பிடிப்பதில் தனியார் துறை ஈடுபடத் தவறியதற்குரிய காரணங்களில் ஒன்ருகும். வங்கி வசதிகளின்மை, நிதி வசதிகளில்லாமை, தொழில் நுட்பப் பிரச்சினை, முகாமைப் பிரச்சினை, முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்புகளின்மை, 1960 களின் முற்பகுதியிலிருந்தே அமுலிலிருந்து வந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஆகியனவும் கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன்பிடிக்கும் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதினின்றும் தனியார் துறைக்கும் ஊக்கத்தைக் குறைத்து விட்டன.

சமீப கடந்த காலத்திலே (அதாவது 1960ம் ஆண்டுக்கும் 1970ம் ஆண்டுக்கும் இடைப்பட்டகாலம்) கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன்பிடிக்கும் நடவடிக்கைகள் ஜப்பானியக் கம்பெனியொன்றின ஒத்துழைப்புடன் ஒரு தனியார் கம்பெனி உபயோகித்த நான்கு நீண்ட (கெளவல்ல) மீன்பிடிக்கும் முறைக் கப்பல்கள், தனியார் கம்பெனியொன்று நடத்திய உறைகருவியுடன் கூடிய ஒரு இழுவைக் கப்பல், இலங்கைக் கடற்ருெழில் கூட்டுத்தாபனம் நடத்திய இரு நீண்டமுறைக் கப்பல்கள், வாட்ஜ் கரைப்பகுதியில் இழுவலை உபயோகித்து மீன் பிடித்தல் ஆகியவற்றுடன் வரையறுக்கப்பட்டன.

வாட்ஜ் கரைப்பகுதியில் இழுவை வலை மூலமாக மீன்பிடிக்கும் இடம் இந்தியாவின் தென் கோடியில் அமைந்துள்ளது. 3,000 சதுரமைல் பரப்புள்ள இவ்விடம் கொழும்பிலிருந்து ஏறக்குறைய 115 மைல் தூரத்துக்கு அப்பாலுள்ளது. வாட்ஜ் கரையில் இலங்கைக் கப்பல்கள் இழுவலை மூலமாக வர்த்தகரீதியில் மீன்பிடிக்கும் நடவடிக்கைகள் 1928ம் ஆண்டில் ஆரம்பமாயின. 1920 களின் பிற்பகுதியிலிருந்து தனியார் கம்பெனிகளும் இலங்கைக் கடற்ருெழில் கூட்டுத்தாபனம், இலங்கைக் கடற்ருெழில் திணைக்களம் ஆகியவற்றின் மூலம் அரசாங்கமும் வாட்ஜ் கரைப் பகுதியில் மீன்பிடித்து வந்துள்ளன. 1976ம் ஆண்டில் வாட்ஜ் கரையை அணுகும் வாய்ப்பை இழந்தபோது, கூட்டுத்தாபனம் பின் பகுதியில் இழு வலைகளைக் கொண்ட மொத்தம் 250 தொன் நிறையுள்ள ஆறு இழுவைக் கப்பல்களைக் கொண்டிருந்தது. இந்த இழுவைக்கப்பல்கள் ஆண்டொன்றுக்குச் சராசரியாகப் பன்னிரண்டு பயணங்களை மேற் கொண்டது. ஒவ்வொரு பயணமும் 12 நாட்களிலிருந்து 14 நாட்கள் வரை நீடித்தது. கப்பலொன்றுக்கு நாளொன்றுக்கு மீன்பிடிப்பு ஆரம்ப நாட்களில் 4,000 இருத்தலாக இருந்தது. இது 1960 களின் முற்பகுதியில் ஏறக்குறைய 9,000 இருத்தலுக்கு அதிகரித்தது. அரசாங்கத்துக்குச் சொந்தமான கப்பல்கள் 1950ம் ஆண்டிலிருந்து 1960 களின் முற்பகுதிவரை ஆண்டொன்றுக்குச் சராசரியாக 700 தொன் நல்ல ரக மீன்களைக் கரை சேர்த்தன.

நாட்டின் வடகிழக்குக் கோடிக்கு அப்பால் அமைந்துள்ள பெட்ரோ (பருத்தித்துறை) கரைப்பகுதி 1965ம் ஆண்டுவரை வர்த்தக முறையில் ஆராயப்படவில்லை. இழு வலையை உபயோகிக்கக் கூடிய பரப்பில் ஏறக்குறைய 1,000 சதுரமைல்கள் அடங்கியுள்ளன. பெட்ரோ கரைப்பகுதியில் கடந்த காலத்தில் மீன்பிடிக்கும் நடவடிக்கைகள் பெரும்பாலும் சிதறலாகவும் பரீட்சார்த்தமாகவுமே நடைபெற்றுவந்துள்ளன.

இலங்கையைச் சுற்றியுள்ள கடல் சார் மீன் வளங்கள்

இலங்கையைச் சுற்றியுள்ள கடல்சார் மீன் வளங்கள் மீது இயற்கை வரையறைகள், சற்றே குறுகலாயுள்ள கண்டத்திட்டாலும் எந்தக் குறிப்பிடத்தக்க மேல் நோக்கிய நீர்ப்பாய்ச்சல்களின்மையாலும் விதிக்கப்படுகின்றன. 1,100 மைல் நீளமுள்ள கடற்கரையோரத்தைச் சுற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ள கண்டத்திட்டு மிகக் குறுகலாயுள்ளது; சராசரியாக பதினுலுமைல் அகலமாயுள்ளது; இருபத்தைந்து மைலுக்கு மேல் நீளுவது அபூர்வமாயுள்ளது. பாரிய மீன் வளங்களைத் தாபரிப்பதற்காக ஆழ்கடலிலிருந்து போஷாக்குப் பதார்த்தங்களை மேலே கொண்டுவந்து, மேற்பரப்பு நீரைச் செழுமைப்படுத்த எந்தக் குறிப்பிடத்தக்க மேல் நோக்கிய நீர்ப்பாய்ச்சலகளும் கூட இல்லை.

கண்டத் திட்டு குறுகலாயிருப்பதால், கடலடியிலுள்ள மீன் வளங்கள் மிகப் பெருமளவில் இருக்க முடியாது. மட்டிருல்களையும் கூனியிருல் (வெள்ளை இருல்) களையும் வர்த்தக ரீதியில் முக்கியமான ஒரு சில மீனினங்களையும் இழுவலைகளில் பிடிக்கும் நடவடிக்கைகளுக்கு ஏற்ற சில நீர்ப்பரப்புகள் கரைக்கு அப்பால் இருக்கின்றன. 1972ம் ஆண்டில் ''ஒப்டிமிஸ்ட்'' என்னும் ஒரு சோவியத் கப்பலுடன் கூட்டு ஆய்வொன்று நடத்தப்பட்டபோது, இப்பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. எமது பிரதேசக் கடல்களுக்கு வெளியே இலங்கைக்கு அருகிலிருக்கும் 100 மைல் வலயத்தில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. கடலடியில் இழுவலைகளை உபயோகித்து மீன் வளங்கள் ஆராயப்பட்டன. கண்டத் திட்டின் பெரும்பகுதி எமது பிரதேசக் கடலுக்குள் இருப்பதால், வாட்ஜ் கரை, மன்னர்வளைகுடா, நாட்டின் தென்பகுதி போன்ற வரையறுக்கப்பட்ட பரப்புகளில் மட்டுமே இழுவலைகளை உபயோகிப்பது சாத்தியமாயிருந்தது.

ஆழ் கடலில் இழுவை வலைகளை உபயோகித்து இப்பரீட்சைகள் நடத்தப்பட்டபோது கண்டு பிடிக்கப்பட்ட மீனினங்களில் பெரும்பாலானவை மீனுரமாகவும் விலங்குக்ளுக்கான மீனுணவாகவும் தயாரிப்பதற்கு மட்டுமே உகந்தவையாயிருந்தன. ஆழ்கடலிலுள்ள மட்டிருல்களும் கூனியிருல்களும் (வெள்ளை இருல்) வர்த்தகரீதியான பிடிப்புக்கு உதவுமாவென்பது மேலும் பரிசீலனைக்குள்ளாவது அவசியமாகும். மேலும், சோவியத் கப்பல் ''ஒப்டிமிஸ்ட்'' நடத்திய ஆய்வின்போது இனங்காணப்பட்ட சில மீன்வளங்கள் இப்பொழுது இந்திய நீர்ப் பரப்புகளுக்குள் கிடக்கின்றன.

*1978, 1979, 1980* ஆகிய ஆண்டுகளில் இலங்கையின் கரையோர நீர்ப்பரப்புகளைச் சுற்றியுள்ள மீன் வளங்களைப் பற்றிய சப்தவியல் ஆய்வுகளை நடத்திய ''டாக்டர் பிறிட்ஜோப் நான்ஸன்ஸ்'' என்னும் நோர்வே ஆராய்ச்சிக் கப்பல் கரையோர மீன் வளங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு 3,50,000 தொன் மீன்களைப் பெறக் கூடிய வாய்ப்பு உள்ளதென மதிப்பிட்டது. இதில் 80,000 தொன் மீன்கள் கடலடியில் உள்ள மீன் வளங்களிலிருந்து கிடைக்குமென மதிப்பிடப்பட்டது. கடலடி மீன் வளங்களிலிருந்து தற்போது நடக்கும் உற்பத்தி ஏறக்குறைய 35,000 தொன்களாகும். பெரும்பாலும் கண்டத் திட்டுக்குள்ளே சிறு அளவில் இழுவலை மூலமாக மீன் பிடிப்பதையும் கடலடியில் நீளணியிலே மீன் பிடிப்பதையும் தவிர மற்றப்படி மீன் பிடித்தலை விஸ்தரிப்பதற்கு, மொத்தத்தில் கடலடி மீன்பிடிப்பு தற்போது கணிசமான வாய்ப்பு அளிப்பதாயில்லை.

தனிப் பொருளாதார வலயத்துள்ளிருக்கும் பிரதான மீன் வளங்கள், தற்போது கரைக்குள் நடைபெறும் மீன்பிடித் தொழிலுக்கு ஆதரவாக இருக்கும் விரிகடல் மீனினங்கள் தான். விரிகடல் மீன் வளங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: சிறிய விரிகடல் மீன், நடுத்தரப் பரிமாணமுள்ள விரிகடல் மீன், பெரிய விரிகடல் மீன் ஆகியன. கடற்கரையிலிருந்து ஏறக்குறைய 10 மைல் தூரம் வரையுள்ள கரைப்பகுதி நீர்ப்பரப்பிலிருந்து பிடித்து உபயோகிக்கப்படும் சிறு மீன்களில் சாடின், ஹெரிங், அங் கோவிக்ஸ் முதலியன அடங்கும். மக்கரல், பராகுடா, ஸ்பானிய மக்கரல், பிரிகேட் மக்கரல் முதலியன நடுத்தரப் பரிமாணமுள்ள விரிகடல் மீன்களில் அடங்கும். சிறிய விரிகடல் மீன்களுடன் ஒப்பிடுகையில், இவை மிக விரிவான அளவில் பரந்துள்ளன. ஸ்பானிய மக்கரல், சூரை மீன் (பலேயா), மக்கரல் கிழவரன் (கௌவல்ல) போன்ற சில மீன்கள் கரைக்கு அப்பாலுள்ள நீர்ப் பரப்பிலும் கூட காணப்படுகின்றன. பெரிய விரிகடல் மீன்களில் மஞ்சள் சிறகுள்ள கிழவரன், பெரிய கண்களுள்ள கிழவரன், நீண்ட மூக்குள்ள மீன்கள், சுருக்கள் போன்ற இனங்கள் அடங்கும். இந்த மீனினங்கள் குஞ்சுகளாயிருக்கும்போது கரைப்பகுதியிலுள்ள நீர்ப்பரப்புகளில் காணப்படுகின்றன. ஆனுல், பெரிதாகி, வயதாக ஆக ஆழமான நீர்ப்பரப்புகளுக்குள் போய் விடுகின்றன. விரிகடல் மீனினங்களில் இப்போது பிடிக்கப்படும் மீன்கள் பிரதானமாக, கரைப் பகுதி நீர்ப்பரப்புகளிலும் வரையறுத்த அளவுக்கு, கரைக்கு அப்பாலுள்ள நீர்ப்பரப்புகளின் விளிம்புகளிலுமுள்ள மீன்களேயாகும்.

கரைக்கு அப்பாலுள்ள நீர்ப் பரப்புகளிலும் ஆழ்கடலிலுமுள்ள முக்கிய விரிகடல் மீனினங்கள் அதிக அளவுக்கு இடம் பெயரக் கூடியவையாகும்; இவை இலங்கையின் 200 மைல் தனிப் பொருளாதார வலயத்துக்குள்ளேயே இருக்கக் கூடியவையல்ல. இலங்கைக்கு அப்பாலும் மாலைதீவுகளிலும் இந்தியாவிலும் பிடிக்கப்படும் இந்த மீனினங்களும் கிழவரன் மீன்கள் நீண்ட மூக்குள்ள மீன்கள் முதலியன பொது இனத்தைச் சேர்ந்தவையாயிருக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் பிடித்துப் பயன்படுத்துவதற்கு இந்த மீன்வளங்கள் இது வரை ஒரு குறித்த காலத்தில் கிடைக்கக் கூடியனவாயிருந்தன. கரைக்கு அப்பாலும் இலங்கையைச் சுற்றியுள்ள ஆழ்கடலிலும் உள்ள மீன் வளங்களில் வருடாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் கிடைக்கக் கூடிய தொகை 30,000 தொன் என மதிப்பிடப் படுகிறது.

**தனிப்பொருளாதார வலயத்தில் மீன்பிடித் தொழில்மீது மூதலீடு செய்வதற்கான் உபாயம்**

1979ம் ஆண்டில் ஆரம்பிக் கப்பட்ட ஐந்து வருட (1979ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரை) கடற்றெழில் அபிவிருத் தித் திட்டம், புதிய கடல் சட் டத்தின் பயனாக இலங்கை பெற் றுள்ள புதிய வளங்களை அங்கீக ரிக்கிறது. அது ஒரு சவிஸ்தார மான திட்டம். மீன் உற்பத் தியை அதிகரிப்பதும், அதன் மூலம் தலாநபர் மீன் நுகர்வை அதிகரிப்பதும், மீனவர்களின் வருவாயையும் வாழ்க்கைத்தரங் களையும் உயர்த்துவதும், வேலை வாய்ப்புகளை ஆக்கக்கூடிய அள வுக்கு அதிகரிப்பதும் அதன் குறிக் கோள்களாகும்.

அபிவிருத்தித் திட்டத்தின் முதலாவது பாய்ச்சல் இப்போது ள்ள கரையோர மீன்பிடிப்பைச் சீர்திருத்தி விரிவாக்கும் திசையில் இருக்கும். கரையோர மீன்பிடி ப்பு கரை சேர்க்கப்படும் மொத்த மீன்களில் எண்பது சதவிகிதம் வரையான அளவுக்கு உதவுகின் றது. இதுவே வேலை வாய்ப்புக ளினதும் மீன்பிடிக் கைத்தொழி லில் கிடைக்கும் வருமானத்தின தும் முக்கிய மூலமாக இருக்கி றது. கரையோர மீன்பிடிப்பில் தற்போது உபயோகிக்கப்படும் முறைகளையும் சாதனங்களையும் மிதமான செலவில் சுலபமாகத் தரமுயர்த்துவதற்கு இடமிருக் கிறது. இப்படிச் செய்தால், பொருளாதார, சமூகப்பயன் அதிக அளவுக்கு உயரும். மீன் பிடிக்கும் முயற்சிகள் தவறான முறையில் பகிர்ந்து கொள்ளப் பட்டுள்ளமை, சில பகுதிகளில் மிதமிஞ்சிய வள்ளங்கள் குவிந் திருப்பதும் மற்றப்பகுதிகளில் ஒரு சில வள்ளங்களே தொழிற் படுவதுமான நிலை, விரிகடல் மீன் கள் சுயலாபத்துக்காகக் கனத்த அளவுக்குத் தேடிப்பிடித்துப் பயன்படுத்தப்படுதல், அதேசம யத்தில் கடலடியிலுள்ள மீனினங் கள் போதுமான அளவுக்குத் தேடிப்பிடித்துப் பயன்படுத்தப் படாமை, இப்போதிருந்துவரும் மீன்பிடி வள்ளங்கள் போதிய அளவுக்குப் பயன்படுத்தப் படுத்தாதிருக்கும் நிலை, பிடித்த மீன்களைப் பாதுகாப்பாகக் கரை சேர்க்க, சில பகுதிகளில் வசதிக ளின்மை, எரி பொருள் மீதும் தொழிற்பாடுகள் மீதும் அதிக பணச் செலவு ஆகியன கரை யோர மீன் வளங்கள் பூரணமா கப் பயன்படுத்தப்படாதிருப் பதற்கான காரணங்களில் சிலவா கும்.

ஐந்து வருட கடற்றெழில் அபிவிருத்தித் திட்டத்தின் அடிப் படையில், ஏற்கெனவே வெற்றி கரமாகச் செயலாற்றியுள்ள ஏராளமான வள்ளங்களைச் சேர்ப் பதன் மூலம் இப்போதிருந்து வரும் மீன்பிடி வள்ளங்களின் தொகையைக் கடற்றெழில் அமைச்சு விரிவாக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. 28 – 32 அடிவகையைச் சேர்ந்த ஓராயி ரத்து தொள்ளாயிரத்தைம்பது வள்ளங்கள் 1979ம் ஆண்டுக் கும் 1983ம் ஆண்டுக்கும் இடைப் பட்ட காலத்தில் புகுத்தப்படு மென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றில் ஆயிரம் வள்ளங் கள் இப்போதிருந்துவரும் வள் ளங்களுடன் புதிதாகச் சேர்க்கப் படுவனவாகும். எஞ்சியவை பழைய வள்ளங்களுக்குப்பதிலா கப் புகுத்தப்படுவன. இவற்று டன் மேலும் 17 – 24 அடிவகை யைச் சேர்ந்த 2,400 நார்க்கண் ணாடி வள்ளங்களும் இக்காலத் தில் புகுத்தப்படும். இப்போதி ருக்கிறபடி கரையோர மீன்பிடி வள்ளங்களில் ஏறக்குறையக் கால் பங்கு மட்டுமே இயந்திர வள்ளங் களாயிருக்கின்றன. வெளிப்பக்க எஞ்சின்களைக் கொண்ட ஏறக் குறைய 3,000 வள்ளங்களை மேலும் சேர்க்க உத்தேசிக்கப்பட் டுள்ளது. இந்த நடவடிக்கைகள் கரையோர மீன்பிடிப்பிலிருந்து 2,00,000 தொன்களுக்கு மேற் பட்ட மீன்களைப் பெறமுடியு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைவாகப் பயன்படுத்தப்பட் டுள்ள மீன்வளங்களை, குறிப்பா கக் கரைக்கு அப்பாலுள்ள நீர்ப் பரப்புகளிலும் ஆழ்கடற் பகுதி களிலுமுள்ள மீன்வளங்களைப் பயன்படுத்தும் முயற்சிகளை விரி வாக்குவதன் அவசியத்தையும் திட்டம் அங்கீகரிக்கின்றது. கரைக்கப்பாலுள்ள நீர்ப்பரப்பு களிலிருந்தும் ஆழ்கடற்பகுதிகளி லிருந்தும் உள்நாட்டில் தற்போது செய்யப்படும் மீன் உற்பத்தி ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 3,000 தொன்களிலிருந்து 5,000 தொன்கள் வரைமட்டுமே உள் ளது. ஒரு சில வள்ளங்கள் மட் டுமே இப்பிரதேசங்களில் மீன் பிடிக்கின்றன. இவ்வள்ளங்களில் பெரும்பாலானவை உற்பத்தித் திறனைக் குறைவாகவே உபயோ கிக்கின்றன. தனிப் பொருளா தார வலயத்திலுள்ள விசால மான பிரதேசங்களில் உள்ள மீன் வளங்களைத் தேடிப் பார்த்துப் பயன்படுத்துவதில் பங்குபற்று வதற்குத் தற்போதிருந்து வரும் மீன்பிடிக் கைத்தொழிலுக்குள்ள ஆற்றல் வரையறுக்கப்பட்டதா கும். இது சம்பந்தமாக இருந்து வரும் முக்கிய குறைகள் என்ன வென்றால், மீன் வளங்களைப்பற் றிய அறிவில்லாமை, தகுந்த வள்ளங்களும் தளவாடங்களும் சாதனங்களும் இன்மை, தொழில் நுட்ப உத்திகளும் பயி ற்சி பெற்ற ஆள்பலமும் இல் லாமை, அத்தியாவசியமான உள்ளமைப்பு வசதிகளின்மை, மூலதனச் செலவுகளும் செயற் பாட்டுச் செலவுகளும் உயர்ந் திருக்கும் நிலை ஆகியனவாகும்.

திட்டத்தில் அடங்கியுள்ள ஒரு முக்கியமான கொள்கை மாற்றம் என்னவென்றால், மீன் பிடி நடவடிக்கைகளில் அரசாங் கம் பங்குபற்றுவதை வரையறு ப்பதெனச் செய்யப்பட்டுள்ள முடிவாகும். கடந்த காலத்தில் போலன்றி, மீன்பிடி நடவடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளில் அரசாங்கம் பங்குபற்றுதல், உள்ளமைப்பு வசதிகளையும் ஸ்தாபனரீதியான ஆதரவும் வழங்குவதுடன் வரையறுக்கப்படவிருக்கிறது. கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதில், எதிர்காலத்திலே தனியார் துறை மிக முக்கிய பங்கெடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன்பிடி நடவடிக்கைகளில் பங்குபற்றத் தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதற்காக, கணிசமான முதலீட்டு ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஊக்குவிப்புகளில், வள்ளங்களையும் எஞ்சின்களையும் வாங்குவதற்குப் பண உதவி வழங்கும் திட்டம், மொத்தத்தொகைத் தேய்மானப்படிகள் (விடுதொகைகள்), அபிவிருத்திச் செலவுகளுக்கான வரிக்கழிவுகள், வரி விடுதலைக் கால சலுகைகள் ஆகியனவும் அடங்கும். சமீப காலங்களில் மீன்பிடித்துறையில் நிதி ஸ்தாபனங்களும் சம்பந்தப்பட்டுள்ளதால் கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன் பிடித்தலில் பங்கு பற்றத் தனியார்துறையும் ஊக்கம் பெற்றுள்ளது.

தனியார் துறை அதிகரித்த அளவில் பங்குபற்றுவதோடு, வெளி நாட்டு உதவி பெறும் பல அபிவிருத்தித் திட்டங்கள் வாயிலாகக் கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன்பிடி நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கும் திட்டம் எதிர்பார்க்கின்றது. வெளி நாட்டு உதவிபெறும் திட்டங்கள் புதிய, பெரிய வள்ளங்களையும் கப்பல்களையும் புகுத்துவதுடன், இலங்கையில் இன்னும் கிடைக்காதிருக்கும் தேர்ச்சி பெற்ற தொழில் நுட்ப உதவியையும் சாதனங்களையும் கூட வழங்கும், இத்திட்டங்கள் வாயிலாக, அரசாங்கம் 34 அடி வகையைச் சேர்ந்த இருநூற்று முப்பது வள்ளங்களையும், 50 அடி வகையைச் சேர்ந்த நான்கு வள்ளங்களையும் கரைக்கு அப்பாலும் ஆழ்கடல் தூரங்களுக்கும் கிழவரன் (கௌவல்ல) மீன்பிடிக்கக் கூடிய ஐந்து ஆழ்கடல் வள்ளங்களையும் புகுத்த எதிர்பார்க்கின்றது. மேலும், குறிப்பாக ஆழ்கடல் பிராந்தியங்களில் மீன் வளங்களைத் தேடிப் பார்த்துப் பயன்படுத்துவதற்காக கூட்டுமுயற்சிகளின் உருவில் வெளிநாட்டு ஒத்துழைப்பும் அனுமதிக்கப்படுவதன் மூலம் ஊக்கமளிக்கப்படும். இதனுல் இலங்கை மீன்களையும் வெளிநாட்டு நாணயத்தையும் பெறுவதன் மூலம் மட்டுமன்றிப் பயிற்சி வசதியும் வேலைவாய்ப்புகளும் மீன் வளங்கள் பற்றிய தரவுகளைப் பெறும் வாய்ப்பும் ஏற்படுவதன் மூலமும் நன்மையடையும்.

வள்ளங்களுக்கான மூலதனச் செலவுகள் அதிகமாயிருப்பதனுலும், உள்நாட்டு அனுபவம் இல்லாதிருப்பதனுலும், வெளி நாட்டு உதவியுடன் மட்டுமே ஆழ்கடல் மீன்பிடித்தலை ஸ்தாபிக்க முடியுமெனக் கடற்றெழிலமைச்சு முடிவு செய்துள்ளது, கூட்டு முயற்சிகள், லைசென்ஸ் வழங்கல், வள்ளங்களை ஒப்பந்தத்தின்பேரில் வேலைக் கமர்த்துதல் போன்ற பல்வேறு வழிகளில் வெளிநாட்டு ஒத்துழைப்பு நிகழ முடியும். லைசென்ஸ்மீது மீன்பிடிப்பில் ஈடுபட வெளி நாட்டு வள்ளங்களை அனுமதிப்பது சம்பந்தமாகக் கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன. லைசென்ஸ்மீது மீன்பிடிப்பில் ஈடுபட்ட வெளிநாட்டு மீன்பிடிக் கம்பெனிகளுடன் துரதிர்ஷ்டவசமான அனுபவங்கள் ஏற்பட்டமை இதற்கு ஓரளவு காரணமாகும். லைசென்ஸ் மீது மீன்பிடிக்கும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வது கடினமாகும். தேர்ச்சிகள், தொழில் நுட்ப உத்திகளின் இடமாற்றம், மீன் வளங்கள் பற்றிய தரவுகளைத் திரட்டுதல், உள்நாட்டில் கிடைக்கக் கூடியதாயுள்ள தேர்ச்சிகளுக்கும் மற்றும் உள்ளீடுகளுக்கும் ஏற்ப மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்தல் போன்ற நீண்டகாலக் குறிக்கோள்களுக்கும் இது ஒரு நல்ல ஏற்பாடல்ல. மீன்பிடிப்பதற்கு லைசென்ஸ் வழங்குதல், கூட்டு முயற்சிகளுக்கு ஏற்பாடு செய்தல் ஆகியன சம்பந்தமாக எச்சரிக்கையாக இருப்பதே கடற்றெழில் அமைச்சின் கொள்கையாக உள்ளது. உள்நாட்டு மீனவர்களும் மீன்பிடித் தொழிலும் மோசமாகப் பாதிக்கப்படாதிருக்கும் நிலையை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம். மேலும், இத்தகைய ஏற்பாடுகள்மீது மீன்பிடிக்கும் வள்ளங்கள் தாங்கள் பிடித்த மீன்களில் ஒரு விகிதத்தை உள்நாட்டுச் சந்தைக்கு வழங்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றன. கூட்டு முயற்சி ஏற்பாடுகளில், பிடிக்கப்படும் மீன்களில் ஒரு பெரும்பகுதி இலங்கையில் விற்கப்படுவதற்குரிய ஏற்பாடு சேர்க்கப்பட்டால், அப்பொழுது அவை அதிக ஆதரவைப்பெறும்; பிடிக்கப்படும் மீன்களில் உள்நாட்டு உரிமைப்பங்கு 51 சதவிகிதமாகவோ அல்லது அதற்கு மேலோ இருப்பது, வெளிநாட்டுப் பங்காளிகள் வெளிநாட்டுச் செலவுகளை ஏற்பது, கரைக்கு அப்பாலும் ஆழ்கடலிலும் மீன் பிடிப்பதில் இலங்கையர்களுக்குப் பயிற்சியளிப்பது ஆகிய ஏற்பாடுகள் ஆதரிக்கப்படும்.

உள்நாட்டுத் தனியார்துறை அதிக அளவில் பங்குபற்றுவதன் வாயிலாகவும் வெளிநாட்டு நிதியளிப்புப்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் மூலமும் திட்ட காலத்தின் முடிவில் கரைக்கு அப்பாலிருந்தும் ஆழ்கடலிலிருந்தும் ஆண்டொன்றுக்கு 32,000 தொன் மீன்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர முடியுமென அரசாங்கம் நம்புகிறது.

கரைக்கு அப்பாலுள்ள நீர்ப் பரப்புகளிலும் ஆழ்கடற் பகுதிகளிலும் விரிகடல் மீனினங்கள் கிடைக்கும் சாத்தியக் கூறுகள் பருவத்துக்குப் பருவம் மாறுமாதலின், மற்றும் மீனினங்களுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்கதாகும். ஆதலால, நல்ல வருடாந்த மீன்பிடிப்பு விகிதங்களைப் பெறுவதற்காக வெவ்வேறு பருவகாலங்களில் வெவ்வேறு முறைகளை உபயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்க வேண்டும். உதாரணமாக, இலங்கையிலே, நகர்வுவலையில் மீன் பிடிப்பதற்குத் தென் மேற்குப் பருவக்காற்று வீசும் காலந்தான் சிறந்த காலமாகும். கோல் – அணி முறையிலும் நெடு அணி முறையிலும் விரிகடல் மீன்பிடிப்பதற்கு இடைப் பருவக்காற்றும் வடகிழக்குப் பருவக்காற்றும் வீசும் காலங்களே சிறந்த காலங்களாகும். கரைக்கு அப்பால் 25 மைல் தூரத்திலிருந்து 60 மைல் தூரம் வரையுள்ள நீர்ப்பரப்புகளிலிருக்கும் மீன் வளங்களை ஆராய்ந்து பயன்படுத்துவதற்குச் சிறந்த வள்ளங்கள் 45 – 60 அடியுள்ள சேர்மான வகை வள்ளங்களாகும் என இனங் காணப்பட்டுள்ளன. இந் நீர்ப்பரப்புகளில் ஆண்டு முழுவதும் கிடைக்கும் சூரை மீன்களையும் மஞ்சள் சிறகுள்ள கிழவரன் மீன்களையும் நகர்வுவலை மூலமும் கோல் – அணி முறையிலும் பிடிப்பதற்கு இவ் வள்ளங்கள் ஏற்றவை. கரைக்கு அப்பாலுள்ள நீர்ப்பரப்புகளில் 45 அடிவகையைச் சேர்ந்த 95 லிருந்து 150 வரையுள்ள வள்ளங்களை உபயோகித்தால் 20,000 தொன் எடையுள்ள மீன்களை (இவை பெரும்பாலும் சூரை மீன்களாகவும் மஞ்சள் சிறகுள்ள கிழவரன் கௌவல்ல – மீன்களாகவுமிருக்கும்)ப் பிடிப்பதற்கு வாய்ப்புண்டு எனமதிப்பிடப்பட்டுள்ளது. இம் முயற்சியில் 900 பேரிலிருந்து 1000 பேர் வரை வேலை வசதி பெறமுடியும்.

சமீப வருடங்களில் கடற்றொழில் அமைச்சு வெளிநாட்டு நிதியுடனான பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதில் வெற்றிபெற்றுள்ளது. புதிய நிதி வளங்களிலிருந்து ஆகக் கூடிய நன்மைகளைச் சாதிப்பதே இதன் நோக்கம்.

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்புச் செய்த தென் மேற்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்தித் திட்டம் 1979 ம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. இதற்கு 31 இலட்சம் அமெரிக்க டொலர்கள் செலவாகின. இது சமீப காலங்களில், வெளிநாட்டு நிதிஉதவி பெற்ற மீன்பிடி அபிவிருத்தித் திட்டங்களில் இலங்கை மேற்கொண்ட முதல் முக்கிய திட்டமாகும். இப்போதிருந்துவரும் 3½ தொன் நிறை கொண்ட வகையைச் சேர்ந்த 200 வள்ளங்களையும் ஒரு புதிய வகை (38 அடிவகை) யைச் சேர்ந்த 30 வள்ளங்களைப் புகுத்துவதன் மூலம் கரையோரத்திலும் கரைக்கு அப்பாலுமுள்ள மீன் வளங்களை ஆராய்ந்து பயன்படுத்தும் நடவடிக்கைகளை அதிகரிக்கும் முறையில் இத்திட்டம் அமைக்கப்பட்டது. வள்ளங்களைப் பழுது பார்த்தல், பராமரித்தல், மீன்களைச் சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்கான வசதிகள் திட்ட உள்ளீடுகளை நிறைவாக்கின.

வடமேற்குக் கரையோர மீன்பிடித் திட்டமானது இப்போது நடைபெற்று வரும் ஒரு நடவடிக்கை. அபுதாபி நிதியம் நிதியளிப்புச் செய்யும் இத்திட்டத்துக்கு 45 இலட்சம் அமெரிக்கடொலர்கள் செலவாகும். இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், 34 அடி வகையைச் சேர்ந்த தொண்ணூறு வள்ளங்களையும் 50 அடிவகையைச் சேர்ந்த இரு வள்ளங்களையும் (சேர்மான வகை வள்ளங்கள்) புகுத்துவதன் மூலம் மன்னார் வளைகுடாப் பிரதேசத்திலே கரைக்கு அப்பாலுள்ள மீன் வளங்களை ஆராய்ந்து பயன்படுத்துவதற்கு ஊக்கமூட்டுவதும் விருத்திசெய்வதுமாகும். 34 அடி வகையைச் சேர்ந்த பத்து வள்ளங்கள் ஏற்கெனவே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் முப்பத்தாறு வள்ளங்கள் இப்பொழுது கட்டப்பட்டுவருகின்றன. திட்டம் நடைபெற்று வரும் இடத்தில் கரைக்கு அப்பாலான வசதிகளை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிழக்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்தித் திட்டம் இப்போது நடைபெற்று வரும் இன்னொரு நடவடிக்கையாகும். நெதர்லாந்து அரசாங்கம் இதற்கு நிதியளிப்புச் செய்துவருகிறது. இத்திட்டத்துக்கு 25 இலட்சம் அமெரிக்க டொலர்கள் செலவாகும். கடற்கரை வசதிகளையும் சந்தைப்படுத்தும் வசதிகளையும் ஏற்படுத்துவதன் மூலமும் அத்துடன் கிழக்குக் கரையோர மீன்பிடித்தல் நடவடிக்கைகளுக்கென்றே விசேஷமாக வடிவமைக்கப்பட்ட புது வகையான 100 வள்ளங்களைப் புகுத்துவதன் மூலமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்ய அது முயல்கின்றது.

ஒரு கோடி 45 இலட்சம் அமெரிக்க டொலர் செலவாகக் கூடிய மேற்குக் கரையோர மீன்பிடித் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்புச் செய்துவருகிறது. அதன் முக்கிய குறிக்கோள்கள், இப்போது செயற்படுத்தப்பட்டுவரும் வள்ளங்களின் வினைத்திறமையை அதிகரிப்பதும், கரைக்கு அப்பாலுள்ள மீன் வளங்களைத் தேடிக் கண்டு பயன்படுத்தும் நடவடிக்கைகளை அதிகரிப்பதும், மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளை அபிவிருத்தி செய்வதுமாகும்: 28 அடி வகையான 400 வள்ளங்களையும், 34 அடி வகையான 50 வள்ளங்களையும் புகுத்துதல், இப்போதிருந்துவரும் இயந்திர வள்ளங்களுக்கு 1,500 பாய்களை அமைத்தல், குளிர்ச் சேமிப்பு வசதிகள், கற்பிட்டிக் கருகில் சரக்கிறக்கும் செய்கரையொன்றை நிர்மாணித்தல் (இது ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது), தொழில் நுட்ப நிபுணத்துவ அறிவைப் புகுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை எடுக்கத் திட்டம் உத்தேசித்துள்ளது.

200 கடல் – மைல் தூரத்துக்குத் தனிப் பொருளாதார வலயம் அமைந்திருப்பதால், இலங்கையிலே மீன்பிடிக் கைத்தொழில் துரிதமாக விரிவடைவதற்கு உள்ளார்ந்த சக்தியுண்டு. புதிய வேலைத்திட்டங்களை இனங்காண்பதற்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

# பொருளியல் நோக்கு

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஸனல் கிரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org